Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

11-17.7.1993

ரூபா 8/50

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 7

## காவலர்களை பாபா ஏன் காப்பாற்றவில்லை?





## பிரபாகரனுடன் பேச விரும்புகிறார் பிரதமர் ரணில்

சிறப்பான சிறுகதைகள்

கண்ணே மதுமிதா புதுமைத் தொடர்

வாரம் முழுதும் உங்கள் ராசிபலன்

லேடீஸ் ஸ்பெசல்

ரஜனி ஏன் தாடி வளர்க்கிறார்?

சிறைவாழும் சிங்கம் டைசன்



உலகரவுண்டப்



பெண்களைக் கவரும் டென்னிஸ்

ஸ்போர்ட்ஸ்

என்றும் இளமைக்கு என்ன வழி?

பாப்பா முரசு



# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

எழுதுங்கள் என்று
முதல் முரசில் சொல்லிவிட்டு
அடுத்த முரசுக்கு
ஆயத்தம் செய்யுமுன்னரே-உங்கள்
அஞ்சலட்டைகள் வந்து
நலம் விசாரித்து
களம் எங்கே என்று
கணை தொடுக்கின்றன.
கண் சிமிட்டுகின்றன.
வேகம்-அத்தனை வேகம்.
சிங்கங்கள் நீங்கள்.
தீனி போட பக்கங்கள் போதாது
தவிக்கிறோம் நாங்கள்.

பிரசவ வேதனை
தாய்க்குத்தான் தெரியும்.
ஒரு எழுத்தாளனின் தவிப்பு
பிரசவித்தது பிரசுரமாக வேண்டும்
என்கின்ற துடிப்பு
இன்னொரு எழுத்தாளனுக்குத்தான் தெரியும்.

நியாயமான உங்கள் ஆசைகளை
நிறைவேற்றி வைக்க என்ன செய்யலாம்?
யோசித்தோம்- விளைவு-
விரைவில் ஒரு
இன்ப அதிர்ச்சி தரும் திட்டம்
தயாராகிவிட்டது.

எங்களுக்கு சொல்லக்கூடாதா
என்று கேட்பீர்கள்.
இப்போதே தரக் கூடாதா
என்றும் கேட்பீர்கள்.
இப்போதைக்கு அது ரகசியம்.

பிரசுரமாகவில்லையே என்கின்ற
கவலைகளை ஒரு புறம்
மூட்டை கட்டி வையுங்கள்.
எழுதுங்கள்.
விரைவில் வியப்பீர்கள்.

■

மற்றொரு சந்தோசமான செய்தி.
முரசில்
பிரபல தமிழக எழுத்தாளர் ஒருவர்
தொடர்ந்து எழுதவுள்ளார்.
உடனே நம்மூர் எழுத்தாளர்களுக்கு

முரசு புறக்கணிப்பா என்று
இலக்கிய நண்பர்கள்
வழக்கம் போல் கோபப்படுவீர்கள்.

தமிழக இதழ்களில்
நம்மூர் எழுத்தாளர்களும் எழுதுகிறார்கள்.
தமிழ் நாட்டின் திரையுலகில்
அங்கே பிறந்த பாரதிராஜாவைப் போல்
இங்கே பிறந்த பாலுமகேந்திராவுக்கும்
உயர்ந்த இடம் கொடுத்துள்ளார்கள்.
நியாயப்படுத்தலா என்று கேட்பீர்கள்.
நிச்சயமாக இல்லை.
நம்மூர் எழுத்தாளர்களுக்கும்
இடம் கொடுப்போம்.
மாறுபட்ட சுவைக்காக
அயலவருக்கும் இடம் தருவோம்.

■

கண்ணே மதுமிதா தொடருக்கு
அதிக இடம் கொடுக்கச் சொல்லி
அநேகமானோர் அடம்பிடித்துள்ளீர்கள்.
இம்முறை கொடுக்கப்பட்டுள்ளது.
அவ்வாறு மற்றும் பல
உங்கள் கோரிக்கைகள்
கவனிக்கப்படுகின்றன.
உங்கள் அன்புக்கு
கட்டுப்படுவதும்
ஒரு சுகம் தான்.
வேறென்ன நலம்தானே.
இதை ஆரம்பத்திலேயே
கேட்டிருக்க வேண்டுமாக்கும்?
நல்லது- மறுமடலில்
மீண்டும்.

-அன்புடன்-
ஆசிரியர்.

தினமுரசு
போன்: 820265

## கவிதைப் போட்டி இல-4

## களம் தேடி வந்தவற்றுள்- வெற்றி கண்ட கவிதைகள்-

### பரிசுபெறும் கவிதை-1

மனித வேட்டையில்
உயிருடன்
பிடிபட்ட
ஒன்றே ஒன்று.

பொ.பிரகாஷ்
கம்மடுவ.


### பரிசுபெறும் கவிதை-2

மிஞ்சப் போவது?

குழந்தை
சிப்பாயைப்
பார்த்து சொன்னது-
இன்னும்
சில காலங்கள்
கழிந்தால்
இந்த பூமியில்
உன் தோளில் கிடப்பது
மட்டுமே-
மிஞ்சும்.

நகுமான்-ஏ-ஜெமீல்
மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல-7



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். மனதில் கருத்தரிக்கும் எண்ணங்களை மடலில் பிரசவித்து அனுப்புங்கள். சுருக்கமாக சுவையாக. என்ன சரிதானே?
சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு.

## வியக்க வைத்தவற்றுள்- இங்கே விதைக்கப்படுபவை

இவனுக்குள்..

என்ன அப்படிப் பார்க்கிறாய்..!?
"உன்னை
தோளில் சுமக்கத் தெரியாது
தூரவைத்து ரசிக்கும்
இந்த
'ஆயுத மனிதனுள்'ளும்
அன்பிருக்கிறது"

எம்.கே.எம். ஷகீப்
கொழும்பு-04

மனித நேயத்திற்கு
'முன்னால்'
ஆயுதம்
'பின்னிற்கே'.

'கிக்கோ'
மட்டக்களப்பு.

மழலை உள்ளம்

உந்தன் உள்ளம்போல்
இந்த-
உலகமும் இருந்திருந்தால்
துப்பாக்கியின் தேவை
இல்லாமல் இருந்திருக்கும்.

செல்வி.வீ.சுகந்தி
கந்தப்பளை.

மறு பிறப்பு

மரணித்து விட்டதாக
எண்ணிய
மனித நேயம் இங்கே
மறுபிறப் பெடுத்துள்ளதோ..?

ஆர். ரமேஷ்
பதுளை.

முரண்பாடு

உன் தோளிலோ
மரணம்...
கையிலோ
ஜனனம்...

கல்லாறு
எஸ்.ரீ. சதீஷ்.

என்னை விடு

இறக்கிவிடு
என்னை
உனக்குத்தான்
தூக்கிவிளையாட
தோளில்
துப்பாக்கி
இருக்கிறதே!

ஏ.ஜீ.சேகர்
அக்கரைப்பற்று.

ஏன் சோகம்

போராடப் போகும்
என் முகத்தில்,
புன்னகை தவழ்கிறது.
வழியனுப்பும் உன் முகத்தில்,
ஏன் சோகம் வடிகிறது?

எஸ்.தவஜினி
கண்டி.



ஆண் ஆதிக்கமே ஆட்சி...

மின்ஹா இம்டியாஸ்
கொழும்பு-9.

அரசியல் அலசல்-எக்ஸ்ரே ரிப்போட் தினமுரசு உள்ளதையே சொல்லும். ஆயுத அராஜகம் கண்டு. அஞ்சி பேசாமல் இருக்காது என்பதைக் காட்டிவிட்டது. வித்தியாசமான விமர்சனங்கள். தினமுரசை வேறு வழிகளில் பின்பற்ற நினைப்போர் இதையும் பின்பற்றினால் என்ன?

எஸ்.என் முகமட்
கண்டி.

சகல பக்கங்களிலும் விமர்சனக் கண்களை செலுத்தும் முறையானது துணிச்சலான புதிய முயற்சியே.

அ.தெய்வேந்திரன்
ஹட்டன்.

பேனா நண்பர் தொடர்புப் பகுதியை ஆரம்பியுங்கள்.

ஷௌகி?
வெல்லம்பிட்டிய.

என் போன்ற வாசக உள்ளங்களின் கருத்தை ஏற்று புதிய தொடரை ஆரம்பித்தமைக்கு நன்றி.நன்றி.

ஆர்.ரஞ்சினி
கொட்டாஞ்சேனை.

சிந்தியாவின் பதில்களில் புதுமையும் உண்டு. இளமையும் உண்டு.

கு.மனோகரி
பதுளை.

ராசிபலன்களையும் தரத்தொடங்கி விட்டாய். நிறைவான முரசாய் முகம் காட்டுகிறாய். என் அன்பு முத்தங்கள்.

எம். ஆர்.நவ்சாத்
புத்தளம்.

எப்படி யான் பாராட்டுவது?

செல்வன் ஷஹீர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

முகப்புப்படம் மகிழவைக்கிறது. வண்ணப்படங்கள் வியக்க வைக்கிறது. அரசியல் செய்திகள் அதிரவைக்கிறது. சிறு கதைகள் சிந்தை கவருது. ஆக மொத்தத்தில் தினமுரசு என்னை திகைக்க வைக்கிறது.

ஆர்.பாலகிருஸ்ணன்
மாத்தளை.

இளம் நெஞ்சங்களுக்கு அரிய தகவல்கள் பல தந்தாய்.

செல்வி. தஸ்லீமா தாஸிம்
கய்காவலை.

இரும்பு மனிதனின் இதயம் கவர்ந்தவள். இளமை துள்ளும் நடையோடு எம்மையும் கவர்ந்தது. ரசிகனுக்கு ஒரு சபாஷ்!

மு.தங்கராஜ்
மட்டக்களப்பு.

தேன் கிண்ணம் புதிய எழுத்தாளர் களுக்கு திகட்டாத விருந்து.

என்.மகுறூப்
நீர்கொழும்பு.

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு எப்போது விடிவு காலம் தோன்றும் என்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

ஜோசப் சின்னத்தம்பி
கொட்டாஞ்சேனை.

தினமுரசின் வரவு கண்டோம். இவ்வாறே என்றும் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

ஜெ.கலா
நாரன்பிட்டிய.

விடிவு தேடி

முன்னிலும்
பின்னிலும்
படைக்கலன் தாங்கி,
விடிவினை வாங்கிட
முடிவிடம் போகிறேன்.
முடிந்தால்!
நான் மடிந்தால்,
குழந்தையாய், நீ! விழைய
புதிய காற்று
பதிலாய் வீசும்.

மு.தமீமா,
537, மருதமுனை-04.

எனை விடு

கிரனைட் வீசத்தெரியாது
சயனைட் கடிக்கத் தெரியாது
போதும் நீ எனை விடு-புது
சாம்ராஜ்யம் சமைக்க வேண்டும்.

பூனாகலையூர் அமிர்தன்.

கொழும்பு சேர் ஐந்தில் கிருலப்பனையில் எழும்பும் தினமுரசின் ஓசை- முழுமையாய் நம் நாட்டு மக்களுக்கோர் நல்லோசையாகுமாம். நம்புவோம் இங்கிதனை நன்கு.

வெண்பாமணி.முருக சூரியன்.
இளைப்பாறிய அதிபர்

சுபாசினிதேவி வேலாயுதம்-கொழும்பு-7, செ.சிவசங்கரசர்மா, வ.சாருமதி-கொழும்பு, சிஹாரா தாஸிம் -வியங்கல்ல, பர்சானா முகமட்-காத்தான்குடி-05, வசீம் அக்ரம் -மாத்தளை, அ.நீதிராஜா-கண்டி, வி.ரவிக்கண்ணன்-கிருலப்பனை, க.செல்வேந்திரன்- ஹோல் புறூக் பசுமலை பஜார், ஏ.எல்.எம்.பாரீட்-காத்தான்குடி, இரா. கோபால்- கேகாலை, முகமட் பௌமி-தெதோட்டை, இரத்தின சபாபதி ராஜ்மோகன்-பொரலங்கொட, சீனா ஹாசிம்-கபுகஸ்தலாவ, ஏ.ஏ.அஸீஸ்-காத்தான்குடி-03, எம்.கருணாகரன்-கொழும்பு-11, ஆர்.சிவராஜா, ம.சிறீ காந்தன்-ரயிகம, எம்.ஐ.எம். நலீம்- கெக்கிராவ, மகாஓயா மகேந்திரன்- தெகியோவிட்ட, எஸ்.சிவபாலன்-வத்தளை, எஸ்.எம்.வி.ரவி-பதுளை. ராமன்ராஜா- அவிசாவளை, எஸ்.பாலசுந்தரம்- நாவலப்பிட்டி, பி.மகேந்திரசெல்வம்- மாபொல, வத்தளை, ஆ.சிவகுமார்- கொட்டகலை, மாறன்-அக்கரைப்பற்று, மனாசிர் முசம்மில்-கட்டுகஸ்தோட்டை, வகாப் அக்ரம்-உக்குவல, கவிப்பிரியா நிஸா- வெல்லம் பிட்டிய, வே.ராஜன்-கலகஹா, எஸ்-கிருஷ்ணகுமார்- கந்தப்பளை, ஆர். மகேஸ்வரன்- நுகேகொட, குமார் பிரமிளா கொலன்னாவை, எம்.எஸ்.சுரேஷ் குமார்-அவிசாவளை, ப.தர்மேந்திரா- கொழும்பு-15.

# வாசக(ர்)சாலை

கைக்கு கிட்டாத வேகம்

உன் விற்பனை வேகம் என் கரத்திற்கு மலர் கிடைக்காமல் இருந்தது. கடந்த மலர் கிடைத்தது. மனம் விட்டுப் படித்தேன். உண்மையாகவே பிரமாதம்.

சி.விஜி விஜயகுமார்
ஸ்டெம் போட்ஹில் எஸ்டேட்

சுடச்சுட இருக்கிறது சிந்தியா பதில்கள்.

செல்வன் எம். ஹயாத்
மட்டக்குளிய.

வெள்ளிதோறும் வெளிவந்து தமிழ் உள்ளங்களை கொள்ளை கொள்ளுகிறாய்.

கே.வஸந்தன்
வட்டவளை.

என் போன்ற பிஞ்சு நெஞ்சங்களின் எழுத்துத் துறைக்கு ஒரு பாலமாக வெளிவந்த தினமுரசு வாரமலர் தனை

'பச்சை நிபன்' சிறுகதை -மனித வெடிகுண்டு இரண்டும் சூப்பர்.

பதுன் நிஸா முபயீதீன்
காத்தான்குடி.

புதுமுரசு தினமுரசு

தித்திக்கும் தேன்தமிழில்
திகட்டாத செய்தி தந்து
புத்திக்கு-கூர்மை கூட்டும்
புதுமுரசு தினமுரசு.
எத்திக்கும் இதயத்திற்கு
எடுப்பான தோற்றமிது
இறுமாப்பு எய்துகிறேன்
இனி எனக்கு கவலையில்லை.

செழியன் ஜே.பேரின்பநாயகம்,
கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர்.

தினமுரசே நீ ஒரு வல்லரசு. நாடெங்கும் உன் புகழ் கொட்டட்டும் வெற்றி முரசு.

என்.தனராஜ்
ஹட்டன்.

கண்ணே மதுமிதா ஆரம்பமே அமர்க்களம். யார் அந்த ரசிகன். வெல். அடுத்த அடி எப்படியோ?

வி.சயந்தன்
கொழும்பு-11

சுடச்சுடச் செய்திகளை சுந்தரத் தமிழில், தேன் வடியும் விதத்தில் தொடுத்துத் தருவதன் மூலம் எங்கள் இதயங்களில் குடி கொண்டுவிட்டாய்.

எம்.எஸ்.எம்.ராசிக்
மீதெனிய.

சினி விசிட் புதிய செய்திகளை சூடு குறையாமல் தந்து சொக்க வைக்கிறது.

ஆர்.இராஜேந்திரன்
சிலாபம்.

•

4 முரசுகள் படித்து விட்டாலும் 40 முரசுகள் படித்த திருப்தி.

ஏ.ஸி.எம்.நிபான்
பாணந்துறை.

வெள்ளி எப்போது வரும் என்று காத்திருக்கிறோம். நீ தரும் அனைத்து அம்சங்களும் சிந்தைக்கு விருந்து.


எம். ராஜா.புத்திரசிகாமணி, ஜே.சிவா
லிந்துலை.

ஆண் ஆதிக்கம்

நேயர் பங்களிப்புக்களில் பெண் உரிமையையும் கவனியுங்கள். ஆங்காங்கே

# கேள்விக்குறியான வாழ்க்கை

## கொழும்பிலுள்ள தமிழ் முகாம்கள் அனைத்தும் மூடப்படுமா?



கொழும்பிலுள்ள தமிழ் அகதி முகாம்கள் அனைத்தையும் மூடி விட்டு அகதிகள் அனைவரையும் அவர்களது சொந்தப்பகுதிகளுக்கு அனுப்பிவிட சமூக சேவைகள் திணைக்களம் முடிவு செய்திருப்ப தாகத் தெரிய வருகிறது.

ஏற்கனவே கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் இருந்த தமிழ் அகதிகள் முகாம் மூடப்பட்டு அங்கிருந்த அகதிகள் அனைவரும் மட்டக்களப்பிற்குக் கொண்டு செல்லப்பட்டமை தெரிந்ததே.

விவேகானந்தா முகாமில் இருந்த அகதிகள் முதலில் சொந்தப் பகுதிகளுக்குச் திரும்பிச் செல்லத் தாம் தயாராக இல்லை என்பதே அந்த அகதிகளின் கருத்தாக இருந்தது.

சமூக சேவைகள் திணைக்களம் திருப்பி அனுப்பும் முடிவில் உறுதியாக இருந்தது. அவர்களுக்கு உணவு வழங்குவதை நிறுத்தியது. கொழும்பிலுள்ள தமிழ் அகதி முகாம்களில் பராமரிப்புப் பணியில் இருக்கும் ஈ.பி.டி.பியினர் அந்த அகதிகளுக்கான உணவுப் பொருட் களை ஐந்து நாட்கள் விநியோ கித்தனர். பின்னர் சமூக சேவைத் திணைக்களத்தோடு ஈ.பி.டி.பியினர் நடத்திய பேச்சின் பலனாக அகதி களுக்கு மீண்டும் உணவு வழங்க முன் வந்த சமூக சேவைகள் திண்ணக்களம் திருப்பி அனுப்பும் முடிவில் உறுதியாக இருந்தது. முடிவில் அகதிகளும் அதற்கு உடன்பட்டனர். ஆனாலும் சில அகதிகள் இறுதி நேரத்தில் மறுப்புத் தெரிவிக்க பொலிசார் தலையிட வேண்டி ஏற்பட்டது.

இப்போது கொழும்பில் பம்பலப்பிட்டியில் இரு முகாம்களும், முகத்துவாரத்தில் ஒன்றுமாக மூன்று முகாம்கள் இருக்கின்றன. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த அகதிகளே பெரும் பான்மையினராக உள்ளனர். அரசாங்கம் வாடகை செலுத்தினாலும் கூட அந்த முகாம்கள் அமைந்திருக்கும் மண்டபங்களின் உரிமையாளர்கள் தமக்கு அந்த மண்டபங்கள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் அந்த முகாம்களில் இருக்கும் அகதி களையும் விரைவாகத் தமது சொந்தப்பகுதிகளுக்குத் திருப்பி அனுப்புவதில் சமூக சேவைகள் திணைகளம் கவனம் கொண்டுள்ளது. ஆனால் அங்குள்ள அகதிகள் இப்போது சொந்தப்பகுதிகளுக்குத் திரும்பிச் செல்லுவதில் விருப்பமற்ற வர்களாகவே காணப்படுகின்றனர்.

இதே நேரத்தில் அகதி முகாம்களில் சிலரது தவறான நடத்தைகளும், வசதி இருந்தும் அகதி முகாம்களில் தங்கியிருந்தபடி தமது சொந்த அலுவல்களைக் கவனித்துக் கொள்பவர்கள் தொடர்பாக ஏனைய அகதிகளும் அதிருப்தியோடுதான் பேசுகின்றனர்.

சொந்தப் பகுதிகளுக்குத் திரும்பிச் செல்லும் பட்சத்தில் இரு தரப்பு களிலிருந்தும் பிரச்சனைகள் தோன்றக் கூடும் என்று அகதிகள் எதிர்பார்க்கின்றனர். ஒன்று புலிகள், மற்றது பாதுகாப்புப் படையினர்.

கொழும்பில் மட்டுமல்லாமல் பொதுவாகவே தமிழ் பேசும் அகதி களின் எதிர்காலம் கேள்விக் குறியா கவே இருக்கிறது. யுத்தமோ முடி வின்றித் தொடர்கின்றது.

நீண்ட காலமாக அகதிகள் மண்டபங்களில் இருப்பது மண்ட பங்களின் உரிமையாளர்களுக்குச் சுமையாக இருக்கிறது. அகதிகளுக்கு மட்டும் நீண்ட கால அகதிமுகாம் வாழ்க்கை சுகமாக இருக்குமா என்ன?

## யாழ் வைத்திய சாலைக்கு பிரிட்டிஷ் நிறுவனம் அனுப்பிய உதவி வந்து சேர்ந்தால் மகிழ்ச்சி என்கிறது வைத்தியசாலை வட்டாரம்

பிரிட்டனிலுள்ள உதவி வழங்கும் நிறுவனம் ஒன்று இருநூறு வலு ஆற்றலுள்ள இரண்டு மின்பிறப்பாக்கிகளை வழங்கி இருந்தது. அவை யாழ்ப்பாணத்திற்கு இன்னமும் வந்து சேரவில்லை. சுகாதார அமைச்சே அவற்றை அனுப்பி வைக்க வேண்டும். அந்த மின்பிறப்பாக்கிகளும் எரிபொருட்களும் கிடைக்குமானால் 24 மணி நேரமும் யாழ் வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்க முடியும். அங்குள்ள ஆய்வுகூடத்தையும் வெற்றிகரமாக இயக்கிப் பரிசோதனை களையும் மேற்கொள்ள முடியும். இவ்வாறு யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளர் நவமலர் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் யாழ் போதனா வைத்தியசாலையில் நீரழிவு, வலிப்பு, புற்றுநோய், இருதய வியாதி போன்றவற்றிற்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறார்



யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் வசம் இருந்த பொலிசாரர் விடுவிப்பு விடயத்தில் அரசாங்கம் முன்னுக் குப் பின் முரணாக நடந்து கொண்டமையே தாமதங்கள் ஏற்பட்டதற்கான காரணம் என்று புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் விடுத் துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்னரே ஒப்புக் கொண்டதன்படி தடைநீக்கப்பட்ட பொருட்களை வடபகுதிக்கு அனுப்பி வைத்திருந்தால் பிரச்சனை ஏற்பட்டிருக்காது என்று அவர் கூறியுள்ளதுடன் அரசாங்கம் வழக்கம் போல உடன் பாட்டை மீறியுள்ளதென்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

பொலிசார் விடுவிப்பு விவகாரம் தொடர்பான பேச்சுக் களில் புலிகளின் தரப்பிலிருந்து திரு.அன்ரன் பாலசிங்கமே முக்கிய மானவராக கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டில் குழந்தை இறப்புவீதம் அதிகரிப்பு போசாக்கின்மையும் ஒரு பிரதான காரணம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழந்தை இறப்புவீதம் இந்த வருடத்தில் மேலும் அதிகரித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தை இறந்து பிறத்தல், கரு தானாகவே சிதைந்து போதல் போன்றவை அதிகரித்துச் செல்லும் அதே நேரத்தில் பிறக்கும் குழந்தைகளில் ஐந்து வீதமானவை ஒரு வருடத்திற்குள் இறந்து விடுகின்றன என்னும் அதிர்ச்சி தரும் தகவலும் வெளியாகி இருக்கிறது.

பிறக்கும் குழந்தைகள் இரண்டரைக் கிலோவிற்கும் குறை வான நிறையுடையதாகவே காணப் படுகின்றன. போசாக்கின்மையால் தாய்மார்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது குழந்தைகளின் இறப்பு விகிதத்தை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

## இனவெறியோடு இலங்கையரைத் தாக்கியவருக்கு பிணை வழங்க கனடிய நீதிமன்றம் மறுப்பு!



வினாசித்தம்பி

மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவராஜா வினாசித்தம்பி என்பவர் கடந்த 18ம் திகதி கனடாவில் 18 வயதான இனவெறியன் ஒருவரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

உணவு விடுதியில் பணிபுரியும் அவரை தாக்கிய ஜேசன் ஹீலன்ஸ் பிணையில் செல்ல அனுமதி கேட்டபோது நீதிபதி மறுத்துவிட்டார். வீட்டுக்காவலில் வைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை யையும் நீதிபதி நிராகரித்துவிட்டார்.

இதே வேளையில் இலங்கைத் தமிழரான சிவராஜா வினாசித்தம்பி மீது நடத்தப்பட்ட தாக்குதலை அவரோடு பணிபுரியும் கனடியர்கள் கண்டித் துள்ளனர். இது ஒரு பைத்தியக்காரத் தனமான வேலை என்று அவர்கள் கூறியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான திரு. சிவராஜா வினாசித்தம்பி இருவருடங் களுக்கு முன்னரே கனடா சென்றி ருந்தார்.

தாக்குதல் நடத்தியவர் தோல் தலையர்கள் என்ற அமைப்பை சேர்ந்தவர் என்று இப்போது கண்டறியப்பட்டுள்ளது. தோல் தலையர்கள் என்றால் என்ன வென்று நீதிபதி கேட்டபோது சமூகத்தை உருவாக்கும் அமைப்பு என்று தாக்குதல் நடத்தியவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறும்போது தனது நடவடிக்கைகள் மற்றும் தனது நாடு, இனம் என்பவை குறித்தும் தான் பெருமைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

கனடாவில் கடந்த ஜூன் 7ம் திகதி இரு வெள்ளையர்களால் குத்தப்பட்ட இலங்கைத் தமிழரான முத்துலிங்கம் குணாளன் கடந்த 10ம் திகதி மரணமானார்.

இன்னொரு இலங்கைத் தமிழரான கணேஸ்வரமூர்த்தி விக்னேஸ்வரமூர்த்தி உடைந்த போத்தல்களால் வெள்ளையர்கள் சிலரால் குத்தப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

கனடாவில் இனவெறித்தாக்குதல் களை உடன் நிறுத்துமாறு கோரி கடந்த ஜூன் 28ம் திகதி கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தின. ஊர்வலத்தின் முடிவில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

## வன்னிப்பகுதியில் திட்டமிட்ட குடியேற்றம் புலிகள் குற்றச்சாட்டு

வவுனியாவில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அரசாங்க உதவியோடு பெரும்பான்மை இனத்தவர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ்ப்பாணத்தில் குற்றம் சாட்டியுள்ளது. தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளும் கடைகளும் குடியேற்றத்திற்குப் பயன்படுத்தப்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள புலிகள் இயக்கம் அதற்கென ஐந்து கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

## முன்னுதாரணமான முயற்சி!

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பின் தங்கிய கிராமங்களில் இலவச வைத்திய சிகிச்சை முகாம்களை நடத்துவதற்கு கல்முனை வைத்திய சங்கம் தீர்மானித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் வைத்திய அதிகாரிகளினால் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டுள்ள கல்முனை வைத்தியசங்கம், வைத்திய அதிகாரிகளுக்கான மருத்துவத் துறைக் கருத்தரங்குகளையும் நடத்திவருகின்றது.

சங்கத்தின் முன்மாதிரி செயற்திட்டங்களுள் ஒன்றாக பின்தங்கிய கிராமங்களில் இலவச சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட வுள்ளன. மாதாந்தம் ஒரு கிராமத்தில் இத்தகைய இலவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு வறிய மக்களுக்குப் பயனளிக்கப்படவுள்ளதாக சங்கச் செயலாளர் டாக்டர் அல்-ஹாஜ் எம்.ஐ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முதலாவது இலவச வைத்திய சிகிச்சை முகாம் வீரத்திடல் அல்-ஹிதாயா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

## வெளியீட்டு விழா

(கண்டி நிருபர்)

கலாநிதி க. அருணாசலம் எழுதிய "சுவாமி விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள்" என்ற நூல் வெளியீட்டு விழா 4.7.93 அன்று கண்டி சிட்டி மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது. திரு. செ.நடராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலாநிதி துரை மனோகரன் உட்பட மற்றும் அறிஞர்கள் உரை நிகழ்த்தி னார்கள்.

## மின் பாவனையாளர்கள் வாட்டம்! மின்சார சபை காட்டுமா நாட்டம்?

(எமது புத்தளம் நிருபர்)

புத்தளம் மின்பாவனையாளர் களுக்கு வழங்கப்படும் மாதாந்த பில் விநியோகத்தில் பல சீர்கேடுகள் நடைபெறுவதாக பெரும்பாலான மின் பாவனை யாளர்கள் அதிருப்தி தெரிவித் துள்ளனர்.

மாதாந்தம் விநியோகிக்கப் படும் மின்சார பில் ஒழுங்கான முறையில் பட்டுவாடா செய்யப் படாத காரணத்தினால் அதிகரிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளதாகவும் குறைபடுகின்றனர்.

உதாரணமாக மாதத்தில் 10ம் திகதி கணக்கெடுப்பு நடாத்தி பில் வழங்கப்பட வேண்டு மானால் குறிப்பிட்ட திகதியில் ஊழியர்கள் வந்து கணக்கெடுப்பு நடாத்தாமல் பல நாட்கள் கழித்து வருவதால் இந்த அதிகரிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்த வேண்டி வருகின்றதாம்.

மேலும் சில மின்பாவனை யாளர்களுக்கு வழங்கப்படும் மின்சார பில்லில், குறிப்பாக சந்தேகங்கள் ஏற்படும் போது, அதுபற்றி முறைப்பாடு செய்ய புத்தளத்திலிருந்து முப்பத்தி இரண்டு மைல்களுக்கு அப்பா லுள்ள சிலாபம் நகருக்கே செல்ல வேண்டியுள்ளது. புத்தளம் நகரில் ஒரு மின்சார அலுவலகமோ அன்றி உதவி அலுவலகமோ இருந்தால் இங்கு சென்று முறைப்பாடுகளை சொல்லலாம். சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யலாம்.

சிறிய பிரச்சினைக்கும் பல ரூபாய் பணத்தை செலவழித்துக் கொண்டு பலமைல் பிரயாணம் செய்வது புத்தளத்து மின் பாவனையாளர்களுக்கு பெரும் கஷ்டமாக உள்ளது.

எனவே இலங்கை மின்சார சபையின் துணை அலுவலக மொன்றை புத்தளம் நகரில் அவசியமாகவும் அவசரமாகவும் நிறுவப்படுதல் வேண்டுமென பல மின்பாவனையாளர்கள் "தினமுரசு"க்கு தெரிவித்தனர்.

# மீளக் குடியேறியோருக்கு ஓர் உதவி

(நிந்தவூர் நிருபர்)



சம்மாந்துறைப் பிரதேச சபைப் பிரிவைச் சேர்ந்த வீரமுனைக் கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு வீட்டுத்தோட்ட நடுகைக்கென நெசவுக்கைத்தொழில் அமைச்சரும், சிரேஷ்ட அரசியல் வாதியுமான ஜனாப்.எம்.ஏ.அப்துல் மஜீத் மரக்கன்றுகளை அண்மையில் வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

# தமிழ் மொழிக்கும் தகுந்த இடம்!

(குருநாகல் நிருபர்)

குருநாகல் மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் போன்று தமிழ் மொழிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

க.பொ.த. உயர்தரம் உள்ள சகல பாடசாலைகளிலும் தமிழ் மொழி ஒரு பாடமாக எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 20 வருடகாலமாக இந்தப் பாடம் முஸ்லிம் பாடசாலைகளில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

தமிழ் மொழிக்கான ஆசிரியர் தட்டுப்பாடு, தமிழ் மொழிக்கான தேவையுமேற்படவும் இதை ஒரு பாடமாக சகல பாடசாலைகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றது.

இன்னும் 10 ஆண்டு கடந்தால் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுவது போல் தமிழுக்கும் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவும் என ஐயம் தெரிவிக்கப்படுகின்றது.

# குளியாப்பிட்டியில் ஓர் அதிசயம்

(குருநாகல் நிருபர்)

குளியாப்பிட்டிய தொகுதியில் முஸ்லிம் கிராமம் ஒன்றில் முஸ்லிம் பெண்மணி ஒருவர் ஒரே சூலில் மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

இந்த நிகழ்ச்சி இந்த பிரதேசத்தில் ஒரு அதிசயமாகவும், பரபரப்பாகவும் இருந்து வருகின்றது. வீட்டில் ஒரு குழந்தையும்,மற்ற இரு குழந்தைகள் குளியாப்பிட்டிய அரசினர் ஆஸ்பத்திரியிலும் கிடைக்கப்பெற்றன.

அவற்றில் ஒரு குழந்தை பிறந்து ஒரு வாரத்தில் இறந்து விட்டது.

மற்ற குழந்தைகளும் தாயும் குருநாகல் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# ராக்கிங்கின் விளைவு மாணவர் மரணம்?

(மாத்தறை நிருபர்)

விவசாய பயிற்சியில் டிப்ளோமா பட்டம் பெறும் நோக்குடன் விவசாய கல்லூரியொன்றில் சேர்ந்த மாணவனொருவன் சிரேஷ்ட மாணவர்களின் ராக்கிங் கொடுமைக்கு இலக்காகி மரணமடைந்த சம்பவமொன்று தென்னிலங்கையில் இடம் பெற்றுள்ளது.


அங்குணகொல பெலஸ்ஸ விவசாயக் கல்லூரியில் முதல் வருட மாணவனாகச் சேர்ந்த ஹக்மனை -கரதொட்டையைச் சேர்ந்த பிரியங்க நிரோஷன் புஞ்சிஹேவா (20) என்ற மாணவனே இவ்வாறு மரணமடைந்துள்ளான். இந்த மாணவனின் தந்தை ஒரு பிரதி கல்விப் பணிப்பாளராவர். தாய் ஒரு ஆசிரியையாவார். பெரும் எதிர்பார்ப்புடன் தனது மகனை விவசாய கல்லூரியில் சேர்த்த பெற்றோர் பெரும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த மாணவனின் மரணம் சம்பந்தமாக 34 சிரேஷ்ட மாணவர்களை அங்குணகொல பெலஸ்ஸ பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க மறுத்த வரம்பாவித் தோட்டை நீதிபதி ஜூலை மாதம் 8ம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு கட்டளையிட்டுள்ளார்.


இரத்தினபுரிப் பகுதியில் முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.


# குறுக்கெழுத்துப் போட்டி இல—06



**இடமிருந்து வலம்**

1. சைவ உணவு உண்ட பின்னர் இதை அருந்தினால் திருப்திதான்.
4. இதுவும் ஒரு பாதியாக இருந்தால் தான் உங்கள் உருவம் அழகாகும். (திரும்பி இருக்கிறது)
5. கலைஞர்கள் வளர வேண்டுமென்றால் இதுவும் வளர வேண்டும். (திரும்பியிருக்கிறது)
6. ஆண்டவர் வலம் வரப் பயன்படுவது.
7. வழிவழியாக வருவது.
8. இது கிடைத்தால் தான் சிலருக்குப் புத்தியே வருகிறது.
11. சில நோய்களுக்கும் மருந்தாக வேலை செய்யும் பழம் இது.(குழம்பி இருக்கிறது)
12. வாசமுள்ள மலரிது.

**மேலிருந்து கீழ்**

1. அரபு நாடுகளில் உண்டு.
2. முற்காலத்தில் அரசர்கள் இதை அடிக்கடி நடத்துவதுண்டு.
3. அந்தப்புரக் கதைகளில் இந்தச் சொல் அடிக்கடி வருவதுண்டு.
4. இது அலறினால் கெட்ட சகுனம் என்பார்கள்.
8. புத்தளத்தில் அதிகம் இருக்கிறது.
9. இதை ஒளித்து வைத்தாலும் கல்யாணம் நடக்கும்.
10. வீட்டுக்கு வீடு இதன்படி இருக்கிறது.
11. அயோத்தியில் இதுவும் சிலகாலம் அரசாண்டதுண்டு.
13. வாரத்தில் ஒரு நாள். (தலைகீழாக இருக்கிறது)

இதற்கான சரியான விடையை கூப்பனில் நிரப்பி, 17.07.93 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

சரியான விடையை அனுப்பும் 10 அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 04க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | 2 ன | வி | ல் | ■ | 3 ந | 4 தி |
| க் | ■ | 5 து | தி | க் | கை | ம் |
| கெ | ம் | ர | 6 ப | டி | ப் | பு |
| டு | கா | ன் | ■ | 7 ப | பு | ■ |
| ப் | மு | ■ | 8 சு | டி | தா | ர் |
| 9 பு | தை | ய | ல் | 10 த | ர் | யி |
| ■ | 11 வ | ரு | ஷ | ம் | ■ | 12 உ |

குறுக்கெழுத்துப் போட்டி இல.06
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

## குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 04ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

1. திருமதி. பினோஸியா குமார் நுவரெலியா.
2. கே.ரங்கநாதன் கொழும்பு-06.
3. எம்.எச்.அகமட் புத்தளம்.
4. செல்வி.ராதிகா வைரவநாதன் வவுனியா.
5. வே. குமரன் கண்டி.
6. எஸ். கேசவன் கொழும்பு-13.
7. இ.துஷ்யந்தன் சிலாபம்.
8. செல்வி.சி. மலர்விழி ஹட்டன்.
9. எம்.நூர்தீன் அனுராதபுரம்.
10. பென்ஸி கயல்ஸ் பெர்னாண்டோ கொழும்பு-13.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப் பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

# புகார் பெட்டி

## எங்களையும் கவனியுங்கள்?

இலங்கை வானொலி மற்றும் சிட்டி எப். எம். போன்ற நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டசிலரின் விருப்பங்களே தினமும் ஒலிபரப்பாகின்றன. என்னைப் போன்ற சில நேயர்கள் நூற்றுக்கணக்கான தபால் அட்டைகள் அனுப்பியும் கூட ஒரு முறையாவது எங்கள் பெயர்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பவில்லை.

கே.எஸ்.பாலா
ஆலி-எல.

## படகின்றி படும் அவதி

1993.ஜன 25ந் திகதி திருமலையிலிருந்து மூதூருக்குச் சென்ற படகு, கடலில் மூழ்கியதை அடுத்து நிறுத்தப்பட்ட படகுச் சேவையில், தற்போது இரு படகுகள் மாத்திரமே ஈடுபடுகின்றன. இதனால் மூதூர் மக்கள் தங்கள் தேவைகளை முடிக்க திருகோணமலைக்கு வருவதற்கு வரிசையில் நின்று இலக்கம் பதிக்கப்பட்ட சோடா மூடிகளைப் பெற்றே பயணம் மெற்கொள்ள வேண்டி உள்ளது. இதில் சில வேளைகளில் இலக்கம் கிடைக்காவிடில் பல மணி நேரம் வெயிலில் காத்திருந்து வீடு திரும்பும் துர்ப்பாக்கிய நிலையும் எம்மூர் மக்களுக்கு ஏற்படுகின்றது. எனவே எங்கள் துயர் துடைக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஏ.எஸ்.எம். பாயிஸ்
மூதூர்-2

## மக்கள் அவதி

களுத்துறை மாவட்டத்தில், புலத்சிங்கள தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு முஸ்லிம் கிராமம் வியாங்கல்லை. இங்கு மாலை 6.30 மணிக்குப் பின் போக்குவரத்து வசதிகள் இன்மையால், கிரிகொல, வியாங்கல்லை, குடலிகம போன்ற கிராமங்களில் வசிக்கும் பல நூற்றுக் கணக்கான மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

இப்பகுதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகளும் மாலை 6.30 மணியுடன் தமது சேவையை நிறுத்திக் கொள்கின்றன. முன்னைய காலங்களில் இரவு 9.00 மணிவரையில் இ.பே.ச. சேவையை நடாத்தி வந்தது. தற்போது சில காலங்களாக இச்சேவை தடைபட்டு விட்டது.

இதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் பயன்கிடைத்-தாக இல்லை. இங்கு அவதியுறும் பொது மக்களின் இந்த அவல நிலை எப்போது தீருமோ?.... இதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி உரிய அதிகாரிகளை பொதுமக்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

எம்.ரி.எம்.தஸ்லீம்
வியாங்கல்லை.

## வகுப்பெடுக்க வருவார்களா?

களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை வட்டாரத்திலுள்ள, தொட்டவத்தை அல்-பஹ்றியா மகா வித்தியாலயத்தில் கலை, வர்த்தக பிரிவில் பயிலும் க.பொ.த (உ/த) மாணவர்கள் பாடத்திற்குரிய ஆசிரியர்கள் இன்றி அவதிப்படுகின்றனர். இனியும் இந்த நிலை தொடருமாயின் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைவர்.

எனவே, சம்மந்தப்பட்டவர்கள் மாணவர்கள் நலன் கருதி துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எம்.எஸ்.எம்.முஸ்தார்.
பாணந்துறை.

## புதுக்கட்டிடம் நிர்மாணிக்கப்படுமா?

பேருவளைத் தொகுதியில் அமைந்துள்ள எமது ஊரான தர்ஹா நகர் பழைய சந்தைக் கட்டிடம் இடிக்கப்பட்டு பல வருடங்களாகி விட்டபோதிலும் இக்கட்டிடத்தை புதிதாக நிர்மாணிக்க எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

சிறு வியாபாரிகளான எமக்கு பெரும் பிரச்சினையாகவுள்ளது. இக்கட்டிடத் தொகுதியைக் கட்டி எமது பிரச்சினைகளை உரியவர்கள் தீர்த்து வைக்க ஆவன செய்வார்களா?

எம்.எஸ்.எம். பைரூஸ்
ஏ.ஆர்.எம்.றபீக்
ஏ.ஆர்.எம்.ஸஹ்றான்
தர்ஹா நகர்.

## ஏன் இந்த பாகுபாடு?

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய தனியார் தொலைக்காட்சி சேவையான டெலிவிஷன் (டி.என்.எல்) வாரத்தில் 40 மணிநேர ஒளிபரப்பை மேற்கொள்கிறது. எனினும் இந்த நேரத்தில் தமிழ் நிகழ்ச்சிக்கென் ஒதுக்கப்பட்டதோ அரைமணி நேரமாகும். அந்நேரத்தில் 'திரைமலர்' எனும் பல்சுவை தமிழ் நிகழ்ச்சி காட்டப்படும் என அறிவிப்பானது. எனினும் ஒளிபரப்பான திரை மலரின் சிங்கள, ஹிந்திப் பாடல்களும் ஒளிபரப்பி 15 நிமிடங்களுக்கு குறைந்த நேரத்தில் சில தமிழ்பாடல்கள் மட்டுமே ஒளிபரப்பானது. கணிசமான அளவு தமிழ் மக்கள் வாழும் இலங்கையில் ஏன் இப்படியொரு தொலைக்காட்சி சேவையினர் தமிழ்மக்களுக்கு ஓரவஞ்சனை காட்டுகிறார்கள்?

எஸ்.சாந்தகுமாரன்
சிலாபம்.

## ஒரு (தமிழ்க்) கொலை

வத்தளை பிரதேச சபை ஹெந்தல உப காரியாலய பெயர்ப் பலகையில் பொது நூல்நிலையம் என்பது பெது நூல் நிலையம் எனவும், உப காரியாலயம் என்பது உப தாரியாலயம் எனவும், பிரதேச சபை என்பது பிநதேசசபை எனவும் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மொழி தெரிந்த எவருமே வத்தளை பிரதேச சபை உப காரியாலயத்தில் இல்லையா? தமிழ் மொழிக்கு அரசகரும மொழி என்னும் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள வேளையில் இப்படியான தவறுகள் இடம் பெறலாமா?-

எஸ்.ஜோசப்
ஹெந்தல -வத்தளை.

## பஸ் மறுக்கிறது

ஹாரிஸ்பத்துவ தொகுதியிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் ஒன்று பல்கும்புற. இவ்வூரிலிருந்து கணிசமான மாணவர்கள் அண்மையூரான, "கலகெதர" வுக்கு செல்வதுண்டு. பாடசாலை மாணவர்களுக்கென சேவையிலீடுபடும் பஸ் அடிக்கடி தடைபடுவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். ஏனைய பஸ்களிலும் இவர்கள் ஏறமுடியாது. குருநாகல் பாதையில் அமைந்திருக்கும் மேற்படி பாடசாலைக்கு, குருநாகல் பஸ்ஸும் மாணவர்களை ஏற்றிச் செல்ல மறுக்கின்றது. அன்றைய தினம் எவருக்குமே பாடசாலை இல்லை. அதிகாரிகள் இப்போக்குவரத்து பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைத்து மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் இடர் துடைக்க வேண்டும்.

ஒட்டமாவடி-அறபாத்.

## தரும் நிதி தாமதம்!

குருநாகல் மாவட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடம், கட்டிடம், உட்பட மற்றும் பல அடிப்படைத் தேவைகள் கடந்த 15 வருடங்களாக முழுமையாக தீர்த்து வைக்கப்பட வில்லையென பாடசாலை அதிபர்கள், பெற்றார்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தவிர சகல வசதிகளும் கொண்ட ஒரு தமிழ் பாடசாலை உருவாக்கப்படவில்லை.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் மேம்பாட்டுக்கு நிதியுதவி கிடைப்பது என்பது பெரும் கஷ்டமாகும்.

விசிநவ உதுமான்
குருநாகல்.

## கவனிப்பார் இல்லையோ?

கந்தப்பளை கோட்லொட்ஜ் தோட்டத்தில் உள்ள பல மலசல கூடங்கள் மிக மோசமான நிலையிலும் ஒழுங்கற்ற முறையில் உபயோகித்ததலாலும் அப்பகுதியிலுள்ள சிறார்கள் முதல் பெரியோர் வரை பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். பாதையோரங்களிலுள்ள மலசலகூடங்கள் மிகவும் மோசமான நிலையிலுள்ளதாலும் பாடசாலை செல்லும் வழியில் அமைந்திருப்பதாலும் பலர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் அப்பகுதி வாசிகள் நோய்களால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. இந்நிலைமையை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது கவனத்தில் எடுத்துக் கொள்வார்களா? சமூக நலன் கருதியும் பாடசாலை மாணவர் நலன் கருதியும் துரித நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமாகும்.

எஸ்.கிருஷ்ண.குமார்
கோட்லொட்ஜ்.

# ரிப்போர்ட்

நாரதர்



# சப்புக்கொட்டிக் கொண்டு கணிப்பெழுதும் விமர்சகர்களும்

## நொடிக்கு நொடி தலைகீழாக மாறும் அரசியல் நிலவரங்களும்!

**பு**லிகளின் வசமிருந்த பொலிசாரை விடுவிக்கும் விடயத்தில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடுகள் அற்ப ஆயுளில் முடிந்து போயின.

தடை நீக்க அறிவித்தல் வந்தவுடன் தடை நீக்கப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு வடபகுதி மக்கள் முண்டியடித்தமையும் அவற்றைக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் தீவிரம் காட்டியதும் ஆசைகளின் வெளிப்பாடல்ல. அனுபவத்தின் வெளிப்பாடு.

வெண்ணெய் திரண்டு வருகிறதென்று எல்லோரும் நம்பிக் கொண்டிருக்க தாளி உடைக்கப்படுவது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒன்றும் புதிய விசயமல்ல.

பொலிசாரின் விடுவிடுப்பு விடயத்திலும் விடாக்கண்டன், கொடாக்கண்டன் நிலமை உருவாகியதானது மீண்டும் ஒரு முறை அதனையே உறுதிப் படுத்தியது.

இழுபறி நிலமை ஏற்பட்டதற்கு இரு தரப்புக்களும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைப் பரிமாறிக் கொண்டன.

புலிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று யாழ்ப்பாணத்தில் புலிகளைச் சந்தித்து விட்டு கொழும்புக்கு வந்து அறிவித்த புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் வீரசேகராவிற்கு அவர் மீண்டும் யாழ்ப்பாணம் போன போது இன்று போய்ப் பொருட்களோடு திரும்பி வாருங்கள். பொருட்கள் வராத வரை பொலிசாரை அழைத்துச் செல்லும் எண்ணத்தைக் கீழே போட்டுவிட்டுச் செல்லுங்கள் என்று புலிகள் முகத்தில் அடித்தாற் போல் சொல்லி விட்டார்கள்.

முன்னர் புலிகள் இராணுவ மரியாதை கொடுத்து தன்னைக் கெளரவித்தார்கள் என்னும் மகிழ்ச்சியையும் யாழ்ப்பாண நிலத்தே போட்டு வெறுங்கையோடு தெற்கே வந்தார்.

பொலிசாரை விடுவிப்பதன் மூலம் தமது நல்லெண்ண நோக்கத்தைக் காட்டுவது தான் புலிகளின் எண்ணம் என்றும் காய் கனிந்து விட்டது, பழமாகப் போகிறது என்றும் சப்புக் கொட்டிக் கொண்டு தமது சட்டைப்பைகளுக்குள் இருந்த பேனாக்களை எடுத்து கணிப் பெழுதிய சிலருக்கும் அதிர்ச்சி தான்.

புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் தமது இயக்கத்திற்கு இலாபமில்லாமல் காரியம் செய்யமாட்டார்கள் என்று ஏனைய தமிழர் அமைப்புக்கள் கூறி வருவதை முற்றாக நிராகரித்து விட முடியாது.

அதே நேரத்தில் புலிகள் கேட்ட பொருட்களை வழங்குவது தொடர்பாகவும் பொருட்களின் தடை நீக்கம் தொடர்பாகவும் ஒரு தெளிவான அணுகுமுறையை அரசாங்கமும் கொண்டிருக்கவில்லை.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் எடுத்த முடிவு வவுனியாவில் தடை முகாமில் இருக்கின்ற ஒரு இராணுவ வீரரால் மீறப்படுகிறது. கேட்டால் அறிவித்தல் வரவில்லை என்று பதில் சொல்லப்படுகின்றது.

சரியோ, தவறோ ஒரு முடிவு எடுக்கப்பட்டுவிட்டால் அதனை மேலிருந்து கீழ்வரை அமுல் நடத்துகின்ற பொறுப்பு அந்த முடிவினை மேற்கொள்கின்ற சகல தரப்புக்களையும் சார்ந்ததாகும்.

இன்னொரு விடயத்தையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ முடிவுகள் பற்றிக்கூட அதிகாரிகள் மட்டத்தில் தெளிவற்ற தன்மையே காணப்படுகிறது.

பொதுவாக அவ்வாறான குறைபாடு நீண்டகாலமாக இருந்து வருகிறது.

நாட்டையே உலுக்கும் அரசியல் தலைவர்களின் படுகொலை விடயங்களில் கூட உடனுக்குடன் நிலமைகளைத் தெளிவாக்கக் கூடிய அணுகுமுறை ஒன்று இல்லாமல் இருக்கிறது.

பக்கத்திலிருக்கின்ற இந்தியாவிலிருந்து நாம் சிலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் போதும், பம்பாயை உலுக்கிய வெடிகுண்டு விவகாரத்தின் போதும் அவை பற்றிய விபரங்களை வெளியிடவும் விசாரணைகள் மூலமாகக் கண்டறியப்பட்டவற்றில் வெளியே அறிவிக்கப்படக் கூடியவற்றை விளக்கிக் கூறவும் பொறுப்பான அதிகாரிகள் தினமும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்கள்.

அதனால் பத்திரிகைகள் வெறுமனே தங்கள் ஊகங்களையும் அங்கங்கே தங்கள் காதில் கேட்டவற்றையும் எழுதி தங்கள் பக்கங்களை நிரப்பிக் கொள்ள வேண்டிய அவசியமிருக்கவில்லை.

ஆனால் இலங்கையில்.......

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசவைப் பலி எடுத்த மனிதக் குண்டு எங்கிருந்து வந்தது என்பதைக் கூட இதுவரை எவரும் தெளிவாகச் சொல்லவில்லை.

பொதுவாகவே அவ்வாறான நிலமை காணப்படுவது மக்கள் மத்தியில் குழப்பமான நிலையை ஏற்படுத்துவதுடன் அரசாங்கம் மீது அவநம்பிக்கைகளையும் தோற்றுவிக்கிறது.

மக்கள் மத்தியில் மட்டுமன்றி அதிகாரிகள் மட்டத்திலும் குழப்பங்கள் நிலவுவதானது நமக்கேன் பிரச்சனை என்று தப்பித்துக் கொள்ளும் மனோபாவம் அதிகாரிகள் மட்டத்தில் ஏற்பட்டு வருவதையே கோடிட்டுக் காட்டுகிறது.

அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அரசியல் மாற்றங்கள், எதிர்க்கட்சிகளின் சில சந்தர்ப்பங்களில் பலமான குரலில் தொனிக்கும் சீற்றங்கள் என்பவற்றிற்கு அதிகாரிகளே பலிக்கடாய்கள் ஆக்கப்படுவதும், பந்தாடப்படுவதும் அவ்வப் போது நடைபெறுவதுண்டு.

பொறுப்புள்ள அதிகாரி ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், "அரசியல்வாதிகள் எங்களைக் காப்பாற்ற முன்வராவிட்டால் நாங்கள் கைகட்டிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழி இல்லை. முன்முயற்சி எடுக்க முடியாது." ஆக அதிகாரிகளின் பக்கமும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

இவ்வாறு தான் பொருட்கள் மீதான தடைநீக்க விடயத்திலும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட நிலமையிலும் புலிகள் சகலவற்றிற்கும் அரசாங்கமே பொறுப்பு என்ற தோரணையில் பிரச்சாரங்களை மேற்கொண்டனர்.

ஆனால் அரசாங்கத் தரப்பிலிருந்து புலிகளின் பிரச்சாரத்திற்கு பதிலளிக்கக்கூடிய பிரச்சாரமுறைகள் வழக்கம் போலவே பலவீனமாக இருந்தன.

அரசாங்கத்தின் பத்திரிகையாளர் மாநாடுகளில் தமிழ் பேசும் அமைச்சர்கள் பங்குபற்றுவது அரிதாகவே காணப்படுகிறது.

நீண்ட அனுபவமும், விவேகமும் உள்ள நீதி அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத், முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சர் அஸ்வர் போன்ற ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் கூட பத்திரிகையாளர் மாநாடுகளில் பங்குபற்றுவது அரிதாகவே இருக்கிறது.புலிகளின் பிரச்சாரங்களுக்குப் பதில்அளிக்கும் போது புலிகள் என்ன கூறுகிறார்கள்? தமிழ் பேசும் மக்களின் மனநிலை என்ன? என்பவற்றைப் புரிந்து கொண்டு சரியான பதில் அளிப்பதற்கு மொழி அறிவு முக்கியமானதாகும். அப்படியானால் தான் புலிகள் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு உடனுக்குடன் பதிலளிப்பது சுலபமானதாக இருக்கும்.

ஏனோ அந்த விடயத்தை இதுவரை யாரும் கவனத்தில் கொள்ளவில்லை.

புலிகளைப் பொறுத்தவரை பிரச்சார யுக்திகளில் அனுபவம் வாய்ந்தவர்களாகவே இருக்கின்றனர். மறுபுறம் அவர்களின் பிரச்சார வெற்றிக்கு அரசாங்கத்தின் தவறுகளும் துணை போகின்றன.

வானொலியில் இது தமிழர்களுக்கெதிரான யுத்தம் அல்ல என்று அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போது மன்னாரிலுள்ள தேவாலயப் பகுதியில் விமானக்குண்டு வீசப்படுவது எவ்வாறு பொருத்தமானதாக அமையும்?

இப்போது புலிகள் உடன்பாட்டை மீறிவிட்டார்கள் என்பதற்காக தடை நீக்கப்பட்ட பொருட்களுக்கு மீண்டும் தடை என்று அரசாங்கம் பிடிவாதம் காட்டுமானால் அது தமிழர்களின் அபிமானத்தைப் பெறுவதற்கு உதவிகரமானதாக அமையாது.

அரசாங்கம் காகிதாதிகளை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்ல முடியாது என்று தடுத்துள்ளமையால் புலிகள் ஒன்றும் பனை ஓலைகளில் எழுதிக் கொண்டிருக்கவில்லை. ஒரு வேளை அவர்கள் அப்படி எழுத முற்பட்டாலும் கூட சொந்தக்காலில் நின்று போராடுகிறார்கள் என்கின்ற அபிமானத்தையே அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும்.

இப்போதும் புலிகள் யாழப்பாணத்தில் பிரசுரங்களை அடித்து வெளியிடுகிறார்கள். சொந்தமாக ஈழநாதம் என்கின்ற பெயரில் தினப்பத்திரிகை ஒன்றை நடத்தி வருகிறார்கள். விடுதலைப் புலிகள் என்கின்ற பெயரில் உத்தியோகபூர்வமான பத்திரிகை ஒன்றையும், ஹொட் ஸ்பிரிங் என்ற பெயரில் ஆங்கில மாத இதழ் ஒன்றையும் வெளியிட்டு வருகிறார்கள்.

அரசாங்கத்தின் காகிதத் தடையை முறியடிக்க சொந்தமாகவே காகிதத் தயாரிப்பிலும் ஈடுபட்டார்கள்.

புலிகளின் சொந்த முதலீட்டில் சவர்க்காரம், சோடா, இனிப்பு வகைகள் கூடவே சாராயம் போன்றவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

வவுனியாவில் வைத்து தங்கத்தை யாழ் போகாமல் தடை செய்ததற்கு இராணுவத்திற்குப் புலிகள் நன்றி சொல்ல வேண்டும். யாழ்ப்பாணத்தில் பொதுமக்களிடம் வசூலித்த தங்க நகைகளை யாழ்ப்பாணத்திலுள்ள தமது தங்க வியாபார நிறுவனங்களில் வைத்துப் புலிகள் காசாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வருமானம்.

ஆக பொருள் தடைகள் என்பது பொதுமக்களுக்கு மட்டுமே பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இராணுவ ரீதியில் புலிகள் பயன்படுத்தக் கூடும் என்று கருதப்படும் பொருட்களை அரசாங்கம் தடை செய்துள்ளமையை எவரும் குறை சொல்ல முடியாது. எதிரிக்கு வெடிமருந்துகளை விநியோகித்துக் கொண்டு எதிர்த்துப் போராடுங்கள் என்று இராணுவத்திற்கு இலங்கை அரசாங்கம் சொல்ல முடியுமா என்ன?

ஆனால் இராணுவரீதியான தொழில்நுட்பங்களுக்குப் பயன் படுத்தப்படாத ஆனால் புலிகளும் தமது சாதாரண மற்றும் பிரச்சாரத் தேவைகளுக்குப் பயன்படுத்துவார்கள் என்று தடைசெய்யப் படுகின்ற பொருட்களை தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது சரிதானா என்று அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

எப்படியோ பொலிசாரின் விடுவிப்பு விடயத்தில் ஏற்பட்ட நிலைகண்டு ஐந்துபேர் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பார்கள். கூடவே அவர்களது

(மறுபக்கம் பார்க்க)

# எக்ஸ்ரே

## அதிரடி அய்யாத்துரை



**உ**யர்ந்த இடத்தில் இருப்பவருக்கு பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஆலோசனை சொல்பவர் ஓப்பினாகப் பேசக்கூடியவர். இது தேவையில்லாத சண்டை. அநியாயமாய்ச் செலவழிச்சுக் கொண்டிருக்கிறம். கெதியா இதுக்கொரு தீர்வு காணவேணும் எண்டு வேதனையோட கதைக்கிறாராம்.

**இ**ரண்டெழுத்தார் தங்கட 'பேபி' அணியினரையும் யூஸ் பண்ணக்கூடும் எண்டு தலைநகர சீருடை வட்டாரங்களில் ஒரு சந்தேகம். தாணு விஷயத்திற்குப் பிறகு பொம்பிளையள் என்றாலே பயங்கரச் செக்கிங். 'பேபியளையும்' அவை பயன்படுத்த வெளிக்கிட்டா தலைநகரத்தில் இருக்கிற பிள்ளையளுக்கு தலையிடி தான் வரும் பாருங்கோ.

**கொ**ழும்பில ஒரு முகாமில இருந்த அகதியள் வலுகெதியா வெளிக்கிடுத்தப்பட்டதுக்கு சமய நிறுவனம் ஒண்டுதான் காரணம் எண்டு கதை. அகதியள் சிலரும் பிழை விட்டவைதான். அதுக்காக அகதிகள் முழுப்பேரிலையும் பழி போடுறதும், முகம் சுளிக்கிறதும் பொதுநலத் தொண்டுக்கு மாறான செயல். போதிப்பது சுலபம். சாதிப்பது கஸ்ரம். சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கினாச் சரி.

**வெ**ளிநாட்டு செய்தி நிறுவனம் ஒண்டு தமிழ்க் கட்சியளைக் கூப்பிட்டு கொழும்பில டிஸ்கஸன் ஒண்டு வைச்சதாம். வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு தாம் என்றுமே எதிர்ப்புத்தான் எண்டு தமிழ்க்கட்சியள் அடித்துச் சொல்லிவிட்டனவாம். கலந்து கொண்ட கட்சிகளாவன, டி.யு.எல்.எவ், ஈ.பி.டி.பி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ்க் காங்கிரஸ். நிருபர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது தலைவர் சிவா அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டாராம். இந்த நேரத்தில் எங்கட அமுதரும் இருந்திருந்தா.....ம். நினைச்சாக் கவலைதான்.

**நு**தலும் தன் வாயால் கெடும் என்பது எவளவு பெரிய உண்மை. தமது விற்பனை வீழ்ச்சிக்கு புதிய பத்திரிகையின் வரவே காரணம் எண்டு மாபெரும் கண்டுபிடிப்பு நடத்திய ஒரு நிறுவன நிர்வாகி தமது வெளியீட்டை வாங்கும் தொகையைக் குறைப்போர் மீது கோபம் காட்டுகிறாராம். வேறு சில தேவையற்ற சில்லறைக் கதையளையும் அன்னார் கதைத்திருப்பதாகக் கேள்வி. வினை விதைத்தால் அதை அறுக்கவும் வேண்டிவரும் ஐயா. வரும்.

**இ**ரண்டெழுத்தார் வசம் உள்ள தமது உறவினர்களைப் பார்க்க கொழும்பு ரூ யாழ்ப்பாணம் போனவர்களுக்கு அங்கு நல்ல உபசரிப்பாம். உபசரிப்பால் மகிழ்ந்து அவர்கள் இரண்டெழுத்தாரை ஏற்றிப் போற்றினார்களாம்.

**வெ**ளிநாட்டில் மலிவு விலையில் மரக்கறி கிடைச்சாலும் எங்கட சனத்திற்கு நாக்கு ருசி விடேல்லைப் பாருங்கோ. இஞ்ச இருந்து அனுப்புற மரக்கறியைத்தான் விரும்பி வாங்கீனமாம். விலை கூடத்தான். எண்டாலும் நாக்குக்கு வஞ்சகம் செய்யிறதோ எண்ட நோக்கம் பாருங்கோ. செலவுக்குரிய நோக்கம் எண்டு சொல்லுறியளோ?

உறவினர்களும் தான். முதல் கட்டமாக விடுதலையாகி வந்த ஐந்துபேரும் அதிஷ்டசாலிகள்.

தற்போது பொலிசார் விடுவிப்பு விடயம் பற்றிய பரபரப்பான செய்திகள் சற்று ஓய்ந்திருக்கின்றன. மீதியுள்ள பொலிசாரை மீண்டும் உண்ணாவிரதம் இருக்குமாறு புலிகள் ஆலோசனை கூறுவதற்கும் ஒரு காலஅவகாசம் தேவைப் படும்.

■

**பு**திய தொலைக்காட்சி நிறுவனங்கள் நமது வானத்தையும் பங்குபோடத் தொடங்கியுள்ளன.

ஆரம்பத்தில் விறுவிறுப்பாக ஆரம்பித்த எம்.ரி.வி. இப்போது சூடு குறைந்துள்ளது போல் தெரிகிறது.

இப்போது ரி.என்.எல் புதிய வரவு. செக்ஸ் பற்றியெல்லாம் பேசினால் வெளிக்கு முகம் சுளிப்பவர்கள் தொலைக்காட்சி பெட்டிக்களை உடனே தூக்கி வெளியில் வீசுவார்களா என்று விசாரிக்க வேண்டும்.

அண்மையில் ஐ.ரி.என் ஒளிபரப்பிய ஹிந்தித் திரைப் படத்தில் நீச்சல் உடையில் நட்சத்திரம் ஒன்று வலம் வந்தது.

எல்லைகள் விரிந்து வருகின்றன. அதனால் சன்னல் களை மூடினால் மட்டும் பிரச்சனை தீராது.

விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டிகளில் மாத்திரமே மெய் மறந்து போனதால் தான் நாம் மீண்டும் மாட்டுவண்டி யுகத்திற்கே திரும்பிவிட்டோமோ என்று சந்தேகப்படும் அவதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.




எம்மிடம் பேசுவதற்கு பழம்பெருமைகள் நிறைய உண்டு. சந்தோசம்தான். துரதிஷ்டவசமாக புதிதாகப் பேசுவதற்கு மிகக் குறைந்த விசயங்களே இருக் கின்றன. இது சோகம்தான்.

ஆனால் ஆபாசம் என்பதற்கும்– கவர்ச்சி என்பதற்கும் இடையே வேறுபாடு உண்டு. மனதில் குப்பை உள்ளவர்களுக்கு எதையுமே திருட்டுத்தனமாக ஆபாசக் கண்களால் பார்த்துப் பழகியவர்களுக்கு வேறுபாடு தெரியாது.

அழகான பெண்ணைப் பார்த்து வியப்பதற்கும், ஆபாச எண்ணத் தோடு கண்களாலாலே உரித்துப் பாப்பதற்கும் இடையே வித்தியாசம் உண்டு. முன்னது ரசனை, பின்னது வக்கிரம்.

எதையோ சொல்லவந்து எங்கோ போய் விட்டது போல் படுகிறது.

புதிய வரவுகள் வானலையை ஆக்கிரமிக்கும் அதே வேளையில் ஆபாசம் தலைகாட்டாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்னொரு முக்கியமான விசயம். இலங்கையில் தமிழ் பேசுவோர் இரண்டாவது பெரிய ஜனத்தொகை என்பதையும் ரி.என்.எல். போன்ற – மற்றும் இனி வரவுள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள் மனதில் கொள்வது நல்லது.

அரசாங்க தொலைக்காட்சி ரூபவாஹினிக்குத்தான் பெரும் பிரச்சனை. எம்.ரி.வி. வந்த பின்னர் ரூபவாஹினி என்று ஒரு சேவை இருப்பதே பலருக்கு மறந்து போய்க்கொண்டிருக்கிறது. கால மாற்றத்திற்கு ஏற்ப ரூபவாஹினி தன்னை வளப்படுத்தாவிட்டால் பார்க்க ஆளிருக்காது.

■

**ரா**ஜாங்க அமைச்சர் திரு. ரணசிங்க மனதில் பட்டதை சொல்லுகின்ற மனுசன்.

தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டி வழங்கினால் என்ன பிழை, நான் அதனை ஆதரிப்பேன் என்று பகிரங்கமாகவே பாராளு மன்றத்தில் சொன்னவர்.

சமீபத்தில் பத்திரிகையாளர் மாநாட்டிலும் தனக்கு மேலுள்ள அமைச்சர் மீதே குறை சொல்லி யிருக்கிறார்.

ஆளும்கட்சி வட்டாரங்களில் அது கொஞ்சம் முகம் சுளிக்க வைத்திருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்திலும் பாராளுமன்றத்தில் சபாநாய கரோடு நேரடியாக முரண்பட்டவர் திரு. ரணசிங்க. முன்னாள் ஜனாதி பதியின் காலத்தில் திரு.ரணசிங்கா விடம் இருந்த பொறுப்புக்கள் சில இப்போது கைமாறியிருப்பதால் அவர் மனம் கசந்துள்ளதாகவும் ஒரு பேச்சு இருக்கிறது.

என்னதான் இருந்தாலும் பத்திரிகையாளர் மநாட்டில் உள் பிரச்சனைகளை உடைத்திருக்கக் கூடாது என்றும். ஆளும்கட்சி பிரமுகர்கள் பலர் சொல்லு கிறார்கள். கட்சிப் பிரச்சனை களையும், அமைச்சரவை முரண்பாடு களையும் பேசுவதற்குரிய இடம் பத்திரிகையாளர் மாநாடு அல்ல என்கிறார்கள் அவர்கள். எதிர்க் கட்சிகளுக்கு மெல்லுவதற்கு அவல் கொடுப்பானேன் என்பதும் அவர்கள் தரப்பு கேள்வி.

■

# மயிர் பிளக்கும் விவாதங்களால் – மனித உரிமைகளுக்கு என்ன பயன்?

மனித உரிமைகள் பற்றிய பேச்சுக்களுக்கு எப்போதுமே குறைவிருந்ததில்லை.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில் தான் நிறையக் குறைகள் இருக்கின்றன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்பது அதனைப் பற்றி அடிக்கடி பேசுவது போன்று சுலபமான ஒன்றல்ல.




## மனித உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்தும் பொஸ்னியர்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கமான மனித உரிமைகள் ஸ்தாபனத்திற்கே வெட்கக்கேடான நிலை ஒன்று அண்மையில் ஏற்பட்டது.

திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா. 1989ம் ஆண்டுக்கான நோபல் பரிசையும் அவர் பெற்றுக் கொண்டவர்.

வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் அவரைப் பேசுவதற்காக அழைத்திருந்தார்கள். நிகழ்ச்சி நிரலிலும் அவரது பெயரை பிரதானமாக குறிப்பிட்டிருந்தார்கள்.

மாநாட்டுக்கு தலைமை தாங்கியவர் செனகல் நாட்டுப் பிரதிநிதி. தலாய்லாமா பேசுவதற்கு உரிய நேரம் வந்த போது பேசமுடியாது என்று ஒரேயடியாக மாநாட்டுத்தலைவர் மறுத்துவிட்டார். மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் சீனப் பிரதிநிதியின் பிடிவாதம் வென்றது. தலாய்லாமாவுக்கு பேசும் உரிமையை மனித உரிமைகள் மாநாடு மறுத்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை தலையிட்டு நிலமையைச் சமாளிக்க முயன்றது. மாநாட்டு மண்டபத்திற்கு புறம்பான ஒரு பகுதியில் அவசரமாக ஒரு கூடாரம் அமைக்கப்பட்டது. அங்குதான் தலாய்லாமா பேசக்கூடியதாக இருந்தது.

அவர் நன்றாகத்தான் பேசினார்.

அவரது பேச்சைக் கேட்கத்தான் ஆளில்லை. எந்த நாட்டின் அரசுப் பிரதிநிதியும் பேச்சைக் கேட்க செல்லவில்லை.

இந்த வெட்கக்கேடு கடும் கண்டனத்திற்கு உள்ளானது. சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவர் நொஸ்டானியல்ஸ் அதுபற்றிக் கருத்துக் கூறும் போது "மனித உரிமைகள் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் உள்ள ஒரு பெயரை நீக்கிவிடுவதை எவராலும் ஆட்சேபிக்க முடியாமல் போனது வருந்தத்தக்கது" என்று கூறினார்.

என்றாலும் தலாய்லாமாவைப் புறக்கணித்த மனித உரிமை மாநாடு பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை.

மாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகள் இருக்கைகளில் தூங்கிவழிந்தனர். காரணம், சில பேச்சாளர்கள் நீட்டி முழக்கி நேரத்தை அநியாயமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொஸ்னிய பிரதிநிதி மட்டும் உருப்படியாகப் பேசினார் என்பது பார்வையாளர்களின் அபிப்பிராயம்.

"இங்கு மனித உரிமைகள் மாநாடு நடைபெறுகிறது. இங்கிருந்து 300 கிலோ மீட்டர் தொலைவில் முஸ்லிம்கள் வகை தொகையற்று வதைக்கப்படுகிறார்கள். இதனைத் தட்டிக் கேட்பதற்கு அரசியல் பிரதிநிதிகளான உங்களுக்கும் உரிமை இருப்பதாக தெரியவில்லை"

என்று பொஸ்னியாப் பிரதிநிதி சூடாகப் பொரிந்து தள்ளினார்.

மனித உரிமைகள் மாநாட்டில் உருப்படியாக எதுவும் நடைபெறவில்லையென்றாலும் வாதப் பிரதிவாதங்களுக்கு குறைவிருக்கவில்லை.

மனித உரிமை மாநாட்டில் மட்டுமல்ல. மனித உரிமைகளுக்கும் இதுதான் கதி. விவாதிக்க ஆட்கள் இருக்கிறார்கள். காப்பாற்றத்தான் ஆட்கள் இல்லை. ■

# "தன்னாட்சியைத் தாருங்கள் அபின் உற்பத்தியை கைவிடுவோம்"



## உலக ரவுண்டப்

பர்மாவிலுள்ள பல்வேறு சிறுபான்மை இனங்களில் மிகக் குறுகிய மக்கள் தொகையைக் கொண்ட இனம் வா எனப்படுவது. இருப்பினும் இவர்கள் தான் உலகத்தில் அதிகமான அபினை உற்பத்தி செய்பவர்கள். வா இனத்தின் இளவரசர் தாலை தனது இனத்தைச் சேர்ந்த 400,000 மக்கள் முன்னர் மனித வேட்டையாடி தலைகளைக் கொய்பவர்கள் என்கிறார். இவர்கள் சீனாவின் எல்லைப் புறத்தில், பர்மாவின் 90 சதவிகிதமான அபினை அறுவடை செய்பவர்கள் என்றும் கூறுகிறார். இந்தப் பிராந்தியத்தில் 1992ல் உற்பத்தி செய்யப்பட்ட 2,700 தொன் அபினில் அரைவாசி வா இன மக்கள் வாழும் பகுதியில்தான் உற்பத்தியானது.

தாலை இப்பொழுது அபின் உற்பத்தியை கைவிடப் போவதாக அறிவித்துள்ளார். "பர்மாவுக்குள் எங்களுக்கு தன்னாட்சி உரிமை கொண்ட அரசு அமைய வேண்டும். இதற்கு முதற்படியாக அபின் உற்பத்தியைக் கைவிடப் போகிறோம். இதனால் எமது இனத்தின் பெயருக்கு இழுக்கு ஏற்படுகிறது. மக்களுடைய தோற்றத்துக்கு அபின் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறது" என்று கூறும் தாலை, தங்களுக்கு வெளிநாட்டு உதவி தேவை என்றும் சொல்லுகிறார்.

மற்றுமொரு வா இனத்தலைவர் யூ செளல்லூ என்பவர், "எங்களுடைய விவசாயத்துக்கான மாற்றீடுக்கான தொழில்நுட்ப உதவி தேவைப்படுகிறது. எமது இயற்கை வளங்களைக் கண்டறியவும் உதவிகள் தேவைப் படுகின்றன என்று தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் ஐக்கிய வா தேச கட்சியின் தலைவர்களாக உள்ளனர். 1989ல் பர்மாவில் புரட்சி நடைபெற்ற பின்னர் ரங்கூன் இராணுவ ஆட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள்.

இவர்களுடைய மனிதத்தலை வேட்டையைப் பற்றிக் கேட்ட போது, 1970 களிலேயே சிரம் சீவும் பழக்கத்தை விட்டு விடும்படியும் எஞ்சியிருக்கும் மனித மண்டை ஓடுகளை அழித்து விடும்படியும் கோரிக்கை விடப்பட்டதாகத் தெரிவித்தனர். இருப்பினும் சிலர் சிலவற்றை நினைவுச் சின்னங்களாக வைத்துள்ளனர்.

# வெள்ளையரோடு நெருக்கமா? வெறுக்கிறார்கள் கறுப்பினத்தவர்கள்

தென்னாபிரிக்காவின் நிறவெறிப் பிரச்சனைக்கு முடிவு கட்ட தேர்தல் நடத்தப்படும், கறுப்பினத்தவர் கையில் அதிகாரம் கொடுக்கப்படும் என்ற முடிவுகள்– பேச்சுக்களுக்கிடையே சிக்கல்களும் தொடர்கின்றன.

திரு. நெல்சன் மண்டேலா வெள்ளை அரசாங்கத் தலைவர் ஜனாதிபதி டி.கிளோக்குடன் நெருங்கிய




தொடர்பைப் பேணுவது கறுப்பினக் குழுக்களிடம் வெறுப்பினைத் தோற்றுவித்துள்ளது. விளைவாக மோதல்களும் – பிரச்சனைகளும் தொடர்கின்றன.

கறுப்பின மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினால் தாங்கள் ஆயுதமேந்தி போராடப் போவதா வள்ளையர் குழுக்கள் அறிவித்துள்ளன.

எனவே தேர்தல்கள் நடைபெற்றாலும் அதன்பின்னர் ஏற்படப்போகும் ஆட்சி அமைப்பு, அதிகாரப் பரவலாக்கல் விடயங்களில் சிக்கல்கள் தோன்றும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

# பாரிஸ் பணம் பாழாகக்கூடாது!

அலசுவது–இராஜதந்திரி


PM invites Prabhakaran for direct talks

From S. Venkat Narayan
Our Special Corr.

NEW DELHI, June 23 — Sri Lankan Prime Minister Ranil Wickremasinghe yesterday invited Velupillai Prabhakaran leader of the Liberation Tigers of Tamil Eelam (LTTE), for direct talks to find a lasting political solution to the decade-old ethnic dispute in the island.


He extended the invitation while talking to this correspondent at a tea party hosted in his honour by Sri Lankan High Commissioner Neville Kanakaratne here yesterday evening.

Mr. Wickremasinghe reiterated the Sri Lankan government's willingness to find a political settlement to the bloody civil war the LTTE has been waging for Eelam — or separate state for Tamils — in the island's Jaffna peninsula, which has so far claimed more than

Mr. Wickremasinghe made it clear that in a democracy, the LTTE must be prepared to discuss its demands with the government across the table. It must be prepared to fight elections along with other political parties in the island. There is no way anyone can hand over power to the LTTE on a platter without holding elections, he declared.

that Mr. Prabhakaran has ignored the ... direct talks. He ... nor any of his ministerial ... LTTE chief. ... during my half a ... India and Sri



**பி**ரான்ஸின் தலைநகரான பாரிஸில் வைத்து இலங்கைக்கு 840 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் ஸ்தாபனங்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மையமாக வைத்தே இப்பெருந் தொகையை வழங்கியுள்ளன.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையைக் கூர்ந்து அவதானிக்கும் போது, பாரிஸில் வைத்துக் கிடைத்த இப்பாரிய பணத்தொகை தகுந்த முறையில் செலவிடப்படுமானால் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும் என்றே உணரமுடிகின்றது.

இலங்கை ஓர் அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலக நாடாகும். இலங்கையின் தற்போதைய திறந்த பொருளாதாரக் கொள்கை பல வெளிநாட்டு முதலீடுகளுக்கும், தனியார் துறையினரின் விரிவான கைத்தொழில் திட்டங்களுக்கும் கணிசமானளவு வாய்ப்புக்களை வழங்கி நிற்கின்றது.

இது தவிர ஜப்பான், சீனா மற்றும் மேற்கு நாடுகள் பல போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, கைத்தொழில், பொதுசனத் தொடர்பு போன்ற துறைகளில் கடன் அடிப்படையில் அல்லாமல் நல்லெண்ணத்தின் பேரில் இலங்கைக்கு பிரமாண்டமான உதவிகளை இலவசமாக வழங்கியுள்ளன.

அத்துடன் பல வெளிநாட்டுக் கைத்தொழில் அதிபர்கள் இலங்கையில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி பல முதலீடுகளை மேற்கொள்வதிலும் தமது அக்கறையை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசு பாரிஸில் பெற்றுக் கொண்ட பணத்தை தகுந்த முறையில் திட்டமிட்டுச் செலவளிக்குமானால் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத்தக்களவு முன்னேற்ற முடியும் என்றே எதிர்பார்க்க முடியும்.

## பிரபாகரனுடன் நேரடிப் பேச்சு நடத்த விரும்பும் பிரதமர் ரணில்!!

1977ம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தனா தலைமையிலான அரசு இலங்கையின் ஆட்சியைப் பொறுப்பேற்றிருந்தது. அன்றிலிருந்து தற்போது பதினாறு வருடங்கள் வரை ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு விளங்குகின்றது.

1978ம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தம்மை மாற்றிக் கொண்டதையடுத்து, நாட்டின் பொருளாதாரத் திட்டங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வந்திருந்தார்.

பாரம்பரிய ஏற்றுமதிப் பண்டங்களின் வருவாயிலேயே பெருமளவு தங்கியிருந்த இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப் படுத்தப்பட்டதையடுத்து, சுதந்திர வர்த்தக வலயம் உட்பட கைத்தொழில் வர்த்தகப் பேட்டைகள் பல உருவாகத் தொடங்கின.

ஆனால் இப்புதிய திட்டங்களின் பிரதிபலன்களை இலங்கை அனுபவிக்க ஆரம்பித்த தருணத்திலேயே இலங்கையின் இனப் பிரச்சனை பூதாகாரமான வடிவத்தைப் பெறத் தொடங்கியது.

அரசியலமைப்பிலும், பொருளாதாரத் திட்டத்திலும் மாற்றங்களைக் கொண்டு வருவதில் ஜே.ஆர். ஜயவர்த்தனா வெற்றி கண்டிருந்தார். ஆனால் பெரும் சர்ச்சையாக மாற்றமடைந்த இனப்பிரச்சனையைக் கையாளுவதில் அவர் தோல்வியையே தழுவியிருந்தார்.

ஒரு முதிர்ந்த ஜனநாயகவாதி என்ற தரத்திலிருந்த போதிலும், இராணுவ நடவடிக்கைளில் அக்கறை காட்டி இனப்பிரச்சனையை இராணுவ ரீதியாகத் தீர்த்து வைக்கலாம் என்று ஜே.ஆர்.ஜயவர்த்தனா கருதியிருந்தார். அவரது இத்தவறான கண்ணோட்டம் இனப்பிரச்சனைத் தீர்வில் அவருக்குப் பலத்த தோல்வியைக் கொடுத்திருந்தது.

இந்நிலையில் வடபகுதியில் தோற்றம் பெற்ற பல்வேறு தமிழ்க் குழுக்களும் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து தமது போராட்ட நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின.

இதனையடுத்து இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளும் விகாரமடைந்த நிலையில், இன்று இலங்கையின் இனப்பிரச்சனை ஓர் இரத்தக் கறை படிந்த விவகாரமாகவே விளங்குகின்றது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் இலங்கை இராணுவம் பல்வேறு பரிமாணங்களையும் பெறலாயிற்று. அன்று தேசிய பாதுகாப்பமைச்சராக இருந்த திரு.லலித் அத்துலத் முதலி இராணுவ விஸ்தரிப்பில் பெரும் ஆர்வங்காட்டினார்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மேதாவி, சிறந்த சட்ட அறிஞர் என்றெல்லாம் திரு. லலித் அத்துலத் முதலி அன்று விமர்சிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் லலித்தின் இந்த மேதாவித்தனம் ஜனநாயக ரீதியான நடைமுறைகளில் நாட்டமுடையதாகக் காணப்படவில்லை.

லலித், தேசிய பந்தோபஸ்து அமைச்சராக பதவி வகித்த போது விதவிதமான போர்த்தளபாடங்களும், போர்விமானங்களும் இலங்கை அரசினால் வாங்கிக் குவிக்கப்பட்டன. இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு என்ற நடவடிக்கையின் கீழ் அப்பாவித் தென்னிலங்கை இளைஞர்களுக்கும் போர்க்குணத்தை உண்டு பண்ணும் பணி விரிவாக இடம் பெற்றது.

இந்நிலையில் இலங்கையின் பாதுகாப்புச் செலவீனங்கள் பன்மடங்காகப் பல்கிப் பெருகத் தொடங்கின. அத்துடன் வருடாந்த வரவு செலவுத் திட்டங்களிலும் பாதுகாப்புத்துறைச் செலவீனமே பெரும்பங்கைத் தட்டிச் சென்றது.

பாதுகாப்புத்துறைச் செலவீனங்கள் இவ்வாறு பருமனடைந்து சென்றன.

## இராணுவச் செலவுகள் கட்டுமீறினால் நாடே நாசம் என்பது திண்ணம்!

ஆனால் இலங்கையின் பாதுகாப்பு நிலைமை மோசமான கட்டத்தை அடைந்திருந்ததே தவிர, இராணுவ நடவடிக்கைகளில் ஆரோக்கியமான வெற்றிகளை ஈட்டுவது கடினமானதாகவே காணப்பட்டது.

எனவே தற்போது இலங்கையின் முன்னேற்றத்துக்குத் தடைக் கற்களாக வடக்கு-கிழக்குப் பிரச்னையும், அதையொட்டிய பாதுகாப்புத்துறைச் செலவீனங்களுமே முக்கிய காரணங்களாக விளங்குவதை முழுநாடுமே நன்குணர்ந்துள்ளது.

பாதுகாப்புச் செலவீனங்களைக் கட்டுப்படுத்தாத வரை, இலங்கையின் மூலவளங்கள் புறக்கணிக்கப்படுவதுடன் நாடே நாசமாகப் போகும் நிலையே காலப்போக்கில் தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்நிலையில் இலங்கையின் அமைதிக்குச் சவாலாக விளங்கும் வடக்கு-கிழக்குப்பிரச்சனை விரைந்து, தீர்க்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது.

பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் முன்பாக விரிவான விளக்கத்தை வழங்கிய பின்னரே பாரிஸில் இலங்கைக்கான உதவித்தொகையைப் பெற்றுள்ளார்.

திரு.ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கு வழங்கப்படும் உதவித் தொகை எந்த வகையிலும் இராணுவச் செலவீனங்களுக்காகப் பயன்படுத்தப் படமாட்டாது எனவும் உறுதியளித்துள்ளர்.

மேலும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் அடிப்படை மனித உரிமைகள் விடயத்திலும் அக்கறை காட்டி திரு.ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.எனவே இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ள உதவிப் பணம், அழிவு நடவடிக்கைகளுக்கு அல்லாமல் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் உறுதியாக இருக்கின்றன.

இந்நிலையில் இலங்கை இராணுவ ந டிக்கைகளைக் கட்டுப்படுத்தி அதற்கான செலவீனங்களை மிகவும் குறைத்துக் கொள்ள வேண்டியது, இன்றியமையாததாகின்றது

பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க பாரிஸிலிருந்து கொழும்பு திரும்பியதும் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் இராணுவச் செலவீனங்களில் பாரிஸ் உதவிப்பணம் செலவிடப்படமாட்டாதெனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் திரு.ரணில் விக்கிரமசிங்க இலங்கை பெற்றுள்ள நிதி உதவியின் பயன்களை யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே நாட்டு மக்கள் அனைவரும் பிரதேச வேறுபாடின்றி அபிவிருத்தித் திட்டங்களின் பலாபலன்களை அனுபவிக்க வேண்டுமென்பதில் திரு.ரணில் விக்கிரமசிங்க அக்கறை கொண்டிருப்பதையே யாழ்ப்பாண மக்கள் பற்றியும் அவர் பிரஸ்தாபித்ததிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

திரு.ரணில் விக்கிரமசிங்க பாரிஸிலிருந்து இலங்கை திரும்பும் வழியில் இந்தியாவுக்கும் விஜயம் செய்திருந்தார். இந்தியத் தலைவர்களையும் சந்தித்து இலங்கை-இந்திய உறவுகள் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார்.

திரு.விக்கிரமசிங்க புதுடில்லியில் வைத்து பத்திரிகையாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனுடனும் தாம் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்க்க திரு.பிரபாகரன் அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முன்வர வேண்டும் எனவுப் வலியுறுத்தியிருந்தார்.

இந்தியாவில் அண்மைக்காலங்களில், அதாவது முன்னாள் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி கொலையுண்டதையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது இந்திய அரசு கடும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

இந்தியாவி் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அவ்வியக்கமே ராஜீவ்காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளதெனவும் இந்திய ஆட்சியாளர்கள் உறுதியாக நம்புவதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரனையும் இந்தியச் சட்டத்துறைக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று இந்திய அரசியலாளர்கள் சிலர் வலியுறுத்தியும் வருகின்றனர்.

ஆனால் இலங்கைப் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க பிரபாகரனுடன் தாம் நேரடிப் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதாகப் புதுடில்லியில் வைத்துக் கூறியிருப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இய்க்கத்தை இலங்கை அரசு முற்று முழுதாக நிராகரித்து விடவில்லை என்பதனையே தெளிவு படுத்தியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக பிரபாகரன் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த ஆண்டில் வலுவடைந்திருந்தது. அப்போது இலங்கை அமைச்சரவையின் பேச்சாளராக இருந்த திரு.ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் சட்டதிட்டங்களுக்கமையவே பிரபாகரன் குறித்த விடயத்தை இலங்கை அரசு கையாளும் எனவும் தெரிவித்திருந்தார்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நேரடியான பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வரும் பட்சத்தில் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதனையும், தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு சம்பந்தமாக இலங்கை அரசு அவசர முடிவுகள் எதனையும் எடுக்கப் போவதில்லை என்பதனையுமே திரு. ரணில் விக்கிரமசிங்காவின் கருத்துக்கள் தெளிவுபடுத்துவனவாக இருக்கின்றன.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தமது அரசியல் நிலைப்பாட்டினை தெளிவு படுத்த வேண்டியது இன்றைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது.

இலங்கை அரசு மட்டுமல்ல இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறை கொண்ட அனைத்து நாடுகளுமே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை அறிவதில் ஆர்வம் கொண்டுள்ளன. எனவே புலிகள் தமது நிலைப்பாட்டை தாமதமின்றித் தெரிவிப்பதன் மூலமே அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் சூழ்நிலைகள் உருவாக முடியும்.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்னை இத்தருணத்தில் ஒரு பரந்துபட்ட அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தையை வேண்டி நிற்கின்றது. இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் காத்திரமான பேச்சுக்களில் குதிக்க முன்வர வேண்டும்.

இதைவிடுத்து பண்டமாற்றம், கைதிகளின் பரிமாற்றட் என்ற விடயங்களில் மட்டுமே பேரம் பேசுவதில் புலிகள் ஆர்வங்காட்டுவார்களேயானால், தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை கொச்சைப்படுத்திய வர்களாகவே அவர்கள் அரசியல் வட்டாரங்களினால் நோக்கப்படுவர்.



# லேடீஸ் ஸ்பெசல்







இது பதினாறில் — இது இருபதில்




லிண்டா இவான்ஸ்

# அகத்தின் அழகே முகத்துக்கும் அழகு

## பிரபல நாயகி சொல்லும் பேரழகின் இரகசியம்

“எப்போதும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கையில் பிடிப்புடனும் இருந்தால் அதுவே உங்கள் முகத்தில் பிரகாசமான ஒளியைக் காட்டும்” இவ்வாறு கூறுகிறார், கடந்த வருடம் நவம்பர் 18ல் தனது 50வது வயதில் பிரவேசித்த ‘டினாஸ்ரி’ திரைப்பட நாயகி லிண்டா இவான்ஸ்.

இவர் தனது 20வது வயதில் இருந்ததை விட 50வது வயதில் அழகான உடல் அமைப்புடனும் கவர்ந்திழுக்கும் முக அழகுடனும் மிளிர்கிறார்.

“உங்கள் உள்ளம் அழகாக விருந்தால் நிச்சயமாக உங்கள் முகமும் அழகாகவே காட்சிதரும். இயற்கையாக நீங்கள் அழகாக இருக்கும் போது செயற்கை அழகு சாதனங்களால் முக அலங்காரத்தைத் தேடுவதில் எதுவித பலனுமில்லை. மனதளவில் மகிழ்ச்சி இருக்குமானால் இயல்பாகவே முகம் பிரகாசிக்கும். இயற்கை அழகு முகத்தை ஜொலிக்க வைக்கும்” என்கிறார் லிண்டா.

வாரத்தில் மூன்று தடவை சாதாரண தேகப் பயிற்சிகளை மேற்கொள்ளுகிறார். ஓரளவு பழுதாக்கும் கருவிகளையும் பயன்படுத்துகிறார். தினமும் 20 நிமிடம் சைக்கிள் சவாரி செய்வது போன்ற பயிற்சி தரும் சாதனத்தின் உதவியுடன் கால்களுக்குப் பயிற்சி தருகிறார்.

இவை எப்படி இருந்த போதிலும் உள் மனதில் மகிழ்ச்சி குடி கொண்டிருப்பதே தேக சுகம் நீடிக்க வழிவகுக்கிறது. உடல் அமைப்பை பக்குவமாக வைத்திருப்பதற்கும் முக அழகை என்றும் பாதுகாப்பதற்கும் அக அழகே பிரதானமானது என்று லிண்டா இவான்ஸ் கூறுகிறார்.

இப்போது ஐம்பதில்

படத்தில் உள்ளது லிண்டாவின் அழகு. அகத்தின் அழகால் பேரழகாக மாறிய கவர்ச்சிகர வளர்ச்சி. எனவே சந்தோசமாக இருங்கள். சந்தோசமாக வாழப் பழகுங்கள்.

நீண்ட மூக்கு உள்ளவர்கள் பவுடர் போடும்போது மூக்கின் இரு பக்கமும் பவுடரை சற்று அதிகமாகப் பூசிக்கொள்ளவேண்டும். இதனால் மூக்கின் அமைப்பு சற்று குறைந்து காணப்படுவதுபோல இருக்கும்.

---

கட்டான உடல் அமைப்பு அழகுக்கு மட்டுமல்ல ஆரோக்கியத்திற்கும் அவசியம்.

பெரும்பாலான பெண்கள் திருமணத்தின் பின் உடலமைப்பைப் பேணுவதில் அக்கறை செலுத்துவதில்லை.

வேறு சிலரோ- உடல் பயிற்சிகள் ஆண்களுக்கு மட்டுமே உரியது என்று கருதிவிடுகிறார்கள்.

இவையெல்லாம் தவறான எண்ணங்களாகும்.

பெண்களுக்கோ- ஆண்களுக்கோ அவர்கள் உடல் அவர்களது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.




## கட்டான உடல் வாகு பெற கடினமற்ற இருபது வழிகள்!

உடலைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உடலின் எடையை அதிகரிக்கவிடாமல் வைத்திருப்பது மிக முக்கியமானதாகும்.

உடல் எடையைக் குறைக்க சுலபமான 20 வழிகளை அமெரிக்க உளவியல் நிபுணர் ஒருவர் கண்டறிந்துள்ளார். இதோ-நீங்களும் அந்த இருபது வழிகளையும் அறிந்து கொள்ளுங்கள்.

1. கட்டுப்பாடான உணவுப் பழக்கத்தை இன்றே இப்போதே கடைப் பிடியுங்கள். இன்றிரவு இரவு வரையோ அல்லது அடுத்தவாரம் உங்கள் நண்பரின் திருமண விருந்துக்குப் பிறகோ ஆரம்பிக்கலாம் என்று ஒத்திப் போடாதீர்கள். இந்த நிமிடத்தில் உங்கள் உணவுக் கட்டுப்பாட்டுப் பழக்கத்தை ஆரம்பித்து விடுங்கள்.
2. உங்கள் பசியைக் கட்டுப்படுத்த மருந்து வகைகளை நாடாதீர்கள். எப்படி-எப்போது உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாட்டை உங்கள் மூளையே தீர்மானிக்க விட்டுவிடுங்கள்.
3. உங்கள் எடையைக் குறைக்க எத்தனை நாட்கள்-வாரங்கள்-மாதம் செல்லும் என்ற கால அட்டவணை தயாரித்துக் கொள்ளுங்கள். உடனடியாக அதிக எடையைக் குறைக்க அவசரப்படக்கூடாது.
4. எத்தகைய உணவை-எப்போது-எந்த அளவில் உட்கொள்ள வேண்டும் என்பதற்கான திட்டம் ஒன்றை தயாரித்துக் கொள்ளுங்கள்.
5. எந்த உணவில் எவ்வளவு கலோரி உள்ளது என்ற விசயத்தை முன் கூட்டியே அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி என்றால்தான் எத்தகைய உணவினை ஒதுக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வீர்கள்.
6. ஒரு கண்ணாடி முன் நின்று உங்கள் அங்கங்கள் அனைத்தையும் ஒரு முறை நிதானமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆடைகளை முற்றாகக் களைந்து விட்டு கண்ணாடியில் பார்க்கும்போது தான் அளவுக்கதிகமான சதை எங்கே உள்ளது என்பதை அவதானிக்க முடியும்.
7. நீங்கள் அளவுக்கு மீறிய எடை கொண்டவராக இருந்தமையினால் பல சந்தர்ப்பங்களில் நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பீர்கள். வெளி வட்டார வைபவங்களிலோ ஏனையோருடன் பழகுவதிலோ உங்கள் அளவுக்கு மீறிய எடை இடைஞ்சல்களை இடையூறுகளை ஏற்படுத்தியிருக்கக்கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களை ஒரு தடவை எண்ணிப் பாருங்கள்.
8. உங்கள் மணிக்கட்டில் ஒரு இரப்பர் வளையத்தை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு, நீங்கள் வகுத்துள்ள உணவுக் கட்டுப்பாட்டை மீறி ஏமாற்ற வேண்டும் என்று தோன்றினால், அந்த இரப்பர் வளையத்தை மூச்சுப்பிடித்து உடையுங்கள். உங்களுக்கத் தேவையற்ற உணவினை உட்கொண்டால் ஏற்படும் வேதனையுடன் தொடர்பு படுத்திக் கொள்ளவே இத் தண்டனை.
9. தினசரி 8 கிளாஸ் தண்ணீர் குடியுங்கள். ஆனால் உணவு உட்கொள்வதை தவிர்க்க வேண்டாம். நீண்ட நேரம் பசித்திருப்பத்தைத் தவிர்க்க சிறிதளவு உணவை இடைவேளையில் உண்ணலாம்.
10. கலோரி குறைந்த புதிய பழங்களை பிரதான உணவுகளின் பின்னர் புசியுங்கள்.

### மேலதிக ஊக்கங்கள்

11. தற்செயலாக ஒரு முறை உங்கள் பழக்கத்தைத் தவற விட்டாலும் கவலைப்படாதீர்கள். நீங்கள் முழுப்பலனை நீண்டகாலத்துக்கு அனுபவிப்பதற்காகவே உணவுக் கட்டுப்பாட்டை அனுசரிக்க ஆரம்பித்துள்ளீர்கள் என்பதை மறந்து விட வேண்டாம்.
12. ஒரு வாரத்துக்கு முன்னதாகவே உங்கள் அடுத்தவார உணவினைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள். குறிப்பிட்ட வேளையில் மட்டுமே உணவு உட்கொள்ளுங்கள்.
13. பதனிடப்பட்டு டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். எண்ணெயில் பக்குவப்படுத்தப்பட்ட மீன் அல்லது இறைச்சி வகைகளையோ சீனிப் பாணியில் ஊற வைத்து டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்களையோ உண்ணலாகாது. நீரில் வேக வைத்து டப்பாக்களில் அடைக்கப்பட்ட மீன் அல்லது இறைச்சி உகந்தது. அதே போன்று பழரசத்திலேயே பதனிடப்பட்ட (சீனியற்ற) பழவகைகளும் உண்ணத் தக்கவை.
14. அபத்தம் அல்லது தாக்கங்களிலிருந்து விடுபடவும் உட்கொள்ளும் உணவுகளிலிருந்த பெறப்படும் கலோரிகளை எரிக்கவும் ஏற்ற அளவான தேகப்பயிற்சி ஒவ்வொரு நாளும் தேவை. பயிற்சி உண்மையில் பசித்தன்மையைக் குறைக்கிறது. என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர்.
15. நீங்கள் உங்கள் எதிர்காலத்தில் எத்தகைய அளவில் தோற்றமளிக்க விரும்புகிறீர்களோ அதே அளவுக்கு ஏற்ற உடையினை தயாரித்துக் கொள்ளுங்கள். அடிக்கடி உங்கள் பார்வை படத்தக்க இடத்தில் அந்த உடையைத் தொங்க விடுங்கள். இதனால் உங்கள் ஊக்கம் அதிகரிக்கும்.
16. உணவு பரிமாறப்பட்ட தட்டில் உள்ள அனைத்தையும் தின்று விட வேண்டும் என்று கருதக்கூடாது.
17. தேகப் பயிற்சியை ஒரு விளையாட்டாகக் கருதுங்கள். நடப்பது நல்லது. சிறிய தூரங்களுக்கு சைக்கிளில் செல்லுங்கள்.
18. உணவு விடுதிக்குச் சென்றால் எதனைத் தருவிக்க வேண்டும் என்பதை முன்னதாகவே திட்டமிடுங்கள்.
19. நீங்கள் கேட்ட உணவு வகைகள் மேசைக்கு வந்து சேரத் தாமதமானால்வேறு நொறுக்குத் தீனிகளை இடையில் கொறிக்க ஆரம்பித்து விடாதீர்கள்.
20. நீங்கள் ஒரு விருந்து வைத்து அவ்விருந்து முடிந்ததும் எஞ்சியுள்ள உணவை- வீணாகிப் போய் விடுமே என்று நீங்களே உண்டு விட எண்ணாமல் விருந்தாளிகளிடமே அவற்றைப் பகிர்ந்தளித்து விடுங்கள்.

இந்த வழிமுறைகள் உடன் பலன் கொடுக்கும் என்று எண்ணிவிடக் கூடாது. பொறுத்தார் பூமியாள்வர். பொறுமையாக இந்த வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் நீங்கள் பூமியை ஆள்கிறீர்களோ இல்லையோ உங்கள் பூந்தேகத்தை நீங்கள் ஆளலாம். ■

அடுத்த முரசில்-
தையலர் விரும்பும்
தையல்கலை ஆலோசனை
**அழகுக் குறிப்புக்கள்**
மற்றும் பல சுவையான
அம்சங்களோடு-
லேடீஸ் ஸ்பெசல்

# மருத்துவ + விந்தைகள்


## இரும்புச் சத்து இதயத்தின் எதிரி

குருதியில் மேலதிகமான இரும்புச் சத்து இருக்குமானால் இருதய நோய் உண்டாகக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக உண்டு என்று புதிய கண்டு பிடிப்புகள் கூறுகின்றன. இரத்த அழுத்தம் அல்லது கொழுப்பு ஆகியவற்றைவிட மேலதிக இரும்புச்சத்து மிகவும் அபாய மானது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

"இரும்புச்சத்து இரத்த நாளங்களின் ஓரங்களை கடின மாக்குகிறது. இதனால் இரத்த ஓட்டம் தடைப்பட்டு இருதயத் துடிப்பு நின்றுவிட ஏதுவாகிறது" என்று கூறும் மருத்துவ நிபுணர் இறைச்சியில் இரும்புச்சத்து அதிகமாக இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இத்தகைய கண்டுபிடிப்பு, இரத்த அழுத்த நிலையை சீராக வைத்திருப்பதற்கு பண்டைய மக்கள் அனுசரித்த முறைகளை ஆய்ந்தறிய வழி வகுக்கும் என்று நம்பப்படுகிறது.

## பெண்களைத் தாக்கும் மார்புப் புற்றுநோய்
## தியானமே ஆயுதம்



இசைக்குயில் ஒலிவியா நியூட்டன்–ஜோன், பெண்களைத் தாக்கும் மாப்புப்புற்று நோயைப் போக்கவல்ல மருத்துவ முறையினைக் கண்டு கொண்டார். வேதியியல் முறை மருந்துகளை உட்கொள்ளு வதனால் ஏற்படும் பின் விளைவுகள் எதுவும் இம்முறையில் தலைகாட்டப் போவதில்லை என்று அவர் கூறுகிறார்.

45 வயதான இசைக் கலைஞரான ஒலிவியா, தினசரி தியானத்திலீடுபடுகிறார். இதனால் மார்புப் புற்றுநோய் மட்டுமல்ல வேறு எந்த நோயுமே உடலை அணுகாதென அவர் உத்தரவாதமளிக்கிறார்.

"ஆங்கில மருத்துவ (வேதியியல்) முறையிலான சிகிச்சையையே நான் பலகாலம் கடைப்பிடித்து வந்தேன். இதனால் வயிற்றுக் கோளாறு போன்ற பல பின்விளைவுகள் ஏற்பட்டு உபத்திரவமே மிஞ்சுகிறது." என்று கூறும் ஒலிவியா கடந்த வருடம் கோடைக்காலத்தில் மார்புப் புற்று நோயின் ஆரம்பக் குறிகளைக் கண்டு வேதியியல் சிகிச்சை பெற்று வந்தார். இன்று தியானம் மூலம் நோய்தீர்ந்து போதிய பலன் பெற்று விளங்குகிறார்.

"ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் தியானத்தில் ஈடுபடு கிறேன். அத்துடன் உடலுக்கு பூரண ஓய்வினையும் குறிப்பிட்ட அளவு கொடுக்கிறேன். இன்று என்னை அச்சுறுத்திய புற்று நோய்க்கான அறிகுறி எதுவு மற்றவளாகி விட்டேன்" என்கிறார் ஒலிவியா மகிழ்ச்சியாக. "உண்மையில் வேதியியல் மருத்துவ முறை என்னை மென்மேலும் நோயாளியாக்கியது" என்கிறார்.

"எல்லாவற்றுக்கும் மனமே காரணம் என்னை எதிர் கொண்டு வந்த பயங்கர வியாதியை எனது மன நிலையை ஒருமுகப்படுத்தி விரட்டியடித்து விட்டேன்" என்று கூறும் ஒலிவியா இப்பொழுது மாமிச உணவுகளை ஒதுக்கிவிட்டு காய்கறி உணவி னையே உட்கொள்கிறார். அளவான உடற்பயிற்சியையும் தினசரி செய்கிறார். "இன்று நான் மனத்தாலும் உடலாலும் உறுதி பெற்று விட்டேன். எந்த நோயும் என்னை அணுகாமல் பார்த்துக் கொள்வேன்" என்று கூறுகிறார்.





## அறுவைச் சிகிச்சையில் அறிமுகமாகும் புதிய முறை

சத்திரசிகிச்சையில் ஈடுபட் டுள்ள மருத்துவ நிபுணரின் தலைக்கவசத்தில் ஒரு சின்னஞ் சிறிய தொலைக்காட்சித் திரை பொருத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அவருடைய கத்தி எங்கெங்கு ஊர்கிறதோ அந்தந்த இடங்களை அவர் கமராதிரை மூலமே கண்டு கொள்ளலாம். வெட்டப்படும் உடலின் பாகத்தை நேரடியாகப் பாராமலே தனது கண்பார்வையை ரி.வி திரையில் செலுத்தி நுணுக்கமாகப் பார்த்துக் கொள்ள முடிகிறது.


மிகவும் நுண்ணிய அளவின தாக ரி.வி.கமரா ஒன்று ஒரு மெல்லிய குழாயுடன் பொருத்தப் பட்டு உடலில் சத்திரசிகிச்சைக் குட்படுத்தப்படவுள்ள பாகத்தின் ஒரு சிறு துளைவுக்குள் அனுப்பப் படுகிறது. உறுப்பின் பிரதிமை சிகிச்சை செய்யும் மருத்துவரின் கண்ணெதிரே –நெற்றியிலிருந்து பொருத்தப்பட்டுள்ள திரையில் தெரியும் கத்தியால் கீறி நடை பெறும் அறுவைகளை இவர் ரி.வி.திரையிலேயே துல்லியமாகக் கண்டு கொள்ளுகிறார். குனிந்து வளைந்து சிரமப்படாமல் அறுவைசிகிச்சை கச்சிதமாக நடைபெறுகிறது. இம்முறையினை மருத்துவ நிபுணர் டாக்டர் கிற்ஸ்ரோபர்எல்லிசன் அறிமுகப் படுத்தியுள்ளார்.

## முகப் பருக்களைப் போக்கடிக்கும் சுறா மீன் எண்ணெய்

முகப் பருக்களால் முகம் விகாரமடைகிறதே என்று எண்ணி ஏங்கும் இளவட்டங் களுக்கு ஓர் இதமான தகவல்!

சுறாமீன் பித்த நீரிலிருந்து ஒரு புதிய பூச்சு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம் மருந்தை முகப்பரு உள்ளவர்கள் தடவினால் முகப்பருவானாலும் –மோகப்பருவானாலும் விரைவில் பறந்து விடும். முகப் பொலிவும் அதிகரிக்கும்.

சுறாமீனின் ஈரலில் சுரக்கும் பித்த நீருடன் ஐசோலுட்ரோல் என்னும் திரவமும் இயற்கை யாகவே காணப்படுகிறது. இதனை நவீன மருத்துவ முறைகளைக் கையாண்டு சுத்திகரித்து ஒரு வகைப் பூச்சு மருந்தினை லண்டனிலுள்ள பிரசித்திவாய்ந்த சென் தோமஸ் மருத்துவமனை ஆய்வாளர்கள் உற்பத்தி செய்தனர். சருமத் திலிருந்து சுரக்கும் கொழுப்புடன் கூடிய ஒரு எண்ணைத் தன்மை சுரப்பதனாலேயே முகப்பரு தோன்றுகிறது. இந்த எண்ணைச் சுரப்பினை ஐசோலுட்ரோஸ் வேகமாகக் கட்டுப்படுத்துகிறது. இதனால் முகப்பரு உருவாவது தடை செய்யப்படுகிறது. இதே மருத்துவமனையில் முகப் பருக்களால் அவதியுறும் 15 பேருக்கு இப்புதிய மருந்து பூசுவதற்குக் கொடுக்கப்பட்டது. இவர்களில் 14 பேர் பூரண குண்மடைந்து விட்டனர்.



## முடக்குவாதம் கண்டோர் முகம்மலர இதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு

முதுகுத் தண்டில் ஏற்பட்ட தாக்கத்தினால் முடக்கு வாதம் கண்டு படுத்த படுக்கையாகக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகளைக் குணமளிக்க வல்ல மருத்துவ முறையினைக் கண்டு பிடிப்பதில் விஞ்ஞானிகள் அரும் பெரும் சாதனை ஒன்றினை நிலை நாட்டியுள்ளனர்.

முதுகுத் தண்டைப் பாதுகாக்கும் கொழுப்புப் போன்ற கவசம் மைலின் எனப்படுவது. இது முதுகுத் தண்டை மூடியிருக்கும். பாதுகாப்பு அளிக்கும் சக்தி மட்டுமே இதற்குண்டு. இப்பாதுகாப்பையும் மீறி முதுகுத்தண்டுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டு விட்டால் அதனைக் குணப்படுத்தும் வல்லமை மைலின் கவசத்துக்குக் கிடையாது. அதுமட்டுமல்லாமல் பாதிப்புக்குள்ளான பகுதியைக் குணப்படுத்த அனுப்பப்படும் மருந்துகளையும் உட்செல்ல விடாது மைலின் கவசம் தடுத்து விடுகிறது. இதனால் தான் முடக்குவாதம் கண்டு முடங்கிக் கிடக்கும் வெகு பலரை மீண்டும் எழுந்து நடமாட வைக்க முடியாமல் மருத்துவர்கள் திண்டாடுகிறார்கள். இப்பொழுது மைலினின் தடையை மீற ஓர் உபாயத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்து விட்டனர்.

மைலின் தேவையற்ற எந்தப் பொருட்களும் முதுகுத் தண்டை அணுகவிடுவதில்லை. அதே போல் சிதைந்து விட்ட ஜீவ அணுக்களுக்கும் பதிலாக புதியவை உற்பத்தியாவதையும் தடுத்துவிடுகிறது. பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மைலினின் இந்தத் தடையை மீறுவதற்கான வழிமுறைகளைக் கண்டு பிடித்து விட்டனர். கோழிக் குஞ்சுகளையே இப்பரிசோதனைக்குப் பயன்படுத்தினர்.

முதலில் கோழிக்குஞ்சுகளை முடக்குவாதத்துக்குட்படுத்தி நடமாட முடியாத நிலைக்காளாக்கினர். பின்னர் பாதிக்கப்பட்ட பாகத்தில் மைலின் வளர்ச்சியைத்தடை செய்யும் என்சைம்களை ஊசி மூலம் ஏற்றினர். பின்னர் பாதிக்கப்பட்ட பகுதிக்கான சிகிச்சை நடத்தப்பட்டது. பகுதி குணமடைந்ததும் மைலின் மீண்டும் செயற்பட வைக்கப்பட்டது. முடங்கிக்கிடந்தகோழிக்குஞ்சு துள்ளியோடித் திரிந்தது.

இனிமேல் முடக்கு வாதம் கண்டு முடங்கிக் கிடந்தவர்கள் ஓட்ட ஆட்டப் பந்தையங்களில் பங்குபற்ற இப்போதே விண்ணப்பங்களை அனுப்பலாம். ●

## சிறு குறிப்புக்கள்!

* இருபத்து மூன்று வினாடிகளுக்குள்ளாக, இரத்தம் தேகத்தை ஒரு சுற்று சுற்றி வருகிறது.
* நமது கண்களுக்கு 150 வகையான நிறங்களைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் இருக்கிறது.
* இந்தியாவில் தற்போது ஏறக்குறைய நாலரைக்கோடி மக்கள் நீரிழிவு நோயினால் கஷ்டப்படுகிறார்கள்.
* அமெரிக்காவில் 56 மில்லியன் மக்கள் பாலின வியாதியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## அட்வைஸ்
## பெற்றோர் எவ்வழி பிள்ளைகள் அவ்வழி



பிள்ளைகளின் நற்பண்பு, நல்லொழுக்கம், நல்ல பழக்கவழக்கம், பேச்சு என்பன பெற்றோரின் வளர்ப்பில் தான் பெரிதும் தங்கியி ருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அதே போன்று, பிள்ளைகள் ஒழுக்க சீலர்களாக வளர்ந்து வீட்டுக்கும், நாட்டுக்கும் நற்பணியாற்றி உயர்ந்த அந்தஸ்தைப் பெறும் போது, அந்தப் பெருமையும் பெற்றோரையே சார்கின்றது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

ஆனால், இந்தக் காலத்தில் பிள்ளைகளை குறிப்பாக ஆண் பிள்ளை களை, நல்லவர்களாக ஒழுக்க சீலர்களாக வளர்த்தெடுப்பது மிகமிகக் கடினமானதே. என்னதான் கண்டிப்பு, கறாருடன் பிள்ளைகள் வளர்ந்தாலும் வெளியில்–அதாவது தெருவில் இறங்கி சென்றுவிட்டால், கண்டிப்பு, கறார் எல்லாமே காற்றோடு காற்றாகி விடுகின்றது.

குறிப்பாக சிறுவர்களின் பேச்சில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெரியோரை மட்டுமல்ல, தன்னையொத்த பிள்ளைகளிடத்தில் கூட அவர்கள் மரியாதையுடன் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் பேச்சு நடத்தை இரண்டுமே, சிறுவர் தெருவில் இறங்கி விளையாடும் போது முற்றாக மாறி விடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தெருவில் பிள்ளைகள் மாபிள், உதைபந்தாட்டம், கிரிக்கெட் போன் றவை விளையாடும் போது அவர்களின் பேச்சு தானாகவே மாறிவிடுகின்றது. விளையாட்டு-போட்டி என்று வரும் போது வெற்றி தோல்வி சகஜம். ஆனால் தோல்வியைத்தழுவும் போது, கோபமிகுதியால் அவர்களின் வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் வெளிவருகின்றன. 'படுதூஷண' வார்த்தைகள். வயதில் பெரியோரும் கேட்டு உடல் கூசும் அளவுக்கு இவர்களின் பேச்சில் "கெட்ட வாடை" வீசுகின்றது. "அ"விலிருந்து "அஃகன்னா" வரையில் உள்ள கெட்ட வார்த்தைகள் இவர்களுக்கு அத்துப் படி. இதற்குப் பெற்றோரும் ஒரு வகையில் காரணக்கர்த்தாக்கள் ஆகின்றனர்.

எப்படி என்கிறீர்களா....?

ஒன்று: பிள்ளைகளை வீதியில் விளையாடவிடுவது.

பகல் பொழுதில் அம்மா களைத்துப் போய் தூங்க வேண்டும், பிள்ளைகள் வீட்டில் விளையாடினால் தொந்தரவு; தூங்கமுடியாது. உடனே அம்மா, "போய் றோட்டில் விளையாடு" என்று 'பச்சைக் கொடி' காட்டி விடுகிறார். அம்மாவே உத்தரவு வழங்கியபின் பிள்ளை மறுக்கவா போகிறான்? கிடைத்தது 'சான்ஸ்' என்று ஓடி விடுகிறான்.

மாலை-அம்மா தூங்கி எழுந்த பின்னர் தான்–கிட்டத்தட்ட மூன்று அல்லது நான்கு மணி நேரத்தின் பின்னரே அவன் வீடு திரும்புகிறான். இல்லை, அழைக்கப்படுகிறான்.

சில அன்னையரின் இத்தகைய கவலையீன போக்கினால் பிள்ளைகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். 'தூக்கம் தான் பெரிதென்றால் பிள்ளைகள் நிச்சயம் சாக்கடையில் தான் போய் விழ வேண்டும். ஒரு தாய் தன் பிள்ளையைக் கண்டித்து வீட்டில் வைத்திருந்தால் அவன் வீதிக்குச் செல்ல வேண்டியதில்லை அல்லவா?

விளையாடவென பிள்ளைகளை மைதானங்களுக்குப் பெற்றோர் அழைத்துச் செல்ல வேண்டும்.

இரண்டு: சில பெற்றோர் தம் பிள்ளைகள் தவறு செய்யும் போது கெட்ட வார்த்தைகளால் திட்டுவது. சிறு வயதிலிருந்தே இவற்றைக் கேட்டுப் பழகிப் போன பிள்ளை, இவற்றின் அர்த்தம் புரியாமல் மற்றவர்களைத் திட்ட பயன்படுத்துகிறான். "அம்மாவும் அப்பாவும் இப்படித்தானே திட்டு கிறார்கள் நான் திட்டினால் என்ன தப்பு?" இப்படி பிள்ளை கேட்டால் நாம் என்ன பதில் கூறுவது?

சிலர் சிறுவயதில் பிள்ளை தம்மைப் போன்றே கெட்ட வார்த்தை பேசும் போது அதனைக் கண்டிருப்பதில்லை. மாறாக ஏதோ உலக சாதனை செய்து விட்டதைப் போல பெருமைப்பட்டுக் கொள்ளவார்கள். இது பெரிய தவறு.

'பெற்றோர் எவ்வழி பிள்ளைகள் அவ்வழி' என்பார்கள். எனவே பெற்றோர் பிள்ளைகளுக்கு முன் மாதிரி காட்ட வேண்டும். மரியாதையுடன் பேச வேண்டும். இல்லையேல் அவர்கள் ஏவிய 'கணை' அவர்களையே தாக்கவும் கூடும்; சில வீடுகளில் தாக்கவும் செய்கின்றன. எத்தனையோ பெற்றோர் தம் பிள்ளைகள் இப்படித் தம்மைப் பேசி ஏசுகின்றனரே என்று கண்ணீர் வடித்துக் கலங்குவதை நாம் காண்கின்றோம்.

கிராமப் புறங்களில் கூட பிள்ளை கள் மரியாதையுடன் பேசக் கற்றுக் கொள்கிறார்கள். படிப்பறிவு கூடிய நகரப் பகுதிகளிலேயே இத்தகைய அவலம் ஏற்பட்டிருப்பது வருந்தத் தக்கதாகும்.

இந்நிலை எம்மிடையே நிச்சயம் மாற வேண்டும் - மாற்றப்பட வேண்டும். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள நாம் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

-லேகா-




## பிரசாந்தால் தடுக்கப்பட்ட தற்கொலை முயற்சி

விடுதலைப் போராட்ட தியாகியின் பேரனும், மந்திரி ஒருவரின் மகளும் ஒரே கல்லூரியில் படித்து வந்தனர்.

மந்திரியின் மகளுக்கு திமிர் அதிகம். ஒரு நாள் பாட்டுப் போட்டி. தன்னை யாரும் வெல்ல முடியாது என்று மந்திரி மகள் பாடவருகிறாள். போட்டியில் வென்றுவிடுகிறார் தியாகியின் பேரன.

மந்திரியின் மகளுக்கு மூக்கின் மேல் கோபம். அவனை அவமானப்படுத்தினாள். அவனோ பொறுமையாக இருந்தான். முடிவில் அவள் காதல் வலை விரித்தாள். தியாகியின் பேரனோ வலையில் சிக்கவில்லை. அதனால் மனமுடைந்து போன மந்திரி மகள் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தாள். அப்போது அவளைக் காப்பாற்றிய தியாகியின் பேரன் அவளது காதலை ஏற்றுக்கொள்கிறான்- கட்டியணைத்துக் கொள்கிறான்.

இதுதான் "கிழக்கே வரும் பாட்டு" திரைப்படக்கதையின் கரு. தியாகியின் பேரனாக பிரசாந் நடிக்க, மந்திரி மகளாக நடிப்பது சாமிளா. இசை - தேவா இயக்கம் - ராதாபாரதி



## திரைமாறிய நாயகி

நீனா குப்தா-இந்தித் திரை உலகின் கவர்ச்சிகர நாயகி இன்று சின்னத் திரையின் பக்கம் திரும்பியிருக்கிறார். தொலைக்காட்சி படங்களில் தோன்றுகிறார்.

தொலைக்காட்சி படங்கள் மூலமாக ரசிகர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு வந்து சேருகிறது என்கிறார். நீனாகுப்தா ரசிகர்களை திரைமூலம் சந்திக்க விரும்பும் இந்த நேரத்தில் ஒரு அந்த நாள் ஞாபகம்.

மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் மீது காதல் கொண்ட குப்தா அவரை தனிமையாக இனிமையான ஒரு பொழுதில் சந்தித்ததின் விளைவாக ஒரு குழந்தைக்கு தாயானார்.



## ரஜனி ஏன் தாடி வளர்க்கிறார்

வீரா - வாலியின் கிஷ்டியோவில் நடைபெற்ற 'உழைப்பாளி' பட பாடல் கசெட் வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்த ரஜினிகாந்தைப் பார்த்ததும் அனைவருக்கும் ஆச்சரியமான ஆச்சரியம். காரணம், முகத்தில் தாடியுடன் சோகமாக இருப்பவர் போல் காணப்பட்டார். ஏன் இப்படி இருக்கிறார் என்று அனைவரது முகத்திலும் வினாக்குறி. ரஜினி தாடி வளர்ப்பதற்குரிய மர்மம் என்ன? அவருடைய தயாரிப்பில் உருவாகி வரும் "வள்ளி" படத்தில் நடிகராக நடிக்கிறாராம். அதற்காகத்தான் தாடி. உண்மையாகவே வளர்க்கிறாராம் ரஜினி.



## காதோடு சொல்லுகிறோம்

★ இந்தி நடிகைகளை புகழ்ந்து யாராவது பேசிவிட்டால் போதுமாம். ஜஸ் நடிகைக்கு கெட்ட கோபம் வந்துவிடுமாம். எங்கிட்ட இல்லாத எதைத்தான் அவுங்ககிட்ட கண்டுட்டாங்க என்று கேட்டு ஒரு பிடி பிடிக்கிறாராம். அதுதானே!

★ அபிலாசையுள்ள நடிகை சொந்தமாகப் படம் தயாரித்து கையைச் சுட்டுக் கொண்டாராம். நிர்வாணமாய் நடித்து வந்த காசை அரை நிர்வாணமாய் அதிரடி காட்டி கரைக்க வேண்டியதாச்சு என்று கவலைப்படுகிறாராம்.

★ இருந்த சில்க்கையும் வெளுக்கப்போட்டுவிட்ட மாதிரி ஏறக்குறைய துணி இல்லாமல் அழகுகாட்டும் மீரா' தயாரிப்பாளர்களுக்கு கடும்செலவை உண்டாக்கிவிடுகிறாராம். தயாரிப்பாளர்கள் காரணம் கேட்டால் நெளிகிறாராம். அவளவுதான் தயாரிப்பாளர்கள் கனவில் மிதக்க, அவரோ அவர்களது செலவில் மிதக்கிறாராம்.

★ இசை ராஜாவுக்கும் அவர் தம்பிக்கும் ஏற்பட்ட தகராறு முற்றி விட்டதாம். இருவரது சம்சாரங்களுக்கும் இடையே ஏற்பட்ட நீயா? நானா? பிரச்சனைதான் விரிசலுக்கு காரணமாம். "ஆற அமர யோசிக்காமல் இசைராஜா மீது வசைபாடுகிறான். இசை ராஜா இல்லாவிட்டால் அவன் முகவரியே தெரியாமல் போயிருப்பான் மடையன்" என்று இசைராஜாவின் அண்ணன் அமரத் தம்பிமீது கண்டன அறிக்கை விடுத்துள்ளாராம். அமரத் தம்பி கொஞ்சம் சபலக் கேஸ் என்றும் ஒரு கதை.

★ 'கா' நடிகர் வெளியூர் படப்பிடிப்புகளுக்குப் போனால் தனியே தூங்கும் வழக்கமே கிடையாதாம். அவரது வீட்டரசிக்கு விஷயம் தெரிய பெரிய ரகளையாய்ப் போச்சுதாம். காத்திருக்க நேரமில்லை. உடனே ஆக்ஷன்.

★ கமரா பாலுவானவரின் கட்டளைப்படியெல்லாம் நடக்கும் அர்ச்சன நடிகை கமலின் படமொன்றிலும் நடிக்க மறுத்துவிட்டாராம். பாலுவானவர் என்ன சொன்னாலும் அதைச் செய்வதில் மட்டுமே அவர் கருமமே கண்ணாயிருக்கிறாராம்.

★ பூ நடிகை பிரபலமானபின்னர் சான்ஸ் கேட்டுவரும் புதுமுகங்கள் எல்லாம் பெரிய சைசினராக இருக்கிறார்கள். என்ன இழவடா இது என்று பிரபல இயக்குநர் ஒருவர் கவலைப்பட்டு பேசியிருக்கிறாராம்.

## நட்சத்திரங்கள் சிந்தியவை

எந்த மனிதனுக்கும் தொடர்ந்து தோல்வி வந்தால் கவலை வரத்தான் செய்யும். ஆனாலும் நான் நம்பிக்கையை இழக்கவில்லை. மீண்டும் வலம் வருவது உறுதி.

-ராமராஜன்-

"தமிழ் மகன்" திரைப்படத்தில் எனது முழுத் திறமையையும் வெளிப் படுத்தும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

-பிரசாந்-

நான் ஒரு தமிழ் பெண். அதனால்தான் "பொன்னுமணி" படத்தில் இயல்பாக சொன்னதைப் புரிந்து நடிக்க முடிந்தது.

-சௌந்தர்யா-

வாய்ப்புக்கள் தானாகத் தேடி வந்தால்தான் நடிகனுக்கு உண்மையான மதிப்பு. இப்போதெல்லாம் எதிர்நீச்சல் போட முடியவில்லையென்றால் எந்தத் துறையிலும் முன்னேறமுடியாது.

-நாசர்-

இந்த ஆண்டு சாதிக்காத ஆண்டு என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டு எனக்கு வெற்றிகரமான ஆண்டாக அமையும்.

-கார்த்திக்-

உலகத்தில் ஒரு ஆசை உறங்கிக் கொண்டிருக்கிறது. முழுக்க முழுக்க நடனப் பெண்மணியாக ஒரு திரைப்படத்தில் வலம் வர வேண்டும் என்பதே அது.

-கனகா-

வாய்ப்புத் தரட்டும் எனக்குள் உள்ள திறமைகளை வெளிப்படுத்துவேன்.

-வினோதினி-

ராசியில்லாத நடிகை என்ற என் பேரை "எஜமான்", "உள்ளே வெளியே" படங்களுக்குப் பிறகு உடைந்து விட்டது.

-ஐஸ்வர்யா-





## ரூபினியின் எதிர்பார்ப்பு!

தமிழில் பிரபல நடிகர்களோடு தாராளமாக நடித்தும் கூட பிறகு சான்ஸ் இல்லாமல் போனவர் ரூபினி.

கன்னடப்படவுலகில் ரூபினி நடித்த எட்டுப் படங்கள் வெற்றிக் கொடி நாட்டியும் கூடஅங்கும் சான்ஸ் குறைவுதானாம்.

இப்போது தெலுங்கில் இரு படங்கள் நடித்துள்ளார்.

தமிழில் மீண்டும் தன் திறமையைக் காட்ட அவர் எதிர்பார்த்திருக்கும் திரைப்படம் "பத்தினிப் பெண்". பொலிஸ் அதிகாரி திலகவதி எழுதிய கதைதான் பத்தினிப் பெண் என்ற பெயரில் படமாகிறது.

## உழைப்பாளியின் வசூல்!

ரஜனி நடித்து வெளியாகியுள்ள "உழைப்பாளி" இப்போது இலங்கையிலும் சின்னத்திரைகளில் தலைகாட்டுகிறது. ஜுன் 24ம் திகதி வெளியான படத்திற்கு ஜுலை 10ம் திகதி வரையான ரிக்கற்றுக்கள் அனைத்தும் தமிழகத் திரையரங்குகளில் முன் பதிவு செய்யப்பட்டுவிட்டன.



ர்சனம்

"...து வசந்தம்" போன்ற படங்களை வழங்கிய சூப்பர் குட் பிலிம்ஸ், இயக்குநர் விக்ரமனை வைத்து ஓரளவு வித்தியாசமான கதையைத் தந்திருக்கிறது.

சண்டைக்காட்சிகளில் தூள் கிளப்பும் அர்ஜுனுக்கு இதில் கௌரவ வேடம். அளவாக வந்து நிறைவாகச் செய்துள்ளார்.

பிரபல பாடகியான பானுப்பிரியா பெங்களூரில் இருந்து [illegible] என்னும் பதிக்கு பாட வருகிறார்.

அங்கே கோகுலம் இல்லத்தில் மகனை இழந்த குடும்பம் வறுமையில் வாடுகிறது. பானுப்பிரியா உதவுகிறார். ஏன் இந்த இரக்கம் என்று ஆராயும் போது மகன் அர்ஜுன் சாவுக்கு பானுப்பிரியா தான் காரணம் என்று தெரியவருகிறது. விளைவு என்ன? அதுதான் கதை.

பானுப்பிரியா குறை வைக்கவில்லை. பாடல் காட்சிகளிலும் அர்ஜுன் உதவியோடு குழைந்து-நெளிந்து வளைந்திருக்கிறார்.

'சின்ன - சின்ன ஆசை' பாடலை பால் கலந்து காப்பி குடித்துவிட ஆசை என்று மாற்றி எழுதி பழனி பாரதி புரட்சி செய்துள்ளார்.

படப்பிடிப்பு - அண்ணாத்துரை. பரவாயில்லை.

"புதுவசந்த"த்திற்குப் பிறகு கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் என்று பொறுப்பேற்று மீண்டும் தனது தனித்துவத்தை காப்பாற்ற விக்ரமன் செய்துள்ள முயற்சி பெரும்பாலும் வெற்றி.



# மினி சினி

★ தசரதன் படம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறாததால் அடுத்த படத்தை சொந்தமாகவே தயாரித்து இயக்கப் போகிறாராம் கிட்டி. இதில் காதலை ஒரு புதிய கோணத்தில் சொல்ல இருக்கிறாராம்.

★ இந்த ஆண்டுகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என எல்லா முன்னணிக் கதாநாயகர்களுடனும் எழுபது படங்களில் நடித்துள்ளார் கௌதமி.

★ நகைச்சுவை நடிகர் செந்தில் விரைவில் சொந்தமாகப் படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். இப்படத்தில் முழுக்க முழுக்க நகைச்சுவை நடிகர்கள் மட்டுமே நடிக்கிறார்கள்.

★ அருண்பாண்டியன், ராம்கி, விக்னேஷ், ஹரிராஜ், ரோஹிணி, வினோதினி, ரஞ்சிதா, விசித்ரா, சங்கவி போன்ற நட்சத்திரங்கள் நடன இயக்குநர் கலாவிடம் நடனப் பயிற்சி பெறுகின்றனர்.

★ பி.வாசு எடுக்க இருக்கும் சொந்தப்படத்தை சந்தானபாரதி இயக்குகின்றார். நடிக நடிகையர்களை புதுமுகங்களாகப் போட வாசு திட்டமிட்டுள்ளார்.

★ சரியா மார்க்கெட் இல்லாமல் இருந்த பாண்டியராஜன் "புருஷன் எனக்கு அரசன்" வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மூன்று புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ தமிழில் முன்னணி நடிகைகள் பின்னணி பாடி வருகிறார்கள். இந்த ஆசை இந்தி நடிகைகளுக்கும் வந்து விட்டது. இந்தியில் ஸ்ரீதேவிக்கு அடுத்த இடத்தில் உள்ள தேஸாப் புகழ் மாதுரி டிக்சிட் விரைவில் பாட இருக்கிறார்.

★ பின்னணிப் பாடகர் மலேசியா வாசுதேவனின் 17 வயதான மகன் யுகேந்திரன் "உழவன் மகன்" படத்தில் வந்த 'செம்மறி ஆடே...' பாடலில் சில வரிகள் பாடினார். மீண்டும் இவர் தேவாவின் இசையில் "தெய்வசாட்சி" படத்தில் பாடுகிறார்.

★ பாக்கியராஜ் அடுத்துத் தயாரிக்கவுள்ள சொந்தப்படத்தை அவர் இயக்கப் போவதில்லை. இயக்கப் போவது மலையாளப்பட இயக்குநர் பிரியதர்ஷன்.

★ "ஒருதலைராகம்" படத்தைத் தயாரித்தவர் இப்ராஹிம். நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார். ரொபேட்-ராஜசேகர் இரட்டையர்களில் ஒருவரான ராஜசேகர் அதை இயக்கவுள்ளார்.





மணிரத்தினத்துடன் சுகாசினி



## சோர்ந்து போகாத ராஜா!

தமிழ்த் திரையுலகில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய "பா" இயக்குநர்கள் வரிசையில் பாரதிராஜாவும் ஒருவர் என்பது அறிந்ததே. ஏனோ இவரது படங்கள் அடுத்தடுத்து தோல்வியை தோல்வி கண்டன. தற்போது ஒரே சமயத்தில் நான்கு படங்களை இயக்க எண்ணியுள்ளார்.

முற்றிலும் புதுமுகங்களுடன் தனது சொந்தப்படத்தையும், இவரால் அறிமுகமான டாக்டர் ராஜசேகரின் படத்தையும், கலைப்புலி எஸ்.தாணுவின் படத்தையும், விஸ்வநாதன்-ராமமூர்த்தி இரட்டையர்கள் இசையில் எம்.எஸ்.விஸ்வநாதனின் மகன் கோபி தயாரிக்கும் ஒரு படத்தையும் இயக்குகிறார்.

## சுகாசினியின் இலட்சியம்

ஒளிப்பதிவாளர் அசோக்குமாரிடம் உதவியாளராக இருந்து "நெஞ்சத்தைக் கிள்ளாதே" படம் மூலம் நடிகையான சுகாசினி, "சிந்து பைரவி" மூலம் சிறந்த நடிகைக்கான தேசிய விருதைப் பெற்றவர்.

பின்னர் இயக்குநர் மணிரத்தினத்தைத் திருமணம் செய்து கொண்டு ஓரிரு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். அண்மையில் வாய் நிறையச் சிரிப்போடு சந்தோசமாகக் காணப்பட்ட சுகாசினி, 'என் வாழ்க்கை லட்சியம் ஒன்று விரைவில் நிறைவேறப் போகிறது' என்றார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வைத்து ஒரு படத்தை இயக்கப் போகிறார். இதற்கான கதையை நடிகர் திலகம் கேட்டு விட்டு நடிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளாராம். மருத்துவ பரிசோதனைக்காக ஓய்வில் இருக்கும் நடிகர் திலகம் சிகிச்சை முடிந்ததும் நடிக்கவுள்ளார்.

இப்படத்தை சுகாசினியின் கணவரான மணிரத்தினத்தின் அண்ணன் 'ஜீ.வீ.' தயாரிக்கிறார்.



ரூபினி



# சினி விருந்து



## மீண்டும் பாலகுமாரன்!

"தலைவாசல்", "அமராவதி" படங்களைத் தயாரித்த சோழா கிரியேஷன்ஸ் அடுத்து புதிய இயக்குநரான ராம்பிரசாத் இயக்க "தோழன்" என்னும் படத்தைத் தயாரிக்கிறது.

இப்படத்திற்கு "இது நம்ம ஆளு", "குணா", "ஜென்டில்மேன்" போன்ற படங்களுக்கு கதை வசனம் எழுதிய பிரபல எழுத்தாளரான பாலகுமாரன் கதை வசனம் எழுதவுள்ளார். நடிகர், நடிகைகளுக்கான தேர்வு நடந்து வருகின்றது.



## குங்ஃபூ நாயகன்



### வீரத்திற்கு வயதில்லை

[illegible]

## இன்னொரு வாரிசு

[illegible]



## கவியரசரின் மகள் கவிஞராகிறார்

கவியரசு கண்ணதாசன் பல திரைப் படங்களுக்கு திரைக்கதை வசனம் எழுதியவர்.

அவர் எழுதிய கதை ஒன்று திரைப் படத்திற்கேற்ற அமைப்பாக இருந்தது. அதனைத் திரைப்படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் அவரது மகள் விஷாலி கண்ணதாசன்.

விஷாலி ஏற்கனவே "வானமே எல்லை" படத்தில் பாலச்சந்தரின் இயக்கத்தில் நடித்தவர்.

இப்போது கண்ணதாசனின் திரைக் கதையைப் படமாக்கும் போது அதில் ஒரு முக்கிய பாத்திரத்தில் தோன்ற இருக்கிறார். அதுமட்டுமல்ல பாடல்கள் அனைத்தையும் அவர்தான் எழுதப் போகிறார். மின் குழுக்கு..!

விஜி



## கூட்டோடு கூடாக

[illegible]

# பாப்பா முரசு

## பல்கேரிய நாட்டு சிறுகதை

# வஜ்ஜிரக்கல்

பாவெல் என்னும் சிறுவன் பல்கேரியா நாட்டில் வசித்து வந்தான். பல்கேரியா ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள ஒரு நாடு.

பாவெல் தினமும் காலையில் பசுக்களை மேய்ப்பதற்காக கூட்டிச் செல்வான்.

அவன் வசித்த ஊருக்கு அருகே ஒரு மலை இருந்தது. அவற்றின் அடிவாரத்தில் அடர்ந்த காடு இருந்தது. பசுக்களை மேய விட்டு மாலையில் வீட்டிற்குத் திரும்பக் கூட்டி வருவான் பாவெல்.

ஒவ்வொரு நாளும் செய்வது போலவே அன்றும் பசுக்களை மேய்ப்பதற்காகக் காட்டிற்குக் கூட்டிச் சென்றான். புல் நிறைந்த காட்டுப் பகுதியில் அவனது பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன.

காட்டின் இன்னொரு பக்கம் விண்ணை நோக்கி அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் காற்றினால் ஆடி ஒன்றோடொன்று உராய்ந்து கொண்டன. மழையின்மையால் உலர்ந்து போயிருந்த மரங்கள் உராய்ந்து கொண்டதால் தீப்பற்றி எரிந்தன.

"தீ!தீ! என்னைக் காப்பாற்றுங்கள். நெருப்பு என்னைப் பொசுக்கிவிடும். சீக்கிரமாக என்னைக் காப்பாற்றுங்கள்" என்று மனிதர்கள் பேசுவது போல கூக்குரலிட்டது ஒரு பெரிய மரம்.



திடீர் ஒலியைக் கேட்டு ஆச்சரியமடைந்தான் பாவெல். குரல் வந்ததிசையில் உற்று நோக்கினான். அங்கே!

மரக்கிளை ஒன்றில் பரிதவித்துக் கொண்டிருந்தது ஒரு கொக்கு. அதுதான் கூக்குரலிட்டது. மரம் இல்லை என்று அப்போது தான் தெரியவந்தது, பாவெலுக்கு.

உடனே ஒரு தாவு தாவி கொக்கு இருந்த கிளையை உடைத்துச் சற்று தூரத்தில் எறிந்தான். "தீயின் பிடியிலிருந்து உயிர்தப்பினோம்" என்று நிம்மதியடைந்தது கொக்கு.

"சிறுவனே! என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி. பறவையாகிய நான் நீ செய்த உதவிக்கு எப்படி கைமாறு செய்வேன்? இருந்தாலும் உனக்கு இந்த வஜ்ஜிரக்கல்லைத் தருகிறேன்" என்று தனது தொண்டையிலிருந்த வஜ்ஜிரக்கல்லை அலகின் வழியாகக் கக்கியது, கொக்கு.

சூரிய ஒளியில் பளபளத்த வஜ்ஜிரக்கல்லைக் கண்டதும் திகைத்துவிட்டான் பாவெல்.

"இந்த வஜ்ஜிரக்கல்லை நீ மூன்று முறை நிலத்தில் தேய். நீ நினைப்பதைக் கொடுக்கும்" என்று கூறிவிட்டு விர்ரெனப் பறந்து சென்றது கொக்கு.

மாலை நேரமாகி விட்டதால் அதை எடுத்துக் கொண்டு பசுக்களைக் கூட்டிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான் பாவெல்.

ஜிம்மி நாயும், ஜிக்கி பூனையும், பாவெல் அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து வரும் செல்லப் பிராணிகள். சந்தோசத்துடன் வஜ்ஜிரக் கல்லை அவற்றிற்குக் காட்டினான். பேரொலியால் அவற்றின் கண்கள் கூசின. உடனே அவை கண்களை மூடித் திறந்து ஆச்சரியமாகப் பார்த்து ஆரவாரம் செய்தன.

தனது வீட்டிலிருந்த பழைய இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொண்டான் பாவெல்.

அன்றிரவு வெகு நேரமாகியும் தூங்கவே இல்லை அவன். வஜ்ஜிரக்கல்லைப் பற்றிய நினைவே அவனுக்கு. அதைப் பரீட்சித்துப் பார்க்கலாமா? வேண்டாமா என்ற சிந்தனைப் போராட்டத்திலேயே மூழ்கியிருந்தான்.

நள்ளிரவு! ஒரு வழியாக அதைப் பரீட்சித்துப் பார்த்துவிடுவதென்று முடிவுக்கு வந்து, படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

இரும்புப் பெட்டியிலிருந்து வஜ்ஜிரக்கல்லை எடுத்துக் கொக்கு சொல்லியபடியே மூன்றுமுறை தரையில் தேய்த்தான்.

"என்வீடு அரண்மனையாக மாற வேண்டும்" என்று கண்களை மூடிக்கொண்டு நினைத்தான். பாவெல் கண்களை திறந்த போது வீடு அரண்மனையாகிவிட்டது.

பிரம்மாண்டமான அறைகள். ஒவ்வொரு அறையிலும் நிலைக்கண்ணாடிகள், தந்தங்களாலான மேசைகள், நாற்காலிகள், சோபாக்கள் கட்டில்கள், ஆஹா!என்று கூவிக்கொண்டே சமையலறைக்குச் சென்றான். அங்கே...எல்லா பாத்திர பண்டங்களும் தங்கத்திலும், வெள்ளியிலுமிருந்தன.

பேரானந்தம் அடைந்தான் பாவெல். அடுத்த வீட்டிற்கு ஓடினான். நள்ளிரவில் அடுத்த வீட்டில் வசிக்கும் கிரிகோரியை எழுப்பினான். கிரிகோரியிடம் நடந்தவற்றை எல்லாம் கூறினான் பாவெல்.

வெளியே வந்து பார்த்து விட்டு "ஆவ்" என்று வாயைப் பிளந்தான் கிரிகோரி.

நேற்று வரை இருந்த குடிசை அங்கே இல்லை. பதிலாக ஏழடுக்கு மாளிகை உப்பரிகைகள் பலகணிகளுடன் இருந்தது.

தனது மாளிகைக்கு வந்து கட்டிலில் தூங்கிவிட்டான் பாவெல். ஆனால் பக்கத்து வீட்டுக் கிரிகோரிக்கு இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை.

கிரிகோரி திடீரென எழுந்து வெளியே வந்து மாளிகையின் பின்புறப் பலகணியாக உள்ளே சென்று வஜ்ஜிரக்கல்லைத் திருடிக் கொண்டு வந்து விட்டான்.

தனது வீட்டிற்குள் வந்ததும், வஜ்ஜிரக்கல்லை மூன்று முறை தேய்த்தான். கண்களை மூடிக்கொண்டு, "பாவெலின் மாளிகை டான்யூப் நதியின் எதிர்க்கரைக்கு மாறிப் போகவேண்டும்" என்று நினைத்தான் கிரிகோரி. தானும் அங்கே மாறிவிட வேண்டும் என்று நினைத்தான். அவ்விதமே நிகழ்ந்து விட்டது.



காலையில் கண்விழித்ததும், தான் பழைய வீட்டிலேயே இருப்பதைக் கண்டு திகைத்து விட்டான் பாவெல். வெளியே வந்து கிரிகோரியின் வீட்டைப் பார்த்தான். அங்கே அவனது வீடு இல்லை. அவசர அவசரமாக வீட்டிற்குள் வந்து இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தான். வஜ்ஜிரக்கல் இல்லை. கவலையுடன் திண்ணைமீது வந்து உட்கார்ந்து கொண்டான்.

பாவெல் கவலையுடன் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவனது செல்லப் பிராணிகளான ஜிம்மியும், ஜிக்கியும் டான்யூப் நதியை நோக்கி ஓடின.டான்யூப்பை அடைந்ததும் ஜீம்மி தனது முதுகின் மீது ஜிக்கியை ஏற்றிக்கொண்டு நீரில் நீந்தி எதிர்க்கரையை அடைந்தது. அங்கிருந்த தமது எசமானனான பாவெலின் மாளிகையை அடைந்தன.

வஜ்ஜிரக்கல்லை தலையணையின் அடியில் பத்திரமாக வைத்துக் கொண்டு ஆழ்ந்த தூக்கம் போட்டுக் கொண்டிருந்தான் கிரிகோரி.

ஜிக்கி அவன் மீது சீறிப் பாய்ந்தது. பயந்து போன கிரிகோரி எழுந்து ஓடினான். கட்டிலின் தலைப்பக்கம் காத்திருந்த ஜிம்மி தலையணைக்கு அடியிலிருந்த வஜ்ஜிரக்கல்லைக் கவ்விக் கொண்டு வெளியே வந்தது. அங்கே காத்திருந்த ஜிக்கியை பழையபடி முதுகின் மேல் ஏற்றிக் கொண்டு வாயில் வஜ்ஜிரக்கல்லுடன் டான்யூப் நதியில் குதித்து நீந்தியது.

நடு வழியில் ஜிம்மியின் வாயினுள்ளிருந்த வஜ்ஜிரக்கல் ஆற்று நீரில் தவறி விழுந்து விட்டது. கைக்கெட்டியது வாய்க்கெட்டியும் தவறிவிட்டதே, கடவுளே! நீதான் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொண்டன. ஜிம்மியும், ஜிக்கியும் கொஞ்சத்தூரம் சென்றதும் எதிரே ஒரு படகு வந்து கொண்டிருந்தது. அதன் உள்ளே நிறைய மீன்கள் இருந்தன. ஒரு மீனவன் அந்தப் படகைச் செலுத்தி வந்தான். படகு அருகில் வந்ததும் ஜிம்மியும், ஜிக்கியும் அதில் தாவி ஏறிக்கொண்டன. ஜிம்மி அவன் எதிரில் வாலை ஆட்டி தீனக்குரலில் "உய்ய உய்ய" என்று கத்தியது. ஜிக்கி அவன் மடியில் தாவி உட்கார்ந்து கொண்டு "மியாய் மியாவ்" என்று கத்தியது.

அந்த மீனவன் மிகுந்த கருணை உள்ளம் கொண்டவன். அவை இரண்டும் பசியால் தவிக்கின்றன என எண்ணி இரண்டு பெரிய மீன்களை அவற்றிற்குச் சாப்பிடக் கொடுத்தான். ஜிம்மி மீனைக் கடித்ததும் அந்த மீனின் வயிற்றுக்குள் இருந்து வஜ்ஜிரக்கல் விழுந்தது. படகு முழுவதும் பிரகாசமாகியது. மீனவனின் கண்கள் கூசின.

மீனவன் வஜ்ஜிரக்கல்லை எடுத்துக் கொண்டு யோசித்தான். ஜிம்மியும், ஜிக்கியும் கரைப்பக்கம் பார்த்துச் சத்தமிட்டன. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஜிம்மியும், ஜிக்கியும் செய்த சைகைகளின்படி சென்று பார்ப்போம் என்று மீனவன் படகைக் கரைக்குச் செலுத்தினான்.

கரையில் இறங்கியதும் ஜிம்மி மீனவனின் உடையைக் கவ்விப் பிடித்து இழுத்தது. ஜிம்மியும் ஜிக்கியும் பாவெல் வீடு இருக்கும் திசையில் செல்ல, மீனவனும் அவைகளைத் தொடர்ந்து சென்றான். மூவரும் பாவெல் வீட்டை அடைத்தனர். மீனவனிடம் வஜ்ஜிரக்கல் உள்ளது என்று ஜிம்மி சைகையினால் தெரிவித்தது. மீனவனும் நடந்தவற்றை எல்லாம் கூறி வஜ்ஜிரக்கல்லை பாவெலிடம் ஒப்படைத்தான். பாவெலும் வஜ்ஜிரக்கல்லின் கதையை மீனவனிடம் கூறினான்.

வஜ்ஜிரக்கல்லை மூன்று முறை தேய்த்து பழையபடி மாளிகை செல்வம் நிறைய அடைந்தான். மீனவனையும் தன்னுடனேயே வைத்துக்கொண்டான்.

அதன் பிறகு வஜ்ஜிரக்கல்லைப் பத்திரமாக வைத்துக் கொண்டு நால்வரும் சுகமாக வாழ்ந்தனர்.

●

# கழுதை ராஜா பிறந்த நாள்

ஒரு கிராமத்தில் குப்பு என்பவர் கழுதை வளர்த்து வந்தார்.

கழுதை ராஜாவுக்கு பிறந்த நாள் வந்தது. தன் செல்ல கழுதையின் பிறந்தநாளிற்காக பல வகை பழங்களும், ஸ்வீட் வகைகளும், பிஸ்கட்டுகளும் வாங்கி வந்தார் குப்பு.

குப்பு: ஏய்! ராஜா! உனக்காக என்னேன்ன வாங்கி வந்திருக்கிறேன் பாரு?
கழுதை ராஜா: இதெல்லாம் எனக்கு வேண்டாம்.
குப்பு: வேறு என்ன வேணும் ராஜா?
கழுதை ராஜா: அஞ்சு முட்டை பழைய காகிதம் வேணும்.
குப்பு: அது சரி உன்புத்தி உன்னை விட்டு போகுமா.
செல்லக் கழுதையின் விருப்பப்படி ஐந்து மூட்டை பழைய காகிதத் தாள் வாங்கி வந்தார் குப்பு.
குப்பு: இந்தா நீ கேட்டது. இப்ப உனக்கு சந்தோஷம்தானே?
கழுதை ராஜா: ......ஐய் காகித மூட்டை. சந்தோஷம் தான் இனி அஞ்சு நாளைக்கு தேடி அலையத் தேவை இல்லை.

கழுதை ராஜாவை குளிப்பாட்டி நிற்க வைத்தார்.

குப்பு: நில்! உனக்கு நான் திருஷ்டி சுத்தி போடுகிறேன்.
கழுதை ராஜா: இது என்ன நெருப்பு வச்சு சுத்துகிறார்?

கற்பூரத்தை பார்த்தவுடன் பயந்த கழுதை திரும்பி பின் காலால் ஒரு உதை விட்டு விட்டு ஓட்டம் பிடித்தது.

குப்பு: சும்மாவா சொன்னாங்க கழுதைக்கு தெரியாது கற்பூர வாசனை என்று. அது சரியாத்தான் இருக்கு.

சி. சுபாஷினி
ஆண்டு: 8
நல்லாயன் அரசினர்.

# கண்டு பிடிப்புக்கள்

1. தொலைக்காட்சியை கண்டு பிடித்தவர் யார்? லொஜி பெயார்ட்.
2. நீராவி இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்? ஜேம்ஸ் வாட்
3. புகையிரதத்தை கண்டுபிடித்தவர் யார்? ஜோர்ஜ் ஸ்ரீவன்சன்.
4. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்? கிறஹம் பெல்.
5. மோட்டார் வாகனத்தை கண்டு பிடித்தவர் யார்? டெம்லர்.
6. வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்? மார்க்கோணி.
7. ஆகாய விமானத்தை கண்டு பிடித்தவர் யார்?ரைட் சகோதரர்கள்.
8. மின் குமிழைக் கண்டு பிடித்தவர் யார்?தோமஸ் அல்வா எடிசன்.
9. தொலை நோக்கியை கண்டுபிடித்தவர் யார்? கலிலியோ கலிலி.
10. புவி ஈர்ப்பு சக்தியை கண்டு பிடித்தவர் யார்? ஐசாக் நியூட்டன்.

றிபான் எம். ஜாபிர்
ஆண்டு-11
சம்சுதீன் மு.வி.
வேருவலை.

**உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. நீங்கள்தானே நாளைய எழுத்துலக நாயகர்கள்.**

# உலகின் இரண்டாவதுகள்

1. உலகின் மிகப் பெரிய இரண்டாவது கண்டம். ஆபிரிக்கா.
2. சூரிய மண்டலத்தில் இரண்டாவது பெரிய கோள். சனி.
3. மிகப் பெரிய இரண்டாவது மலைச் சிகரம். காட்வின் சிகரம்.
4. மிகப் பெரிய இரண்டாவது பாலைவனம். லிபியா.
5. மிகப் பெரிய இரண்டாவது தீவு. கிரீன்லாந்து.
6. மிகப் பெரிய இரண்டாவது மகா சமுத்திரம். அட்லாண்டிக்.
7. மிகப் பெரிய இரண்டாவது கடல். கரீபியன் கடல்.
8. மிகப் பெரிய இரண்டாவது நதி. நைல்
9. மிகப் பெரிய இரண்டாவது நீர்வீழ்ச்சி. குகோணம்.
10. மிகப் பெரிய இரண்டாவது பெரிய நாடு. கனடா
11. அதிக மக்களால் பேசப்படும் இரண்டாவது மொழி. ஆங்கிலம்.
12. மக்கள் தொகையில் மிகப் பெரிய இரண்டாவது நாடு. இந்தியா.

செல்வன் ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

# உலக நிறுவனங்களும் அவற்றின் தலைமையகங்களும்

| | |
|---|---|
| ஐக்கிய நாடுகள் தாபனம் | நியூயோர்க் |
| உணவு விவசாய நிறுவகம் | ரோம் |
| சர்வதேச தொழிலாளர் நல நிறுவகம் | ஜெனிவா |
| ஐ.நா.கல்வி.விஞ்ஞான, கலாசார நிறுவகம் | பரீஸ் |
| உலக சுகாதார நிறுவகம் | ஜெனிவா |
| உலக வங்கி | வொஷிங்டன். |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம். | வொஷிங்டன் |
| சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் | வொஷிங்டன் |
| சர்வதேச நாணய நிதி | வொஷிங்டன் |
| சர்வதேச அஞ்சல் ஒன்றியம் | பேர்ண் |
| சர்வதேச தொலைச் செய்தி போக்குவரத்து ஒன்றியம்- | ஜெனிவா |
| உலக வளிமண்டல நிலை ஆராச்சி நிறுவகம் | ஜெனிவா |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி | ரோம் |
| சர்வதேச அணுசக்தி முகவராண்மை | வியன்னா |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் | நியூயோர்க் |
| ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி | நியூயோர்க் |
| உலக உணவுத் திட்டம் | ரோம். |

ஆர் . தம்ஸீர் முஹம்மது
394/1, புளுகொஹத்தென்ன,
அக்குறனை.

# சிறந்த வண்ணத்திற்கு பரிசுதரும் எண்ணம்

கீழே உள்ள படத்திற்கு தகுந்த வண்ணம் பூசியனுப்புங்கள். சிறந்த வண்ணம்பூசிய இருவருக்கு பரிசு ரூபா25/- காத்திருக்கிறது.



# விடுகதைகள்

1. காட்டிலும் மேட்டிலும் இல்லா பனை அது என்ன?
2. சரியான நீதிபதி சரியான நீதியை வழங்குவான் அவன் யார்?
3. தலையுண்டு வயிறு இல்லை வாயுண்டு பல்இல்லை அது என்ன?
4. இடி இடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன?

விடைகள்
1. கற்பனை
2. தராசு
3. பாக்குவெட்டி
4. வெடி

எஸ்.யூ.சர்ஜியா பானு.
கல்பிட்டி வீதி
ஏத்தலை.

## இந்த வாரம் உங்கள் பலன்
(11.07.93 முதல் 17.7.93 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, உறவினர் பகை | காலை 8 மணி |
| திங்கள்- | பணவரவு, திருடர் பயம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, வெளியிடப் பிரயாணம். | காலை 9 மணி |
| புதன்- | காரிய சித்தி, தொழில் அனுகூலம். | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியரால் உதவி, தெய்வ நம்பிக்கை. | காலை 7 மணி |
| வெள்ளி- | புதிய பதவி, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| சனி- | இடமாற்றம், எடுத்த கருமம் வெற்றி. | பி.ப. 1 மணி |

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, பாராட்டு. | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்வு, சுபகாரிய நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | புதிய வாழ்க்கை முறை, சுபஸ்தானம். | பகல் 12 மணி |
| புதன்- | குடும்ப சுகம், அந்நியர் பகை. | காலை 8 மணி |
| வியாழன்- | நன்நிலை, உத்தியோக மேன்மை. | காலை 11 மணி |
| வெள்ளி- | கடன் இறுப்பு, காதலில் வெற்றி. | காலை 9 மணி |
| சனி- | நல்லோர் கூட்டம், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி நிலை, கௌரவம் கிடைத்தல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தர்ம சிந்தை, காரியானுகூலம். | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | பணவரவு, தேகசுக விருத்தி. | காலை 9 மணி |
| புதன்- | எடுத்த காரியம் தடை, யோசனை மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கல், உயர்வு. | காலை 10 மணி |
| வெள்ளி- | புகழ், மேன்மை, புண்ணியப் பேறு. | காலை 7 மணி |
| சனி- | தந்தை வழிச் செல்வம், தாரத்தினால் கவலை. | பி.ப. 3 மணி. |

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசம் நான்காம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூர இடத்துச் செய்தியினால் மகிழ்ச்சி, பிரயாணம். | காலை 6 மணி |
| திங்கள்- | மனமகிழ்வு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | காரிய மேன்மை, கடன் பயம் நீங்கல். | பி.ப. 1 மணி |
| புதன்- | புண்ணியப் பேறு, பூமியால் இலாபம். | காலை 11 மணி |
| வியாழன்- | தனலாபம், பூர்வீகச் சொத்துச் சேரல். | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, ஆசை அதிகம். | காலை 8 மணி |
| சனி- | தொழிற் சிறப்பு, மகிழ்ச்சி. | காலை 10 மணி |

### மீனம்: சுப நேரம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனதானிய இலாபம், தாரசுகம். | பி.ப. 4 மணி |
| திங்கள்- | பணவரவு, எடுத்த காரியம் வெற்றி. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | பகை நீங்கல், குடும்ப நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- | காரியசித்தி, பிரிந்தவர் கூடுவர். | காலை 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, அந்நியர் சகவாசம். | காலை 9 மணி |
| வெள்ளி- | காரிய நஷ்டம், வீண் அலைச்சல். | காலை 10 மணி |
| சனி- | மனப்பயம் நீங்கல், பொருள் இலாபம். | காலை 8 மணி |

### கிரக சஞ்சாரம்

மிதுனம்- சூரியன், புதன்
சிம்மம்- செவ்வாய்
கன்னி- வியாழன்
விருட்சிகம்- இராகு
மகரம்- சனி
இடபம்- சுக்கிரன், கேது

16-7-93 இல் சூரியன் கர்க்கடகத்தில் பிரவேசம்.

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூசம், உத்தரம் முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் பகை, உடல் நலமின்மை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | குடும்ப மகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம். | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | காரியக் கேடு, கடன் பயம். | காலை 10 மணி |
| புதன்- | பொருள் வரவு, புதிய ஸ்தானம் கிடைத்தல். | காலை 11 மணி |
| வியாழன்- | பழிச் சொல் கேட்டல், சோம்பல். | காலை 10 மணி |
| வெள்ளி- | உடல் சோர்வு, உபகாரம் கிடைத்தல். | காலை 8 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், காரிய மேன்மை. | பகல் 12 மணி |

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்பக் கஷ்டம், பணம் விரயம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பங்காளர் பகை, கொடுக்கல் வாங்கல் சிக்கல். | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பிரயாணம், வீண் அலைச்சல். | காலை 9 மணி |
| புதன்- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீணான சந்தேகம், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | துயர்அதிகம், காதல் பிரச்சனை. | பி.ப. 5 மணி |
| சனி- | பணவரவு, காரியானுகூலம். | காலை 10 மணி |

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, வீண் சந்தேகம். | காலை 11 மணி |
| திங்கள்- | தொழில் உயர்ச்சி, உள்ளத் தெளிவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அலங்காரப் பிரியம், செலவு அதிகம். | காலை 8 மணி |
| புதன்- | பழைய நோய் தோன்றல், குடும்ப மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | பணப் புழக்கம், பகைவர் வெற்றி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தூயசிந்தை, வரவுக்கு மிஞ்சிய செலவு. | பகல் 12 மணி |
| சனி- | தெய்வ நம்பிக்கை, தீர்க்க தரிசன நடத்தை. | காலை 9 மணி |

### மகரம்: சுப நேரம்
(உத்தராட பின் முக்கால், திருவோணம் ஆவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி, விருந்தினர் வருகை. | பி.ப. 5 மணி |
| திங்கள்- | பெண்கள் தொடர்பு, குடும்பக் கலகம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, மனக்குழப்பம். | காலை 11 மணி |
| புதன்- | துன்பம் நீங்கல், காரியானுகூலம். | காலை 10 மணி |
| வியாழன்- | தொழில்மேன்மை, எதிர்பாரா பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | மன மகிழ்ச்சி, சுபகாரிய மேன்மை. | காலை 9 மணி |
| சனி- | வெளியிட நட்பு, ஆதாய மேன்மை. | காலை 7 மணி |

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராம் முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உள்ளத்தில் மகிழ்ச்சி, உறவினரால் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- | பொருள் நட்டம், வீண் பிரயாணம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | தானதருமச் சிந்தை, எண்ணிய கருமம் வெற்றி. | காலை 10 மணி |
| | | காலை 9 மணி |
| புதன்- | நடைக் கஷ்டம், நம்பிக்கை மோசடி. | காலை 8 மணி |
| வியாழன்- | தூய சிந்தை, உறவினர் இழப்பு. | |
| வெள்ளி- | கடன் தொல்லை நீங்கல், காரியானுகூலம். | காலை 7 மணி |
| சனி- | மனப்பயம், வீண் பிரச்சனை. | காலை 6 மணி |

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாம் பாதம், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணப்புழக்கம் அதிகரிப்பு, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- | திடீர் பயணம், அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | உடல் சோர்வு, எடுத்த கருமம் வெற்றி. | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கல், பலவித நன்மை. | காலை 9 மணி |
| வியாழன்- | மனக் குழப்பம், பிள்ளைகளால் கஷ்டம். | காலை 11 மணி |
| வெள்ளி- | அடுத்தவர் உதவி, ஆராயாமல் காரிய கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | புதுத் தொழில், பகைவரால் கஷ்டம். | காலை 8 மணி |

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அறிவாளர் நட்பு, வீண் பொழுதுபோக்கு. | 'காலை 7 மணி |
| திங்கள்- | பயம் தெளிதல், உயர்ச்சி மேன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | யோசனை மிகுதி, குடும்பத்தில் சிக்கல். | காலை 8 மணி |
| புதன்- | காரியங்களில் வீண் தடை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | உள்ளத் தெளிவு, உறவினரால் தொல்லை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பதவி உயர்வு, புகழ், கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | மனமாற்றம், விருந்தினர் வருகை. | பகல் 11 மணி |



## குத்தரித்த டி ஜோக்ஸ்

அதிகாரி: என்னப்பா உன் மனைவிக்கு பிரசவம்னு சொல்லி லீவு எடுத்திட்டுப் போனியே... ஆணா? பெண்ணா.....

வீரன்: இப்ப தெரியாது. இன்னும் பத்து மாசம் ஆகும் சேர்.

■

ஒருவர்: என்னப்பா எங்க வேலை செய்யற?

மற்றவர்: சித்தப்பாவோட இருக்கிறேன்.

முதலாமவர்: அவர் என்ன வேலை செய்யிறார்?

மற்றவர்: சும்மாதான் இருக்கிறார்.

■

அவர்: உங்களை எங்கையோ முன்னால குடுமி வச்சிருக்கும் போது பாத்தஞாபகம்....

மற்றவர்: இல்லையுங்கோ அப்பவும் பின்னாலதாங்க குடுமி இருந்தது.

■

சிறுவன்: உங்கப்பா டெய்லி தண்ணி அடிப்பாரா?

பெரியவன்: இல்ல ஒரு நாள் விட்டு ஒருநாள் அடிப்பார்.

சிறுவன்: ஏன்?

பெரியவன்: அடிச்சது தெளிய வேண்டாம் அதுக்குத்தான்.

■

இரண்டாக உடைந்த தேங்காய் ஒன்றை பார்த்து இன்னொன்று என்ன சொல்லும்?

நீ பாதி நான் பாதி.

■

பேசத் தெரிந்த மான் எது?

'அனு'மான்.

நஜீம்: பாகிஸ்தான் நிறைய கடன் வாங்கினால் ' அது என்னவாகும்?

ரகீம்: 'பாக்கி' ஸ்தான் ஆகும்.

■

ஆண்யானை + பெண்யானை இரண்டு யானைகள் பேரூந்து நிலையத்திற்கு வருகின்றன. பஸ் வந்ததும் பெண்யானை சென்று விட ஆண்யானை அங்கேயே நின்று கொண்டிருக்கின்றது. ஏன்?

வந்த பூஸ் லேடீஸ் ஸ்பெசல்.

■

## தேன் கிண்ணம்

### வா நிலவே

உன் பூ உதட்டோரம்
சதா சிந்தும்-
பூஞ்சிரிப்பது போதாதா?
காற்றைக் கூட
சுவாசிக்காமல் காலம்
முழுதும் நான் வாழ!
என் நினைவு(ப்)
பெட்டகத்தினுள் உன்
மௌன பாஷைகளைப்
பத்திரப்படுத்தியிருக்கிறேன்!
உன் இதய ஓரத்தில்,
இருப்பிடமற்று அடைக்கலம்
தேடும் ஓர் யாசகன் நான்!
ஏழை நீயென்று ஏன்
ஒழித்தோடுகிறாய்?...
நிலவே நீ வராவிடின்
என் வானில் இருட்டு!
அன்பே..
சோகத்தை விரட்டு
அது உன் சொந்தமல்ல
சந்தோஷ தேசத்துக்குள்
கை கோர்த்து
நடப்போம் வா.....

செல்வி: நிஸ்வா ஸலாம்
—தர்கா நகர்—

### ஒருத்தனின் மறுபக்கம்

"கல்லறை நீ தான்"
பூக்கள் தூவாதே-என்
கல்லறைக்கு.
வாழும் போதுகளில்
வசந்தத்தைப் பறித்தவன்
சாவில் வந்து
கண் நீர் வார்க்காதே.
ஒரு வேண்டுகோள்......
முதலிரவில் உன்னவளுக்கு
நம்கதையை சொல்லும் போது
என் பெயரை
தவிர்த்து விடு.
இங்கே என்
இறுதி மூச்சிலும் உன்
பெயர் உச்சரிக்கப்படும்.
கேட்காதே-என்
உயிர் பிரிவதையும் பார்க்காதே.
பூக்களோடு வந்து விடாதே.
இங்கே
புற்கள் முளைத்து போர்வையாகும்
அதுவே எனக்குப் போதும்.
என் கல்லறை என்பது
இதுவல்ல
அது
உன் நெஞ்சமும்
நீயும்.

—ஷர்மிளா இஸ்மாயில்—
கண்டி—



### இனவாத முகத்தை சிதைத்துப் போட

வாருங்கள் தோழர்களே!
சிதறிய முகத்தை
ஒன்று சேர்ப்போம்!

இனவாத முகத்தை
சிதைத்துப் போடுவோம்.
ஒற்றுமை விதையை
நாட்டு மத்தியில்
பவ்வியமாய் நடுவோம்.

அக்குறணையின்
"கித்துல் பாணியை"
யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி
"பனங்கட்டியை"
வரவழைத்து உண்போம்.

விடுங்கள்!
பிய சேனவும்-ஹேமாவதியும்
கஜுர்னாக் கடற்கரை மணலில்
குதூகலம் கொள்ளட்டும்.

சுந்தா-கேதீஸை
அழைத்து வா!
"கோல் பேஸில்"குடைக்குள்
மறைந்து கொள்!

துப்பாக்கியை முறித்து வை
வேளாண்மையை
அழிக்கும்
பன்றியை மட்டும்
சுடுவதாக
மனச் சாட்சியோடு
ஒரு ஒப்பந்தம் செய்!

ஓடி வாருங்கள்!
இலங்கை முழுக்க
சமாதானச் சுகந்தத்தை
அள்ளித் தெளியுங்கள்!
கறுப்பு றெயில்களை
மாற்றி
வெள்ளை ரயில்களை
காங்கேசன் துறைக்கும்
கோட்டைக்குமாய்
ஓட விடுவோம்.

வேண்டாம்!
எரிமலை வெடித்துச்
சிதற வேண்டாம்.
வேண்டாம்.
போர் முஸ்த்தீபுகள்.
இந்தியக் குதிரைகள்
வேண்டாம்.
அஸ்வமேத யாகமும்
வேண்டாம்.

வேண்டும் ஒன்றே ஒன்று-
பிரேத ஓலங்களில்லாத
அமைதி பூத்த
எங்கள்
அருமையான
இலங்கைத் திருநாடு.

அக்குறணை ஹரா அனஸ்

### இவன் ஓர் பித்தனடி

சுட்டும் கருவிழியும் சுகம் தரும் பேரழகும்.
முட்டும் முகவழகும் முகம் தரும் மென்னழகும்
கட்டு உடல் அழகும். சுட்டும் விழி அழகும்
சொட்டும் என் விழியதனில் பட்டுத் தெரியுதடி.

புனிதம் கலையாத பூங்குழலி நீ ஒரு நாள்
பூத்துக் குலுங்கிடும் பூஞ்சோலை தனில் சென்று
புத்துயிர் கொடுத்தாயோ? பூவையே! பூம்பாவாய்
இத்துயிர் ஈடுகொள்ளோ? இவன் ஒரு பித்தனடி.

அந்திப் பொழுதினிலே ஆரணங்கே அன்றொரு நாள்
செந்நிறப் பொழுதினிலே செந்தூரப் பட்டுடுத்தி
செந்தூரன் சந்நிதிக்குச் சித்திரம் போல் போனனையோ!
ஏந்திழையே! உனை நினைக்கும் இவன் ஓர் பித்தனடி.

உந்தன் முக அழகை நீள் புருவ விழி அழகை
சந்தம் பிசகாது அசை போடும் நடை அழகை
சிந்தை குளிர்கின்ற சீரிய நல் பண்பழகை
ஏந்திழையே உனை நினைக்கும் இவன் ஓர் பித்தனடி.

கலை அழகு தருகின்ற கன்னிக்காரிகையே!
கவிநயத்தில் கவிபுனையும் கவிப்புலவன் நானாயின்
காவியங்கள் போற்றுகின்ற கவிச் செல்வி நீ என்பேன்
காவியமே! நானோ! கவிஞனும் அல்லன்; புலவனும் அல்லன்
கற்பனையில் உனை நினைக்கும் இவன் ஓர் பித்தனடி.

எஸ்.பி.ஏ.நாதன்
இணுவில்.

### ஒருத்தியின் மறுபக்கம்!

உன் கொல்லைப்புற
வேப்பமரத்தை
ஞாபகமிருக்கிறதா-?
அதன் சருகுகள்
நம் பாதங்களை-
முத்தமிடும் போது
'சலசலத்து' அழுதிருக்கிறது!

அந்த அழுகையை
ஏற்றுக் கொண்டோமா?
அல்லது-
அதற்காக அனுதாபப் பட்டோமா?
எனக்கு ஞாபகமில்லை
உனக்கு......?

நீ எல்லாவற்றையும்
ஞாபகம் வைத்திருப்பவள்!
நானோ-
அறிவைச் செலவழித்து-
உனை மட்டும்
ஞாபகம் வைத்திருப்பவன்.

உனக்குத் தெரியும் தானே-
நீ சிரிக்காத வரை
என் உதடுகள்
ஈரமாவதில்லை என்று!

காதலி-
என்னைப் பற்றிக்கேள்!
உடைந்து விழுந்த
கண்ணாடிக்குப் பதிலாக
ஜன்னலில் செருகியிருக்கும்-
அந்த-
கடதாசி மட்டையிடம்!

உனக்குத் திருமணம்
உறுதியான பின்புதான்-
என்னை நீ-
மனிதனில்லை என்கிறாய்!

விஞ்ஞானம்-
இப்போதும் எனக்கு-
ஆறு அறிவு
என்று தான் சொல்கிறது!

எம்.யே.தஸ்ரீப்
அக்கரைப்பற்று.

### விபத்து

நேற்று இரவு
சிலந்தி வலையில்
சிக்கிப்
பரிதாபமாய்
இறந்து போனது
மின்மினிப் பூச்சி!

மெய்யன் நடராஜா
ஹேரோ மேற்பிரிவு,
பூண்டுலோயா.

### அக்கினிச் சுவாசம்

என்-
உயிர் கிடந்து
துடிக்கிறது.
மின்சாரக் கம்பியில்-
சிக்குண்ட-
குருட்டு வௌவாலாய்,
'மனிதம்' ஏன்-
மரித்துப் போனது.

சூரியனின் முகத்தை
கறுப்புத் துணியால்-
மூடிவிட்டு-
அந்த இரவுகள்,
எத்தனை ஈரல் துண்டை-
புசித்திருக்கும்..?

விழிகளில் எரிந்த-
கண்ணீர்த் திரிகளுக்கு-
உதிர எண்ணெய்,
ஊற்றியே-
உயிர் குடித்தார்கள்.

ஈழத்தில்-
மிருகங்களிடம்
'மானுட நேயம்'
தோற்றுப் போனது-
அதிசயம் தான்.

அச்சத் தெருக்களில்-
ஆத்மா-
செத்துக் கொண்டே
உலா வரும்.
அந்தப் பொழுதில்-
என் நிழலில் கூட-
எனக்கு நம்பிக்கை இல்லை-

வாழை இலையாய்
கிழிந்து கிழிந்து,
மன செல்லாம்-
ஈரம் வற்றி-
உண்மையில்-
செத்துத்தான் போனேன்.


நான் மட்டுமா...?
இந்த மானுடப் பூக்களே
மயான பூமியில்-
மலிவாகத்தான்
விற்கப்பட்டன.

ஓட்டமாவடி —அறபாத்

### என்னுயிர்த்தாய்!

உறவாக மட்டும்
நினைக்க முடியாதவள்!
பணத்தினால் பெற
முடியாதவள்!
அடைக்க முடியாத
அன்பு ஊற்று!
திருப்பிக் கொடுக்க
முடியாதபடி எனக்கு
பாசக்கடன்
தந்திருப்பவள்!
பாதிக்கடனை
அடைக்கவே
என் ஆயுளே போதாது!
இனி எப்படி நான்
வேறு கடன் பெறுவது?

—ரம்ஷீன் ராஜா—



### ஹைக்கூ இரண்டு

உல்லாசப் பிரயாணிகளாட்டம்
ஊர்சுற்றி திரிய முடிந்தது
அகதிகளாய் ஆனபோது

-வெலிமடை ஜஹாங்கீர்-

தேசவயலில்
மேயும் நொண்டிப் புறா
ஜனநாயகம்.

-ஓட்டமாவடி அறபாத்-

# ஃபோபியா தெரியுமா? பயத்திலும் உண்டு பலரகம்



பயம் இருக்கிறதே பயம். அந்தப் பயத்திலும் பல வகை உண்டு.

அக்ரோ ஃபோபியா- உயரமான இடங்களைக் கண்டு பயப்படுவது.

அஸ்ட்ரோ ஃபோபியா? இடி, மின்னல் புயல்களைக் கண்டுப் பயப்படுவது.

க்ளாஸ்ட்ரோ ஃபோபியா- ரெயில் பெட்டி,

ஆகாய விமானம், திரைப்படக் கொட்டகை போன்ற மூடப்பட்ட இடங்களில் இருக்கப் பயப்படுவது.

கோப்ரோ ஃபோபியா-மலத்தைக் கண்டு பயப்படுவது.

ஹேமட்டோ ஃபோபியா- இரத்தத்தைக் கண்டு பயப்படுவது

ஹைட்ரோ ஃபோபியா-நீர் நிலைகளைக் கண்டு பயப்படுவது.

மைசோ ஃபோபியா-அழுக்கைக் கண்டு பயப்படுவது.

ரெக்சோ ஃபோபியா-பிணத்தைக் கண்டு பயப்படுவது.

சீட்டோ ஃபோபியா -நாம் உயிரோடு புதைக்கப்பட்டு விடுவோமோ என்று பயப்படுவது.

தானட்டோ ஃபோபியா-நாம் இறந்து விடுவோமோ என்று பயப்படுவது.


ஸீனோ போபியா-அந்நியர்களைக் கண்டு பயப்படுவது.

சூ ஃபோபியா-மிருகங்களைக் கண்டு பயப்படுவது.

அது சரி, நீங்கள் இதில் எந்த போபியா?

தகவல்-எஸ் என். சர்புதீன்.

# தபால் தலைகள்







தைவான் சீனா சமீபத்தில் இரு தபால் தலைகளை வெளியிட்டுள்ளது. மறைந்த தலைவர்களின் நினைவாக அல்ல. அல்ல.

அருந்திய தேநீரின் நினைவாகவே இரு தேநீர் பாத்திரங்களை தபால் தலைகளாக வெளியிட்டு நன்றியை வெளிப்படுத்தி விட்டனர்.

அதுமட்டுமா ஆயிரம் ஆண்டுகளாக தேநீரை பருகியதன் நினைவாக அந்த இரு பாத்திரங்களையும் தைவானின் தலைநகரான தைப்பேயில் உள்ள அருங்காட்சியகத்திலும் வைத்துள்ளனர்.

# மாபெரும் தலைவனின் மகளாகப் பிறந்தவர் மடியேந்தும் நிலையில் மனமுடைந்து வாழ்கிறார்



இன்று உடைந்து பல துண்டுகள் ஆகிவிட்ட அன்றைய சோவியத் யூனியனில் அசைக்க முடியாத தலைவராக ஆட்சி நடத்தியவர் ஸ்டாலின்! ஜோசப் ஸ்டாலின்!!!

ஒரு காலத்தில் ஸ்டாலினின் பெயர் கொம்யுனிஸ்டுக்களால் மரியாதையாக உச்சரிக்கப் படும் பெயராக இருந்தது.

அவர் ஒரு சர்வாதிகாரி என்று கொம்யுனிசத்தை பிடிக்காதவர்கள் விமர்சித்தார்கள்.

அவர் மறைந்த பின் அவரது நாட்டிலும் ஸ்டாலின் சர்வாதிகாரிதான் என்று பிரகடனம் செய்தார்கள்.

ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து உலகத்தலைவராக வாழ்ந்து மறைந்த ஸ்டாலினின் மகளும் இன்று ஏழையாகத்தான் வாழ்கிறார்.

ஸ்டாலின் உயிரோடு இருந்த போது அவரை வெறுத்துவிட்டு அமெரிக்காவுக்கு போன ஸ்டாலினின் மகள் ஸ்வெற்லேனா தனது தந்தையைப் பற்றி விமர்சித்து ஒரு புத்தகமே எழுதினார்.

அதற்காக 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் அவருக்கு ஊதியமாகக் கிடைத்தது. இப்போது 2 டொலருக்குக் கூட வழியில்லாதவராக வறுமையில் வாடுகிறார்.



இப்போது அவருக்கு 66 வயது. தனிமரமாக வாழும் அவருக்கு சில நலன்புரிச் சங்கங்கள் உணவு கொடுத்து பராமரிக்கின்றன.

இலண்டனில் உள்ள அழுக்கு நிறைந்த விடுதி ஒன்றில் அவர் தனது கடைசிக் காலத்தைக் கழித்து வருகிறார்.

உலகத் தலைவர் ஒருவரின் மகளாக அவர் மடியிலே விளையாடியவர் இன்று மடியேந்தும் நிலையில் மனம் உடைந்து வாழ்கிறார்.

# தகவல் பெட்டி

## உடல் ஒரு மெத்தையாகும் விந்தை! ஆச்சரியம்-ஆனால் உண்மை!!

நம் ஊர்களில் தங்கள் உடல் முழுவதிலும் வேல் போன்ற அலகுகளால் குத்திக் கொள்பவர்களை பார்த்திருப்பீர்கள். காவடி எடுக்கும் போது முதுகில் செதில் குத்துவார்கள். பறவைக் காவடியின் போதும் உடல் முழுவதும் உலோகங்களால் குத்திக் கொள்வார்கள்.

வெளிநாடுகளிலும் தம் உடல்களில் ஊசிகளால் குத்தி அதை ஒரு காட்சிக் கலையாக்கும் ஜாம்பவான்கள் இருக்கிறார்கள்.

அதில் ஒருவர்தான் பாடி டேவிசன். அவர் கூரான கம்பிகளையும், ஊசிகளையும் தன் உடலின் பல பாகங்களில் குத்திக் கொள்ளுகிறார். வலியும் இல்லை. காயமும் இல்லை. உடல் ஒரு மெத்தையாகி ஊசிகளின் குத்துக்களை வாங்கிக் கொள்கிறது. அவ்வாறு தன் நண்பர்களுக்கும் சிறுவர்களுக்கும் அவர் வேடிக்கை காட்டும் முறைகள் பல உண்டு. அவற்றிலே சில இங்கே உண்டு.

ஒரு இறைச்சித் துண்டைக் குத்துவது போன்று தனது சொக்கில் நீளமான கம்பியைச் செருகுகிறார்.

கண் புருவங்களில் பூட்டூசியை மாட்டுகிறார்.

ஒரு பெரிய ஊசியை கழுத்தில் குத்திக் கொள்கிறார்.

கால்களிலும் கைகளிலும் ஆணிகளை அறைகிறார்.

இத்தகைய காரியங்கள் அவரைப் பாதிக்க வில்லையா? இல்லை. இதைப் பார்ப்போருக்குத்தான் நோ தோன்றக் கூடும். பாடி தனக்கு எவ்வித நோவும் ஏற்படுவதில்லை என்கிறார்.

பாடி குத்துச்சண்டை வீரராகத் திகழ்ந்தவர். அத்துடன் உதைபந்தாட்டக்காரரும் கூட, "இது என்னை ஒன்றுமே செய்வதில்லை. வேதனை என்பதை மனத்தை விட்டு அகற்றி விடுவேன். இதனால் எனக்கு எதுவுமே ஏற்படுவதில்லை" என்கிறார். மனோதிடத்தினால் எதையும் சாதிக்கலாம் என்ற உண்மை வியப்பூட்டுவதாயுள்ளது.

பாடி மற்றுமொரு உண்மையைக் கூறுகிறார். நான் இக்கூர்மையானவற்றை உடலுள் செலுத்தும் காலகட்டத்தில் தன்வயமிழந்த பரவச நிலையை அடைந்துவிடுகிறேன். வலி என்ற எண்ணமே தோன்றாதவாறு மனதைக்கட்டுப்படுத்தி விடுவேன். இரத்தப் பெருக்கு ஏற்படுவதில்லை. அத்துடன் காயம் உடனடியாக மறைந்து விடுகிறது. சிலர் இதனை கோரமான பயங்கரமான விளையாட்டு என்கின்றனர். ஆனால் நான் அவ்வாறு கருதவில்லை இதனை ஒரு விளையாட்டாகவே நான் கருதுகிறேன் என்றார். நல்ல விளையாட்டுத்தான்! இதைப்படித்து விட்டு பரிசீலித்துப் பார்க்க முயன்று எம் மீது பழிபோடாமல் இருந்தால் சரி நீங்கள்.



# தவறாத குறி

நெப்போலியன் வோட்டர்லு போரில் தோல்வியுற்ற போது அவரை வென்ற தளபதிகள் அவரின் நெஞ்சுரத்தை சோதிக்க எண்ணி நெப்போலியனை மது அருந்த அழைத்தனர். தளபதிகள் மூவரும், நெப்போலியனும் வாயருகே கொண்டு சென்ற போது தளபதிகளின் முன்னேற்பாட்டின் படி பலத்த சத்தத்துடன் குண்டு வெடிக்கப்பட்டது. தளபதிகளுக்கு இப்போது குண்டு வெடிக்கும் எனத் தெரிந்திருந்தும் அவர்கள் மதுக்கோப்பைகளை தவற விட்டு விட்டனர். ஆனால் நெப்போலியன் மட்டும் நிதானமாக மதுவை அருந்திவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டாராம். அதைப் பார்த்து வியந்த தளபதி "உங்களை வெடிச்சத்தம் சிறிதும் பாதிக்கவில்லையா," என்றனர்.

அதற்கு நெப்போலியன் "இந்த நிமிடத்தில் இந்தக் கோப்பை மதுவை அருந்த வேண்டும் என்பதே எனது ஒரே குறிக்கோள். அப்போது வேறெவற்றின் மீதும் எனக்கு அக்கறை இல்லை" என்று பதிலளித்தாராம்.

# சிந்தியா பதில்கள்



## ஈராக் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகள் சரிதானா?

கோபம் வரும் போது என்ன செய்ய வேண்டும்?

கே.சிவராமலிங்கம்
மட்/களுதாவளை.

மனதிற்குள் வைத்தே அதன் கொம்பை சீவ வேண்டும் கொஞ்சம் கஸ்டமான காரியம் தான்.

தமிழ் திரையுலகில் ஒஸ்கார் விருது பெறும் தகுதி யாருக்கு உண்டு?

ஸ்ரீராம்-சிவா
கொழும்பு-11.

சந்தேகமில்லாமல் அன்று சிவாஜிக்கு - இன்று கமலுக்கு.

பெண்களின் பலவீனம் எது? ஆண்களின் பலவீனம் எது?

மின்ஹா இம்டியாஸ்
கொழும்பு-9.

பெண்ணின் பலவீனம் ஆண். ஆணின் பலவீனம் பெண்.

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டென்டுல்கர் பற்றி...?

எஸ்.ரவி
கந்தப்பளை.

ஆட்டத்தில் நளினம் உண்டு. அவர் இளமையில் வலிமை உண்டு. பயமறியாத இளம் கன்றாக களம்புகுந்து, அவசரப்பட்டு ஆட்டமிழப்பது ஒரு குறை.

அன்பின் சிந்தியா-தொலை பேசி மூலம் காதலிப்பதும் ஒரு காதலா என்று சிலர் கேட்கிறார்கள். அவர்கள் தொலைபேசிக் கட்டணத்தைக் கருத்தில் கொண்டு கேட்கிறார்களா? அல்லது பிடிக்கவில்லையா?

யூ.எல்.எம்.நஸீர்
ராஜகிரிய.

அவர்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். அதனால் எதிரே இருப்பதை விரும்புகிறார்கள் என்று கருதினால் அதில் ஒரு பங்கு சரிதான்.

புலிகள் இயக்கத்தலைவரின் பாரியார் இயக்கத்தில் உள்ளவரா?

டி.கோணோஸ்
பண்டாரவளை.

முன்பு இருந்தவர்தான்.

நம் நாட்டின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

செல்வி எம்.சாரதா
கிளிநொச்சி.

நினைப்பதற்கும் -மனதில் நிலைப் பதற்கும் அதில் அதிகமாய் ஒன்றுமில்லை.

காதலித்து கைவிடுபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வீ.சொரூபா
நீர்கொழும்பு.

அவர்கள் காதலுக்கு கண்மட்டுமல்ல, கையும் இல்லையென்று.

சந்தனக்கடத்தல் வீரப்பன் பிரபலமாகி வருகிறாரே. உங்கள் அபிப்பிராயம் என்னவோ?

பா.நிலாமதி
நுவரேலியா.

மூச்! ஆயுதம் கையிலும், அராஜகம் தலையிலும் இருப்பவர்களைப் பற்றி பேசாமல் இருப்பதுதான் இன்றைய பத்திரிகா தர்மம்.

பொலிசாரை விடாமல் புலிகள் ஏன் தாமதம் காட்டினார்கள்?

என்.பரந்தாமன்.
வவுனியா.

தங்கள் செலவில் மேலும் கொஞ்ச நாள் கவனிக்க விரும்பினார்களாக்கும்.

ஈராக் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகள் தேவைதானா?

எம்.பாரூக்
கண்டி.

தட்டிக் கேட்க ஆளில்லாத துணிச்சலில் அமெரிக்கா தலைகனத்து ஆடுகிறது. அமெரிக்கச் சண்டித்தனம் கண்டிக்கப்பட வேண்டியதே.

ஈராக் மக்களுக்கு ஐ.நா.வின் பொருளாதாரத் தடை நியாயமானதா?

எஸ்.அப்துல் கரீம்
கல்ஹின்னை.

ஐ.நா.சபையும் வல்லரசுக்கு வளைந்து கொடுக்கும் சபையாக சில சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ளுகிறது.

உங்களை வெட்கப்பட வைத்த சம்பவம் எது?

எம்.ஹயாத்
கொழும்பு-15.

அதையெல்லாம் சொன்னால் நீரும் வெட்கத்தில் வீழ்ந்து போக வேண்டியிருக்குமே ஹயாத்.

கல்யாணம் ஆன பின்னர் பெண்கள் தங்கள் பெயரை குறிப்பிடும் போது தமது பெயருக்கு பின் குறிப்பிடுவதேன்?

த.ஞானஜோதி
பதுளை.

பின்னால் வந்த உறவுதானே. அதுதான் அப்படியாக்கும்.

மனைவியை தீயில் இறக்கிய முதல் கணவன் இராமன். தீயில் இறங்கிய முதல் மனைவி சீதை. இப்படியான கணவன்-மனைவி மீண்டும் தோன்றுவார்களா?

ஜோசப் சின்னதம்பி
கொட்டாஞ்சேனை.

வேண்டாம் ஐயா தோன்றவே வேண்டாம். உமக்கு அப்படியொரு ராமத்தனமான ஐடியா இருந்தால் கொலை முயற்சி வழக்கில் உள்ளே செல்லும் யோகமும் உண்டு. ஜாக்கிரதை.

தான் விரும்புபவரை விட தன்னை விரும்புபவரை நம்பலாமா?

எஸ்.எச்.எஸ் நிஹாரா
ஹமீட்
மாபோல-வத்தள.

எப்படியோ- நம்பக் கூடியவராக இருந்தால் நம்பலாம்.

வாழ்வில் முன்னேற நினைக்கும் அனைவருமே முன்னேறுவதில்லையே காரணம் என்ன?

ஹிதாயா ஹுஸைன்
தியத்தலாவை.

முன்னேற நினைப்பவர்கள் எல்லாம் அதற்காக முயல்வதில்லையல்லவா. முயற்சி மெய்வருந்தக் கூலி தரும். கூலிதான் வெற்றி.

டியர் சிந்தியா தொல்லைதரும் மனிதர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்?

அ.ரதிதேவி
நீர்கொழும்பு.

கொசுக்கள்! மருந்தடிக்கலாம் கொசுக் களுக்கு. தரும அடி கொடுக்கலாம் அவர்களுக்கு.

புதிய ஜனாதிபதியின் அணுகு முறைக்காவது புலிகள் செவிசாய்ப்பார்களா?

கலைநேசன் ஜவாத்
புத்தளம்.

முதலில் புலிகளின் செவி எங்கே என்று கண்டுபிடிக்கவேண்டும்.

தமிழுக்கு அமுதென்று பேர்-இன்றும் அது உண்மைதானா?

கே.சுகந்தினி
பதுளை.

உண்மைதான். அதுதானே அமுதத்தை விழுங்கிவிட்டு சிலர் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்விகளை அனுப்ப:**
**சிந்தியா பதில்கள்**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—2




மதுமிதாவுக்கு நேர் எதிரே கட்டில் இருந்தது. கட்டிலின் மேலே அது கிடந்தது.

சத்தியமாய் ஒரு கொலை.

நெஞ்சில் தோட்டாவை ஏந்தி இரத்தம் சிந்தி... இப்போதும் சொட்டுச் சொட்டாக கட்டிலை சிவப்பாக்கிக் கொண்டு.....

கொலை நடந்து அதிக நேரம் ஆகிவிட வில்லை என்று மதுமிதா புரிந்து கொண்டாள். அறை முழுவதையும் அவள் விழிகளால் தடவிய போது தன்னையும், தன் அழகான உதடுகளை இறுகப் பொத்தியபடி பின்னால் நிற்கும் முகம் தெரியாத அவனையும் தவிர அங்கு வேறுயாரும் இல்லை என்று தெரிந்து கொண்டாள்.

"செத்துப் போனது யார் திவாகரா? ஏன் கொல்லப்பட்டான். கொன்றது யார்?..ச்சே என்ன கேள்வி இது... இவன் தான் கொன்றிருப்பான் என்பதற்கு சாட்சி வேறு தேவையா? என்னை ஏன்....ஓ நானாகத்தான் வந்து இவனிடம் மாட்டிவிட்டேனோ...என்ன செய்யப்போகிறான்.. .என்ன செய்ய வேண்டும்" மதுமிதா உள்ளே குழம்பிக் கொண்டிருக்க உதட்டை ஒடுக்கியிருந்த கரத்தை விலக்காமல், அவனது மறுகரம் மதுமிதாவின் இடையிலே இறங்கி, லோஹிப் சாரி உபயத்தில் சுதந்திரமாய் இருந்து வயிற்றில் அழுத்த....

அதை மதுமிதா மனதில் குறித்துக் கொண்டாள்.

இப்போது முதல் முறையாக அவன் பேசினான். சற்றுத் தடிப்பான குரல்.

"சத்தம் போட்டு சுற்றத்தை அழைக்கும் நோக்கத்தை நீ மறந்து விடுவதாக இருந்தால் உன் உதடுகளுக்கு சுதந்திரம் கிடைக்கும்."

ஆம் என்பது போல மதுமிதா தலையை ஆட்ட, பவழ உதடுகளுக்கு இரும்புக்கரம் பரிபூரண சுதந்திரம் கொடுத்து விலகியது. விலகும் போது உதட்டுக்கு நேராக கீழே இறங்கி, மெத்தென்ற மார்பில் வேண்டுமென்றே மோதி விலக-

மதுமிதா அதையும் மனதிற்குள் குறித்துக் கொண்டாள்.

இதுவரை மதுமிதாவின் பின்புறமிருந்தவன் இப்போதுதான் அவள் எதிரே வந்தான்.

உதடுகளை இறுக மூடிய போதும், இடுப்பிலே ஊர்ந்து வயிற்றிலே பதிந்து அழுத்தியபோதும் இரும்புக்கர வலிவு புரிந்தது. எதிரி பலமானவன் என்பதை மதுமிதா ஊகித்துக் கொண்டாள்.

இப்போது அவன் எதிரே வந்த போது ஊகித்தது சரி என்று புரிந்து கொண்டாள்.

அவன் ஆறடி உயரத்தில் இருந்தான். ஷேவ் செய்த முகத்தை மொழு மொழுவென்று வைத்திருந்தான். சிரத்தையாக மீசையை அளவோடு கட் செய்திருந்தான். வெள்ளையில் நீல கோடுகள் போட்டிருந்த சட்டையை நீல ஜீன்சுக்குள் இன் பண்ணியிருந்தான். கட்டிலில் பிணம் கிடக்க, திகில் பரவிய சூழலிலும் மதுமிதா அவன் கம்பீரத்தை மனதிற்குள் வியந்து கொண்டாள். அவன் உச்சிமுதல் பாதம் வரை விழிகளால் அளவெடுத்தாள்.

அளவெடுத்துக் கொண்டே மதுமிதா கேட்டாள்

"நீ...நீ... நீங்கள் யார்... என்ன இதெல்லாம்....?"

அவளை விழுங்குவது போல் பார்த்தபடி.....

"தெரியேல்ல? கொலை. சுத்தமாக செய்து முடிக்கப்பட்ட கொலை."

சர்வசாதாரணமாக சொன்னான். சட்டைப் பைக்குள் இருந்து சிகரெட் பெட்டியை எடுத்து அலட்சியமாய் திறந்தபடி அவளைப் பார்த்து கண்ணடித்தான்.

"உனக்கொரு சந்தோசமான செய்தி மது. உன் எதிரி திவாகரை என் பிஸ்டல் சாப்பிட்டு விட்டது. இனி உனக்கு அவனால் தொல்லை இல்லை"

அப்படியானால்..... ஓ... செத்துப் போனவன் தான் திவாகரா? எனில் அந்தப் போட்டோக்களின் கதையும் அத்தோடு முடிந்து போனதா? ஆயின் சந்தோசம்தான். மதுமிதாவின் உள்ளத்திரையில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டவனாக சிகரெட் புகையை சின்னச் சின்ன வட்டங்களாக வெளியேற்றிய படியே- சின்னதாக ஒரு புன்னகையோடு.....

"என்ன மது, அந்தப் போட்டோக்களும் திவாகரோடு போய்விட்டதாக சந்தோசப்படு கிறாயா? நோ... டியர்.... அவை... யெஸ்... அந்தப் போட்டோக்கள்....!"

"அந்தப் போட்டோக்கள்....?"

மதுமிதா தன்னை மறந்து அவசரம் காட்டினாள்.

"அவசரப்படாதே மது. ஏன் நாம் நின்று கொண்டு பேசவேண்டும். ஆறுதலாய் இருந்து பேசலாமே. பாரங்கள் தாங்காமல் பாதம் நோகும் என்று கவலையாக இருக்கிறது."

சொல்லிவிட்டு, கண்சிமிட்டினான். கட்டிலுக்கு அருகே இருந்த சோபாவை சைகையால் காட்டிவிட்டு தானும் அதில் அமர்ந்து கொண்டான். மதுமிதா தயங்க.....

"ஒரு கொலையைச் செய்துவிட்டு சாதாரணமாக இருக்கிறானே என்று நினைக்கிறாய். மனதின் ஓரத்தில் வியக்கிறாய் என்ன...ஆ.... அப்படித்தானே.....என் கதை உனக்குத் தெரியாது. ஆனால் உன் கதை எனக்குத் தெரியும். என் கதை தெரிந்தால் நீ வியக்க மாட்டாய். விலக நினைப்பாய். ஆனால் விலகமுடியாது. ஏனெனில் அந்தப் போட்டோக்கள் இப்போது என்னிடம் இருக்கின்றன.. பிளீஸ் சிட்டவுன்".

ஒரே மூச்சில் பேசி முடித்துவிட்டு விரலிடுக்கில் எரிந்து கொண்டிருந்த சிகரெட்டை அஷ்ரேயில் கொடுத்து நசுக்கினான். மதுமிதாவுக்கு அவன் தலையை நசுக்க வேண்டும் போல் இருந்தது.

மதுமிதா புத்திசாலிப் பெண். அழகான ஆயுதங்களை எங்கே எந்த இடத்தில் பிரயோகிக்க வேண்டும்? எதிராளியின் பலவீனம் புரிந்து தகுந்த இடத்தில் தாக்க வேண்டும் என்ற அனுபவம் பல சேகரித்து வைத்திருக்கும் பெண்.

நளினமாய் நடந்து சோபாவில் அவன் அருகில்-மிக அருகில் அமர்ந்து கொண்டாள்.

"எனக்குப் பயமாக இருக்கிறது. நான் போகவேண்டும்.... பிளீஸ் அந்த.... போட்டோக்கள்.... போட்டோக்களை..."

"போட்டோக்களை" அவள் முகத்தருகே உதட்டைக் கொண்டுவந்து மெள்ளக் கேட்டான். அருகே நெருங்கிவிட்ட பின்னர் அவன் குரலில் ஏற்பட்ட கிறக்கம் கலந்த தடுமாற்றத்தை மதுமிதாவின் மூளை கிளிக் செய்து கொண்டது.

"என்னிடம் கொடுத்து விடுங்கள்....பிளீஸ்"

"கொடுக்கலாம். அவற்றை வைத்திருந்து நான் என்ன செய்யப் போகிறேன்? பிறேம் போட்டு மாட்டவா முடியும்? அதற்கு நீ என்ன தருவாய்?"

என்னையே தருகிறேன் என்று சொல்லி விடலாமோ என்று நினைத்தாள். சொல்ல வில்லை. ஆசை காட்டுகிறாள் என்று அவன் நினைத்து விடக்கூடாது. வலையை அவன் புரிந்து கொள்ளாத வகையில் வீச வேண்டும்.

"உங்களை எப்படி நம்புவது?"

"எப்படி நம்ப வைக்க வேண்டும்?

அந்தப் போட்டோக்களில் இருக்கின்ற ரகசியத்தை சொன்னால் நம்புவாயா?"

அவசரமாய் மறுத்தாள்.

"வேண்டாம் அந்த..... அதை...

நான் மறந்து விடவே விரும்புகிறேன்....பிளீஸ் அதைச் சொல்ல வேண்டாம்."

"ஓ. கே. அப்படியானால் எப்படி உன்னை நம்ப வைப்பது?"

"போட்டோக்களை தாருங்கள் நான் நம்புகிறேன்."

"உன் வாழ்க்கைப் புதிரை ஒவ்வொன்றாய் அவிழ்த்துவிடும் மொத்தம் ஆறு போட்டோகள். அதற்கு திவாகர் கேட்ட விலை மிகவும் குறைவு. அவன் பிழைக்கத் தெரியாதவன். பிழைக்கத் தெரியாதவனால் பூமிக்கு ஏன் பாரம் என்றுதான் அவனைக் கொன்று விட்டேன்."

சொல்லிவிட்டு சிரித்தான். சிரித்துவிட்டு, சேலை விலகியிருக்க பக்கவாட்டில் தெரிந்த அழகு கண்டு ரசித்தான். இளமைக்கு வஞ்சகம் செய்யாமல் படைத்தவன் செழுமையை வாரி வழங்கியிருந்தான்.

அவன் மிக அருகில் இருக்க, அவன் விடும் சூடான மூச்சுக் காற்றுஉள்ளே தீ பற்றிக் கொண்டதை மதுமிதாவுக்கு அறிவிப்புச் செய்ய-

மதுமிதா அதற்கேற்ப தன்னைத் தயார் படுத்தியபோது.....

டொக்....டொக்....டொக்.

அறைக்கதவு தட்டப்பட்டது. கட்டிலின்மேல் பிணம். மெத்தை முழுவதும் இரத்தம்.

மதுமிதா திகைத்துப் போனாள். அவன் முகத்தை திகிலோடு பார்க்க அவனோ.... அலட்சியமாய் சிரித்தபடி எழுந்து மதுமிதாவின் தோளில் தன் இரு கரங்களையும் போட்டான்.

டொக்....டொக்...

மீண்டும் கதவுதட்டப்பட்டது.

(இன்னும் வரும்)

---

# காவலர்களை பாபா ஏன் காப்பாற்றவில்லை!

இந்தியாவின் குடியரசுத் தலைவர் முதல் சாதாரண குடிமகன் வரை அவரைக் காத்திருந்து தரிசிக்கின்றனர்.

இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கும் இலட்சக்கணக்கான பக்தர்கள் அவர் நாமத்தை உச்சரிக்கின்றனர்.

இலங்கையிலும் அவருக்கு பல்லாயிரம் பக்தர்கள் இருக்கிறார்கள். தம் இல்லங்களில் பஜனை நடத்துகிறார்கள்.

கண்ணுக்குத் தெரியாத சக்தியால் இலட்சக்கணக்கான பக்தர்களை தன்பால் ஈர்த்துவரும் அதிசயம் தான்.....

-சத்யசாயிபாபா-

65 வயது. மெல்லிய உடம்பு.



பாபா அன்று

பாதங்களையும் சேர்த்து மறைக்கும் காவி உடை. பரந்த அடர்ந்த தலை.

இந்த உருவத்தைக் காண்பதற்காக இந்திய நாட்டில், ஆந்திரா மாநிலத்தில் உள்ள புட்டபர்த்தி என்னும் பகுதிக்கு உலகெங்கும் இருந்து பக்தர்கள் படையெடுக்கிறார்கள். இளம் காலை நேரத்தில் ஜனசமுத்திரமாய் திரண்டு பாபாவைக் காண காத்திருக்கிறார்கள்.

பாபா தன் இருப்பிடத்தை விட்டு படியிறங்கி வருகிறார்.

பெண்கள் பக்கமாக முதலில் செல்லுகிறார். அவர்கள் தமது குறைகளையும், வேண்டுதல் களையும் கடிதங்களில் எழுதி அவரிடம் கொடுக்கிறார்கள்.

பின்னர் ஆண்கள் பக்கம் செல்லுகிறார்.

தரிசனம் 15-முதல் 20 நிமிடம் வரை.

இந்தியாவில் பல மகான்கள் தோன்றியுள்ளார்கள். அதிலே சத்ய சா பாபா மட்டும் வித்தியாசமானவர் என்கிறார்கள் அவரது பக்தர்கள்.

மற்றவர்களில் பெரும்பாலானோர் தவம் கிடந்து தெய்வ தரிசனம் பெற்றவர்கள்.

இவரோ, தான் கடவுளின் அவதாரம் என்று தனது 14 வயதில் அறிவித்தவர். அது தான் வித்தியாசம் என்கிறார்கள்.

"உலகில் தர்மம் குலைந்து விட்டது. நெறி யற்ற வாழ்க்கையை நெறியாக மக்கள் நினைத்து விட்டார்கள். இதை மாற்றி மீண்டும் தர்மத்தைப் பரப்பவே நான் அவதாரம் எடுத்திருக்கிறேன்" என்று சத்யசாயி பாபா பிரகடனம் செய்கிறார்.

குலைந்து போன தர்மம்



பாபா இன்று

இப்போது அவரையே குறி வைத்திருக்கிறது.

ஆசிரமத்தின் உள்ளேயே ஆயுதங்கள். கொலைக்கான சதித் திட்டங்கள். அவர்கள் சமயம் பார்த்து பதுங்கியிருந்திருக்கிறார்கள்.

பாபாவை அவர்களால் நெருங்க முடியவில்லை. ஆனால் பாபாவின் காவலர்கள் மாண்டார்கள்.

அந்தக் கொலை முயற்சி செய்தியால் உலகெங்கும் உள்ள பாபா பக்தர்கள் அதிர்ந்துதான் போனார்கள்.

அற்புதங்கள் செய்து ஆச்சரியம் ஏற்படுத்தும் பாபாவால் தன் காவலர்களை ஏன் காப்பாற்ற முடியவில்லை?

ஆசிரமத்தின் உள்ளே இருந்த சதிகாரர்களை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடவுளின் அவதாரம் தன் மெய்க்காவலர்களுக்கு மறுவுயிர் கொடுத்திருக்கலாம் அல்லவா? ஏன் செய்யவில்லை?

இவ்வாறான கேள்விகள் சிலருக்கு எழக்கூடும்.

அதற்கு பாபாவின் பக்தர்கள் சிலர் பின்வருமாறு பதில் சொல்லுகிறார்கள்.

"இதுவும் பகவானுடைய லீலை தான். சிறு வயதில் அவரை விஷம் கொடுத்துக் கொல்ல முயன்றார்கள். தப்பித்தார். இப்போது துப்பாக்கிக் கலாசாரம். அதிலிருந்தும் தப்பித்தார். அவர் பகவான்தான்"

"பகவானின் காவலர்களது கர்மா அவ்வாறுதான் முடிய வேண்டும் என்பது விதி. அதுதான் பாபா அவர்களை காப்பாற்ற வில்லை."

"பாபா மனித உருவில் தோன்றிய கடவுள் அவதாரம். அவர் சில சமயங்களில் சாதாரண மனிதன் போலத்தான் நடந்து கொள்ள வேண்டி வரும். அது தான் தன் அறையில் இருந்து அவர் கீழே இறங்கித் தப்பித்திருக்கலாம்"

இன்னொரு பக்தர் உதாரணங்களோடு பேசுகிறார்:

"கிருஷ்ண அவதாரத்தில் கிருஷ்ணர் ஒரு வேடனால் காயப் படுத்தப்பட்டார். இலட்சுமணன் அசுரர்களால் தாக்கப்பட்டு மயக்கமடையவில்லையா? பூமாதேவியான சீதை இராவணனால் கொடுமையை அனுபவித்து தற்கொலைக்கு முயற்சிக்க வில்லையா? அதே போல்தான் பகவான் பாபாவும்" என்று அவர் விளக்கமளிக்கிறார்.

கொலை முயற்சி பற்றிய செய்தி பாபாவின் பக்தர்களை அதிர்ச்சி யடையவைத்தாலும், அவர் மீதான நம்பிக்கையை பக்தர்களிடம் அசைத்துவிடவில்லை.

உலகெங்கும் ஏன் இலங்கையில் கூட பாபா மீது கொலை முயற்சி என்ற செய்தியைக் கேட்ட பலர் நினைவிழந்து போனார்கள்.

கொலைகளும்-கொலை முயற்சிகளும் அவற்றிற்கு இலக்கானவர்களை மேலும் புகழடைய வைத்து விடுகின்றன.

சத்யசாயிபாபாவின் விசயத்திலும் அவரது புகழ் மேலும் உயர்ந்திருக்கிறது.

**இப்படியும் ஒரு பேச்சு**

ஒரு சாதாரண மனிதனைக் காப்பாற்றுவது போல், பாபாவைக் காப்பாற்றியிருக்கிறார்கள். இது பாபாவின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டது. பொலிஸ் தான் அவரைக் காப்பாற்றியது. அவரால் தன்னைக் காத்துக் கொள்ள முடியவில்லை.

இலங்கையரான டாக்டர் கோவூர், பாபாவுக்கு சவால் விட்டவர். ஒரு சித்தரை முக்காலம் உணர்ந்த ஞானி என்று எப்படி அழைக்கலாம்? என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே 'கோவூர்' கேட்ட கேள்வி இப்போது நியாயமாகிவிட்டது. இப்படி சில நாஸ்திகர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

**யாருடைய கைவரிசை?**

இந்திய ஜனாதிபதியும்-பிரதமரும் பாபாவின் ஆசீர்வாதத்திற்காக காத்துக் கிடப்பதை சில இந்திய வட நாட்டுச் சாமியார்கள் விரும்பவில்லை. அரசியலில் மூக்கை நுழைத்துள்ள அந்தச் சாமியார்கள் பாபா மீது பொறாமை கொண்டு கொலைச் சதிக்கு தூபமிட்டிருக்கலாம் என்றும் ஒரு சந்தேகம் நிலவுகிறது.

# தகப்பனாக இருக்கட்டும்!

-முகில் வண்ணன்-

ஏழில் செவ்வாய் தமிழ்ப் பெண்களின் சாதகத்தில் வந்திருந்து பல அனர்த்தங்களைச் செய்கின்றது. ஏழிற் செவ்வாய் தோசம் என்று எத்தனையோ பெண்கள் மணம் காணாமல் இருப்பது தமிழினத்தில் மட்டுமே! ஏழிற் செவ்வாய் தோசம் இருப்பவர்களுக்கு காலங்கடந்த திருமணமே கைகூடும் என்பது சோதிடர்களின் கணிப்பாகும். ஏழிற் செவ்வாய் மாங்கல்யத்துக்கு ஆகாது என்றும், கணவனை இழந்து விடுவாள் என்றும் பயங்காட்டியே அந்தப் பெண்களின் வாழ்வை பாழடித்து விடுகின்றனர் பெற்றோர்.

இதனால் இப்படியான பெண்கள் தமது காதல் வாழ்க்கையை மறந்து வாழ்கின்றனர். ஏழிற் செவ்வாய் மாப்பிள்ளை கிடைக்க வேண்டும் அல்லது எட்டிலோ வேறு எங்கோ இருந்து தோசமுள்ள செவ்வாய் அமைந்த சாதகரை மாப்பிள்ளையாகப் பெற்றோர் பிடிக்கும் வரை அவர்களும் மௌனித்து இருக்க வேண்டும்.

இவ்வாறான தோசமுள்ளவள் தான் சுதாமதி. இப்போது வயது இருபத்தி ஏழைக் கடந்து விட்டது. இன்னும் மணமாகவில்லை. அவளுக்கேற்ற மாப்பிள்ளை கிடைக்கவில்லை. இதனால் அவள் அண்ணன் சுதாகர் கூட முப்பது வயதைக் கடந்தும் தங்கைக்குக் கல்யாணம் முடிந்த பின்னரே தான் முடிக்க வேண்டும் என்று தவம் இருக்கிறான். அவனது ஆசாபாசங்களைத் தங்கைக்காக மூட்டை கட்டிப் போட்டுவிட்டான்.

"டக்..டக்" கதவில் தட்டப்படும் ஒலி கேட்டது

"அம்மா யாரென்று பாருங்களன்..." என்று குரல் கொடுத்தாள் சுதா 'பாத்றூமி'ல் இருந்து.

பதிலைக் காணோம். மீண்டும் கதவில் தட்டும் ஒலி.

"இந்த நேரத்தில் இந்தம்மா எங்க போயிட்டா. இப்படித்தான் நிண்டாப் போல போயிடுவா என்று எண்ணியவளாக அவசரமாக துடைத்துக் கொண்டு 'பாத்டவலை' சுற்றிக்கொண்டு வெளியே வந்தாள்.

கதவு திறந்தே இருந்தது. வெளியே சுதாகரின் நண்பன் ஆனந்தன் நின்று கொண்டிருந்தான்.

வீட்டில் நண்பன் இல்லை என்று தெரிகின்றது. ஆனால் எங்கே சென்றிருப்பான்? கடற்கரைக்கா? லைப்பிரரிக்கா? அல்லது வேறு எங்குமா? என்று அறிந்து செல்லவே அவன் காத்து நின்றான். ஆனந்தன் எவ்வளவு தான் அண்ணனின் நெருங்கிய நண்பனாக இருந்தாலும் அண்ணன் அவனுடன் வெளியே வைத்து கதைத்து அனுப்பி விடுவான். அல்லது கூடப் போய் விடுவான். தான் எத்தனை முறை சொல்லியும் அண்ணன் வீட்டினுள் கூட்டி வந்து கதைக்காதது வியப்பைத் தரும். இதை எண்ணியவளாகவே வந்து கொண்டிருந்தாள் சுதா.

"அண்ணா வீட்டில் ..." என்று சொல்ல வந்த போது சறுக்கி பின்பக்கம் அடிபட விழுந்தாள் சுதா. அவள் துவாய் அலங்கோலமாகக் கிடந்தது. நேர் எதிரே பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் எழும்புவதற்கு அவசரப்பட்டதில் துவாய் அவிழ்ந்து விட்டது எழும்பவும் முடியவில்லை. யாரோ தேங்காய் எண்ணையைக் கொட்டி இருந்தார்கள். ஒரு கணம் தான். ஓடி வந்து ஆனந்தன் அவளைத் தூக்கி விட்டான்.

சுதா ஓடிப் போய் அறையினுள் 'கேட்டி' னின் பின்னால் மறைந்து கொண்டாள். ஆனந்தனுக்கு மூச்சு நெருப்பாய் சுட்டது. அறையை எட்டிப் பார்த்தான். அவள் அழுது கொண்டு இருந்தாள். "நல்ல அடிபோல" என்று கிட்டே சென்று அவளைத் தேற்றினான்.

நெருப்பும் பஞ்சும் பற்றிக் கொண்டது. ஏழிற் செவ்வாய் இப்போது என்ன செய்யும்?

"என்னைக் கைவிட மாட்டீர்களே?" - இது சுதா.

"பைத்தியமா! அண்ணாவிடம் கேட்டுக் கல்யாணத்தை முடிப்போம்" என்று சென்று விட்டான்.

சென்றவன் சென்றவன் தான். வீட்டுப் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

சில நாட்களில் ஆனந்தனுக்கும் கோமதி என்ற பெண்ணுக்கும் திருமண ஏற்பாடு நடைபெறுவதாக வீட்டில் கதைத்தான் சுதாகர். சுதா தனியே அறையில் கிடந்து அழுதாள். இது ஏனென்பது வீட்டில் ஒருவருக்கும் தெரியவில்லை.

ஒரு மாதத்தின் பின்னர் அதற்கான காரணம் தெரிய வந்தது . அவளுக்கு அடியும் உதையும் கிடைத்தன.

ஆனந்தனிடம் சென்று கெஞ்சினான் மன்றாடினான் சுதாகர். அவன் அசையவே இல்லை.

"எனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. எனக்கு நல்ல கொழுத்த சீதனத்தோடு கல்யாணம் நடக்கப் போகுது. விசர்கதை கதைக்காமல் போயிடு" என்றான் அவன்.

"ஆனந்தா என் தங்கை உன்னால் களங்கப்பட்டு விட்டதாகக் கூறுகிறாள். எந்த ஒரு பெண்ணும் இதற்குப் பொய் பேச மாட்டாள். தயவு செய்து அவளை ஏற்றுக்கொள் உன் கால்களைப் பிடித்தேன்" என்று அவன் கால்களில் விழுந்தான் சுதாகர்.

காலால் உதறிவிட்டு வெளியே நடந்தான் ஆனந்தன். இதைக் கேள்விப்பட்ட தாய் தந்தையர் படுக்கையாகி விட்டனர். சுதாகர் நடைப்பிணமாகி விட்டான்.

விரைவாக நாள் பார்த்து தேதியைக் குறித்து விமர்சையாகத் திருமண ஏற்பாட்டைக் கவனித்தான் ஆனந்தன். எந்த நேரத்திலும் தனது திருமணத்துக்கு சுதாவினால் ஆபத்து ஏற்படும் என்ற பயம் மனதை எப்போதும் உறுத்திக் கொண்டே இருந்தது.

திருமணம் சிறப்பாக நடந்தேறியது. திருமணப்பதிவு மட்டும் அன்று நடைபெறவில்லை. அறிவித்தல் கொடுத்த திருமணப் பதிவாளருக்கு அன்று திடீர் சுகயீனம் காரணமாகப் பின் போடப்பட்டது. ஆகவே வேறொரு நல்ல தினத்தில் அதனை வைத்துக் கொள்வதென்றும் அன்றே சீதனப் பணத்தைக் கைமாறுவது என்றும் தீர்மானமாயிற்று.

திருமணம் முடிந்து மதியச் சாப்பாடு பரிமாறப்பட்டதும் சனசந்தடி குறையலாயிற்று. பரிசுப் பொருட்கள் குவிந்து கிடந்தன. கோமதிக்கு இது பேசிச் செய்த திருமணம். ஒரே ஒரு முறைதான் மாப்பிள்ளையைப் பார்த்து இருக்கிறாள். குனிந்த தலை நிமிரவே இல்லையவள். தலை சுமக்கிக் கொள்ளப் போகுது என்று தோழிகள் பகிடி பண்ணினர். அவளுக்கு அத்தனை வெட்கம் என்று மாப்பிள்ளையும் ஒரு சில வார்த்தைகளுடன் நிறுத்திக் கொண்டார்.

இரவாகியதும் வீடு அல்லோல கல்லோலப்பட்டது. ஆமாம் சாந்தி முகூர்த்தத்திற்கான ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாடிவீடு அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மேல் மாடியில் வேறு யாரும் செல்லக் கூடாது என்று தடையுத்தரவு போட்டிருந்தார் கோமதியின் தந்தை. கோமதியின் தோழிகள் அமர்க்களப்படுத்தினர்.

தோழிகள் கோமதியை மேல் மாடியில் கொண்டு விட்டு வந்தனர். கோமதி தன் முன்னேற்பாட்டின்படி மாடி /றையில் மறைத்து வைத்திருந்த சுதாவை வெளியே கூட்டிவந்து தனது கடிதத்தையும் பால்பழத்தையும் கையில் கொடுத்து அறைக்குள் கொண்டு விட்டாள்.

சுதாவைக் கண்டு அதிர்ந்து போய் எழுந்தான் ஆனந்தன். வெளியே கதவைப் பூட்டினாள் கோமதி. "எல்லாம் கடிதத்தில் எழுதி இருக்கிறேன் அதன்படி செய்யுங்கள்" என்று கூறிவிட்டு வந்து சிறிது அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். கீழே இன்னுமொரு பூகம்பத்தை எதிர் கொள்ள வேண்டுமே!

சந்தடி சற்றுக் குறைந்ததும் மெல்லவே வந்து தன் அலங்காரங்களைக் கழற்றினாள். செய்தி பரவி அம்மாவும் அப்பாவும் இன்னும் சிலரும் வந்து கூடினர். "என்ன மகள் இது?" என்று அழுதுவிட்டாள் தாய்.

"அம்மா இதுவரை நான் ஆடியது நாடகம். இந்தாங்க தாலி" என்று அதையும் கழற்றிக் கொடுத்தாள்.

"என்ன கோமதி இது. நாள் பார்த்து அக்கினி வளர்த்துக் கட்டியதை நாடகம் என்று ஒரே நாளில் கழற்றுகிறாய்," என்று அதட்டினார் தந்தை.

"அப்பா சத்தம் போடாதீர்கள். ஆனந்தனுக்கும் சுதாவுக்கும் முதலிரவு மேல்மாடியில் நடக்கிறது. அவளைக் கெடுத்து விட்டு என்னையும் சீதனத்தையும் அனுபவிக்கலாம் என்று வந்தார் மாப்பிள்ளை. அதுதான் இந்த நாடகமாடினேன். எனக்கு கடைசி நேரத்தில் தான் தெரிந்தது. சுதாவும் அவள் அண்ணனும் என் காலில் வந்து விழுந்தார்கள். எனது ஏற்பாட்டின்படிதான் பதிவும் ஒத்திப்போடப்பட்டது. மற்ற ஏற்பாடுகளைத் தவிர்க்க முடியாததினால் தாலி கட்டுவதை ஏற்க முடிந்தது. சினிமாவுக்கும் மந்திரம் ஓதி அக்கினி வளர்த்துத் தான் கட்டுகிறார்கள். இதுவும் ஒரு சினிமாக்காட்சி என்று எண்ணிக் கொண்டே கழுத்தை நீட்டினேன். இப்போது ஆனந்தனுக்குப் புரிந்து இருக்கும். தனக்கு மனைவி யார் என்பது?"

"என்ன செய்துவிட்டாய் மகள் ஊர் உலகத்துக்கு என்ன சொல்லப் போகிறேன்?"

"ஊர் உலகத்துக்கா? அந்தப் பெண்ணைக் கெடுத்த ஆனந்தனுக்கு அந்த ஊர் உலகம் என்ன செய்தது? அவனது பெற்றோர் கால்களிலும் விழுந்து கதறினார்களே அப்போதும் அவர்களுக்குக் கண் திறக்கவில்லையே. இப்படிப்பட்ட ஊர் உலகத்தைப் பற்றியா பேசுகிறீர்கள்? ஒரு பெண்ணைக் கெடுத்தவனைப் பற்றி ஏனப்பா இந்த ஊர் உலகம் சிந்திக்கவில்லை? ஒரு ஆண் எத்தனை பெண்ணை வேண்டுமானாலும் கெடுக்கலாம் - அது பற்றி உங்களுக்குக் கவலை இல்லை. உங்களுக்கு வேண்டியது மாப்பிள்ளைதான். அந்தப் பெண்களைப் பற்றி இந்த சமூகம் சிந்திக்கத் தவறிவிடுகின்றது. பெண்கள் சீர்திருந்த வேண்டுமானால் இனி இந்த ஆண்களைப் பற்றிக் கவலைப்பட்டுப் பிரயோசனம் இல்லை. பெண்களாக நடவடிக்கை எடுத்தால் தான் சரி. ஆமாம் என்னைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சுதாவைப் போன்ற பெண்களுக்காவது விடிவு ஏற்பட வேண்டும். அது இந்தக் கோமதியுடன் ஆரம்பமாகட்டும்"

கோமதி தந்தையையும் ஆண் வர்க்கத்துடன் சேர்த்துப் பேசியதைக் கேட்டு அவர் விக்கித்துப் போய் நின்றார். தாய் தந்தையர் மற்றப் பெண்களைப் பற்றிக் கவலைப்பட்டால் தம் பெண்ணை எப்படிக்கரை சேர்க்க முடியும்? ஆகவே அவர்கள் தம் பெண்ணைப் பற்றியே கவலைப்படுவதே இயற்கை. சமுதாய பிரக்ஞை எல்லோருக்கும் ஏற்படுவதில்லையே!

"மாப்பிள்ளையின் பெற்றோருக்கு நாளைக்கு என்ன சொல்வது?"

"ஏன் அவளை அனுபவிக்கும் போது அவளுக்கு ஏழில் செவ்வாய் தோசம் பற்றிக் கவலை இல்லை. ஏழில் செவ்வாயுடன் அவனது குழந்தையை அவன் தாங்கி வளர்க்கலாம். இவன் கணவனாக இருக்க மட்டும்தான் கூடாதா? மாங்கல்ய பாக்கியம் இல்லை என்றால் அதைக் கட்டாமலே இருக்கட்டும். சட்டப்படி கணவன் மனைவி ஆனால் சரி. கணவனாக இல்லாவிட்டாலும் அவன் இனி அவளது குழந்தைக்குத் தகப்பனாகவே இருக்க வேண்டும்.

"சம்பிரதாயத்துக்காக தாலியைக் கட்டிக் கழட்டிய என்னை ஊர் உலகம் என்ன சொன்னாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்று கூறிவிட்டு படுக்கையைத் தட்டிப் போட்டாள் கோமதி.

அவளது களங்கமற்ற உள்ளத்திற்கு ஒரு நல்ல வாழ்வு கிடைக்காமலா போய்விடும்? இப்போது அவள் ஆழ்ந்து உறங்கட்டும்.




## இலக்கிய நயம்

தமிழ்க் கவிஞர்களில் சகல கவிதை வடிவங்களையும் கையாள்வதில் வல்லவர் பேராசிரியர் அப்துல் ரகுமான். இவ்வார இலக்கிய நயத்திற்கு அவரது படைப்பில் ஒரு துளி.

# வைகறைச் சாவி

அப்துல் ரகுமான்



வைகறை ஒரு மந்திரவாதி. அதன் கிரண மந்திரக்கோல் அசைந்ததும் தாரகைகள் இமை மூடிக்கொள்கின்றன. நாள் அந்தியில் போர்த்திய கறுப்புப் போர்வை சரிகைச் சேலையாகிறது. இறந்து கிடந்த கண்கள் இமைச் சமாதியைத் தகர்த்துக் கொண்டு உயிர்த்தெழுகின்றன. ஊமை மொட்டுக்கள் வாய்திறந்து ரகசியங்களை உளறிக் கொட்டுகின்றன. பறவைகள் இசைக் கருவிகளாகி சுப்ரபாதம் பாடுகின்றன.

இந்த வைகறை அவுஸ்ரேலியக் கவிஞர் ஜேம்ஸ் கமக்காலே என்பவருக்கும் மாய மந்திரப் பொழுதாகவே தெரிகிறது.

இது-
மாய மந்திரப் பொழுது;
சேவல் கூவிய
நேரத்தில்
அவள்
என் கைகளில் புரண்டாள்
மென்மையாக முணுமுணுத்தாள்;
'என்னில்
இன்ப சொர்க்கத்தைத் திற;
இதுதான் நேரம்
தேடல் படைக்கும்
ஒவ்வொரு புதையலையும்
அடைவதற்கு,
அன்பனே! விரைவாயாக!'

இன்ப சொர்க்கம் அவளுக்குள் ஒளிந்து கிடக்கிறது. அந்த சொர்க்கம் அவளுக்குள் இருந்தாலும் அவனுக்கானது. அதைச் சொர்க்கம் என்று அறிபவனே அவன்தான்.

இருட்டில் புதைந்து கிடக்கும் அழகுகளை வைகறை தான் தேடி எடுக்கிறது. எனவே அவளுக்குள் இருக்கும் சொர்க்கத்தையும் கண்டறிய வைகறையே சரியான நேரம் என்கிறாள். அது மட்டுமல்ல, அந்த சொர்க்கத்தைத் திறக்கும் சாவியே அதுதான் என்கிறாள்.

இந்த அழகிய பொழுது நெடுநேரம் நீடிக்காதே. அதனால் காதலனை அவசரப்படுத்துகிறாள். அவளுக்குள் இருக்கும் எல்லாப் புதையல்களையும் அவன் அடைந்து விடவேண்டும் என்று அவளுக்கு ஆசை.

இந்தப் புதையல் யாரோ மறைத்து வைத்தவை அல்ல; காதலன் தேடத் தேட இந்தப் புதையல்கள் உண்டாகின்றன. அவளே அறியாத புதையல்கள் அவை.

பெண் ஆணால்தான் தன் அர்த்தத்தை அறிகிறாள். ஆண் என்ற கண்ணாடி இல்லை என்றால் அவளுடைய அழகுகளே அவளுக்குத் தெரியாது. காதல் மாமிச பட்சிணி அல்ல; அதன் பசிக்குச் சதை விருந்து அருவருப்பானது.

அவள் காதலின் புனிதமான பசியைக் கௌரவிப்பவள். எனவே அதன் கௌரவத்திற்கு ஏற்ற உன்னதமான விருந்தைப் பரிமாறுகிறாள்.

'என் கண்களின்
கரிய பாவையில் ததும்பும்
கண்ணீரைச் சுவைபார்;
இணங்கிய உடலின்
உள்ளார்ந்த கூக்குரல்களை
முணுமுணுக்கும் தொண்டையிலிருந்து
நன்றாகப் பருகு;
சீக்கிரம்,
பொழுது புலர்வதற்கு முன்,
நாள், அதன் ஆயிரம் பொருள்களைப்
புதுப்பிப்பதற்கு முன்
என் சொர்க்கத்திற்குள்
பிரவேசம் செய்;
சிவப்புக் குருவி
பாடுகிற பொழுதே
உன் இன்பத்தைத்
தொட்டு எடுத்துக்கொள்

கண்ணீர் தெய்வீகத் திராட்சைகளின் ரசம். அது தான் காதலுக்கு ராஜ பானம்; காதலின் அமரத்துவத்திற்கு அமிர்தம்.

அவளுக்குள்ளே, உள்ளின் உள்ளே ஆயிரமாயிரம் தாகங்கள் சுரக்கின்றன; ஆயிரமாயிரம் அனாதைப் புதையல்கள் கூக்குரலிட்டு அழைக்கின்றன.

இந்தப் பானத்தை, இந்த ஏக்கக் கூக்குரல்களைப் பரிமாறும் வாய்ப்பு எப்போதும் கிடைப்பதில்லை. எனவே இந்த வாய்ப்பை, நேரத்தைத் தவற விடாமல் பயன்படுத்திக் கொள் என்கிறாள்.

காதலின் கட்டளையை, அழகின் ஆணையை யார் மீற முடியும்? அவன் கீழ்ப்படிகிறான்.

சிவப்புக் குருவியின்
அழைப்போசை போன்ற
தூய்மையான அந்தப் பொழுதில்
சுவரோரம் மலர்ந்த
அந்தி நீல ஐரிஸ் மலர் போன்ற
மர்ம மணம் கமழும்
அந்தப் பொழுதில்
எங்கள் காதல்கள்
கலந்தன;
அதற்குப்பின்
நாள், அதன்
கிழக்கு நெருப்புகளை
எங்களிடமிருந்து
புதுப்பித்துக் கொண்டது;
அசையும் பொருள்களை எல்லாம்
அவற்றின் ஓய்விலிருந்து
மீட்டது;
அவற்றின் காதல்களைப்
பின் தொடர்ந்து சென்றது;
எங்கள் காதல்
மார்பின் மீது
உறங்கிக் கொண்டிருக்க,

காதல்தான் கிழக்கு வெளிச்சத்தைத் தருகிறது; நாளுக்குக் காயகல்பத்தைத் தருகிறது. இயற்கைக்கு இயக்கத்தைத் தருகிறது.

ஆனால் இவ்வளவும் செய்கிற காதல், ஒன்றும் அறியாதது போல் உறங்கிக் கிடக்கிறது.

சிறுகதை

# வானவில் பார்த்தல்

-அறிவுமதி-

> தமிழ்நாட்டின் புதுமை எழுத்தாளர்களில் ஒருவர் அறிவுமதி. அவர் ஒரு கவிஞரும் கூட. 'புதிய பார்வை'யில் அவர் எழுதிய சிறுகதைதான் இது.

**பா**ல் குடித்து முடித்த திருப்தியில் குழந்தை மார்புக் காம்பைக் குதப்பிக் கொண்டிருந்தது. தளிர் வயிற்றைத் தடவிப் பார்த்தேன். விடியற் காலை ஒன்றுக்குவிட்டு வயிறு துவையும் வரை இந்தப் பால் தாங்கும். குழந்தை குதப்பும் சப்தம்; காலையில் சென்னையிலிருந்து பெங்களூருக்குப் புறப்பட்ட ரயிலின் சப்தத்தை முடிச்சிட்டு இழுத்தது. வயிற்றைத் தடவும் குழந்தையின் கையாய் ரயில் ஞாபகம்.

**அ**றையின் மூலையில் மின்விளக்கிற்குப் பக்கத்தில் படபடப்புடன் அங்கும் இங்குமாய் என்னை எனக்குள் மூழ்கடித்தது. ஒரு வண்ணத்துப்பூச்சி பறந்து கொண்டிருந்தது. பதவிசாய் எனது நிழற்படத்தின் மேல் போய் அமர்ந்தது. வண்ணத்துப்பூச்சி யார்? அவனா? என் மீதான அவன் படர்தல் எந்த உணர்வில்? அய்யோ பல்லி.... பல்லி..... விசுக்கென எழுந்து போய்ப் பல்லியை விரட்டினேன். சன்னல் வழியே அது வெளியேறியது; எட்டிப் பார்த்தேன்; நிலா கூப்பிட்டது; நிலாவோடு பேசிநடக்க ஆசைப் பட்ட நாட்களெல்லாம் போயாச்சு. பண்டிகைகளின் போது வருகிற நிலா ராத்திரிகளில் பெண்களெல்லாம் தெருவில் கும்மி கொட்டுவோம். பையன்களெல்லாம் சடுகுடு.... ஆறாள் பாரி....எட்டாள் பாரியெல்லாம் விளையாடுவார்கள். ஆடி முடித்த பையன்கள் அந்த நள்ளிரவிலும் ஆற்றுக்குப் போய் குளித்துவிட்டுத் திரும்புவார்கள். பெண்கள் மட்டும் வியர்வைக் கசகசப்போடு வீட்டிற்குள் போய் முடங்க வேண்டியதுதான். மனசு துடிக்கும்... கும்மி முடித்து.. ஒரு நாளாவது தோழிகளோடு ஆற்றுக்குப் போய்...உடம்பில் ஒரு துணியும் இல்லாமல் நிலாசிரிக்கும் ஆற்றில் நீச்சலடிக்க வேண்டும். வெடுக்வெடுக்கெனக் கடிக்கும் கெண்டைகளைப் பிடிக்க கைகள் நீள்கையில் தட்டுப்படும் மீன்களின் திமிறல் உணர்ந்து மகிழ வேண்டும். கரைந்து போன கனவுகள் ஒன்றா இரண்டா... நிலாவிடம் 'பரவாயில்லை' சொல்லி வந்தேன். குழந்தையின் மீது சின்ன எறும்பு நகர்ந்தது. மெல்ல ஆட்காட்டி விரலில் ஏறச் சொல்லி கீழே ஊதி விட்டேன். "என்ன நடுராத்திரியில?" கை போட்டபடியே கணவர் கேட்கவும் உளறினேன்.. "பல்லி.. வண்ணத்துப் பூச்சி" "சரி சரி குழந்தையைத் தொட்டில்ல போடு" "ஏன்" "ஏன்னா" "ரயில்ல வந்தது அசதியா இருக்குங்க" "தூக்கம் கலச்சது நீ...." "ப்ளீஸ்..நாளைக்......" விருப்பம் நிராகரிக்கப்பட்டது. நானற்ற நான்; குழந்தை தொட்டிலில் உதடு சப்பியபடி; தாகம் எடுத்ததும் தண்ணீர் மொண்டு குடிக்கிற எளிமைதான் பெண்! வேட்கை, வேட்டையாகிறது. வேட்டையாடுவதிலும் ஒரு நியாயம் இல்லையா? ஆணுக்குள் தூங்கும் மிருகம் விழித்தால் போதுமா? பெண்ணுக்குள் தூங்கும் மிருகம் எழும்ப வேண்டாமா? பெண் மிருகம் வறட்சி முற்றி தாகம் தேடி வரவர உள்பதுங்கி.. ஒடுங்கி.. படுத்து..தண்ணீரில் வந்து உதடு வைத்ததும்... நகர்ந்து நகர்ந்து முன்னேறி.... அரவம் கேட்டுக் காது புடைத்துத் திரும்பிய பெண் மிருகம் மிரண்டு ஓட ஓட விரட்டி... பின்னங்கால் இடறி... விழுக் காட்டி..... கழுத்தைக்கௌவி.... திமிறத் திமிற; துடிக்கத் துடிக்க கடித்துக் குதறி ருசிக்கையில்தானே... அடிபட்ட பெண் மிருகத்திற்கும் பசியாறும் ருசி! ம்கூம். இங்கே நான் ஜடம். விருப்பம் தேவைப்படாத அடிமை. எந்த நேரத்திலும் வெறிக்குத் தயாராய் ஆடைகளில் மூடிவைக்கப்பட்டிருக்கும் சதை. பெண்ணை உசுப்பிவிட்டுத் தூங்கிப்போகிற ஆண்களே அதிகம். என் பல்லி குறட்டைவிட ஆரம்பித்தாயிற்று. அனுபவித்து விட்டதாய்த் திருப்தி அதுக்கு. செயலிலா அது? மணமாய்.... இசையாய்... .ருசியாய்.... காலங் கடந்து வந்து மனசுக்குள் கண்ணாமூச்சி விளையாடக் கூப்பிடுகிற சுகானுபவத்தில் இல்லையா? அது நிகழ அறைமுழுக்க தூய்மை வேண்டும். திரைச்சீலையின் மெல்லிய அசைவும் அதன் சூழலுக்கு ஒத்திசைவாய் இருக்க வேண்டும். சுவரில் தொங்கும் ஓவிய வர்ணங்களும், வீணையின் மீதான விரல்களாய் இறங்கிவர வேண்டும். லேசான மணம்.... மிருதுவான வெளிச்சம்... ஆழ ஆழத்தில் கேட்கும் மெலிவில் இசை... எல்லாவற்றிற்கும் மேலாக.. அப்போதுதான் குளித்து முடித்த மினுமினுப்பு துளித்துளி ஈரம். கண்களால் பேசும் செல்ல நிமிடங்கள்... பார்த்துப் பார்த்துப் பார்த்து... லேசாய் முறுவலித்து... சிணுங்கி...'சீபோ' சொல்லி...உதை கிடைக்கும்' சொல்லி...'தடியா' சொல்லி... தொட சீண்டி 'தொடாதே' சொல்லி...தொடத் தூண்டி... கட்டிப் பிடித்து உருண்டு.... திமிறத் திமிறத் திமிற...

> மனசுக்குப் பிடித்தவனோடு
> ரயிலின் தனித்த அறையில் அமர்ந்து கொண்டு
> கனா பேசி.... கவிதை பேசி...முரண்பட்டு
> விமர்சனம் பேசி நான்கைந்து
> நாட்களுக்கு இறங்காமல் சன்னல் வழியே
> அழகுகள் பார்த்து வாழநினைத்த
> கனவுகளையெல்லாம் கனவுகளே மேய்ந்தன.

அடக்கி.... மூச்சிழையும் அழகில் புன்னகைத்து.... விரல் வாங்கி வருடி... மடியில் சாய்த்து.... வகிடிலிருந்து விரல்வழுக்கி நெற்றி மூக்கு உதடு வர...லேசாய்க் கடித்தலில் மிருகம் சீண்டி.... கூந்தல் அள்ளி முகம் மூடி... ஈரம்காயா கொத்து முடியை நறுக் நறுக்கெனக் கடிக்கையில் சாம்பிராணி மணம் ருசித்து... நுனிநாக்கால் நெடுக மேய்ந்து மேய்ந்து.... தீ கொளுத்தி.... கண்களில் ஜ்வலிக்கும் நெருப்பு ரசித்து... உதடுகளின் பிளவில்... அதிர்வில்...... பெருமூச்சின் அனலில்.... முனகலில் கவிதை படித்து.... முறுக்கேறித் தளர் கையில் முடிபிடித்து இறுக்கி... முகம் இழுத்து வைக்கிற முத்தத்தில் பாஸ்மார்க் உணர்ந்து..... உற்றுப்பார்த்துக் கொள்கையில் ஏற்படுகிற சுகம்.... மறுபடியும் குளித்து வந்து தூய்மையாய் படுக்கையில்.... நெற்றிப் பொட்டிலிருந்து மெல்ல மெல்ல அழுத்திவிட்டுக் குப்புறக் கிடத்தி.... முதுகு அழுத்தி.... கால்கள் பிடித்து.... விரல்கள் சொடுக்கெடுத்து...நுனிநாக்கால் நெற்றியில்...கண்களில்...மூக்கில் உதட்டில்...மோவாயில்...கழுத்துச் சரிவில் முத்தமிட்டு "தூக்கம் வருதாம்மா" கேட்கிற ஆண் யார்? அவன் ஆண்!

என் வாழ்க்கை...பல்லியின் வாயில் வண்ணத்துப்பூச்சி.

குளித்துவிட்டு வந்து குழந்தையைத் தூக்கிப் பக்கத்தில் போட்டுக் கொண்டேன். அடையாளம் தேடி வயிற்றைத் தடவியது. தடவத் தடவத் தடவ மயிலிறகால் நீவிவிடுகிற சுகம். கட்டியணைத்து கை எடுக்கையில் உள்ளங்கால் ஜில்லிப்பில் 'சுளீர்' என அவன் ஞாபகம்.

அவன் யார்? பெயர்? ஊர்? இனி என்றுமே சந்திக்க முடியாத அவனுக்குப் பெயர் எதற்கு? ஊர் எதற்கு? பயணத்தில் எதேச்சையாய்க் கிடைத்தவனின் முகவரிதான் எதற்கு?

காணக் காத்திருந்தவன் நிஜம். ஆயுள் நீளம் தாண்டிக் காணத் தவித்துக் கொண்டிருந்தவன் என் கனாக்காரன்.

**ர**யிலில் ஏறியதும் சன்னல் தேடி அமர்ந்தேன். சின்ன வயசிலிருந்தே எனக்கதில் பிரியம். வேறு யார் அமர்ந்திருந்தாலும் அம்மாவிடம் சொல்லி..... அப்பாவிடம் கெஞ்சி அந்த இடம்பிடித்து அமர்ந்து... மலை பார்த்து... சரம் தொடுத்துப் பறக்கும் பறவைகள் பார்த்து... மந்தையாய் அசையும் ஆடுகள் பார்த்து... பிரியவிருப்ப மில்லாமல் செல்லமாய் ஓடிவரும் நிலா பார்த்து... தடதடக்கும் பாலத்தில் தண்ணீர் பார்த்து... பயணம்; சின்ன வயசிலிருந்தே எனக்குப் பிடித்துப் போன விஷயம்.

மனசுக்குப் பிடித்தவனோடு ரயிலின் தனித்த அறையில் அமர்ந்து கொண்டு கனா பேசி... கவிதை பேசி.. .முரண்பட்டு விமர்சனம் பேசி.. நான்கைந்து நாட்களுக்கு இறங்காமல் சன்னல் வழியே அழகுகள் பார்த்து வாழ நினைத்த கனவுகளை எல்லாம் கனவுகளே மேய்ந்தன.

நான் சன்னல் பக்கம் குழந்தையுடன் அமர்ந்திருந்தேன். எதிரில் கணவர்.... பெட்டிகளை பைகளை இருக்கையின் கீழ் நகர்த்திக் கொண்டிருந்தார்.

அப்போது தான் அவனும் அவனது நண்பனும் உள்ளே வந்தார்கள். எங்களைப் பார்த்தார்கள்; அடுத்த பகுதிக்குப் போனார்கள். மறுபடியும் வந்தார்கள். குழந்தையின் பார்வை அவன் மீது தாவியது சிரித்தது; சிரித்தான். கணவருக்குப் பக்கத்தில் அமர்ந்தார்கள்.

"ஏய் புத்தகம் ஏதாவது வாங்கி வரட்டுமா?"

"எதுக்குடா?"

"படிக்கத்தான்"

"யார்றா நீ! ரயில்லே போகும் போது எவனாவது புத்தகத்துல கண்ணவைப்பானா? போகப் போக சன்னலுக்கு வெளியே படிக்க எவ்வளவு அழகுங்க இருக்குதோ.....இந்தக் குழந்தை போதும்...இன்னிக்கு எனக்குப் படிக்க...."

அட! நான் காலங்காலமாய் தேடிக்கொண்டிருந்த அவன்! அவனே! மனசு... கனவுகளின் அடுக்குகளில் எதை எதையோ தேடிக்கொண்டிருந்தன.

ரயில் அரக்கோணம் தாண்டி... காட்பாடிதாண்டி போய்க் கொண்டிருந்தது. நண்பனைத் தாண்டி, கணவரைத் தாண்டி சன்னலுக்கு வெளியே எதேச்சையாகக் கிடைத்த அழகுகளையெல்லாம் இரசித்த படி வந்தான்.

"ஏய்... இப்ப கத்திக்கிட்டே ஓடிச்சே.... அதுக்குப்பேருதான் ஆக்காட்டி குருவி. ஆள் அரவம்பட்டா போதும், கத்த ஆரம்பிச்சுடும். ஒண்ணு இங்க கத்துனா; ஒண்ணுதூரத்துல கத்தும். ரெண்டும் படபடப்போட பேசிக்கிற மாதிரியே இருக்கும். கேக்க சுகமா இருக்கும். மூக்கு சிவப்பா... கால்கள் வைக்கோல் மாதிரி மஞ்சள்" மெல்லிய குரலில் ருசித்து ருசித்து அவன் பேசியவிதமே அழகு, கவிதை ராஸ்கல்!

ஜோலார்ப்பேட்டை தாண்டி ரயில் பாறைகளினூடே போய்க் கொண்டிருக்கையில் தூறல் விழுந்தது. எட்டி எட்டிப் பார்க்க சிரமப்பட்டுக்கொண்டிருந்தான்.

சின்னவயசிலிருந்து நான் ரசித்த அதே ரசனை. அதே தவிப்பு. அவனது கண்களால், அவனது சொற்களால் நானும் ரசித்துக் கொள்ளலாம் என்கிற நினைப்பு வந்ததும், எப்படி கணவரை இடம் விடச் சொல்வது என்கிற தயக்கம். நல்ல வேளையாக தூறல் வலுத்தது.

"சன்னலை மூடு. குழந்தை மேல தூறல் படுதுல்ல" அவன் பதைத்துப் போனான். புரிந்து கொண்டேன்.

மெல்ல எழுந்து நான் கணவர் பக்கத்தில்போய் அமர்ந்து கொண்டேன். அவர்களை அங்கே அமரச் செய்தேன். குழந்தையைப் போல் நன்றி சொல்லிவிட்டுப் போய் சன்னல் அருகே அமர்ந்து கொண்டான்.

முகத்தில் தூறல் அடிக்க அடிக்க அவனுக்குள் அவ்வளவு மகிழ்ச்சி! புளகாங்கிதம்! துளிகள் முகத்தில் வழிய வழியத் துடைக்க மனசில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தான். வெய்யில் அடித்தது.

"ஏய்...வானவில் பாருடா!!

அய்யய்யோ... எவ்வளவோ பெருசு!!

"ஒரு ஜாண் அளவுதான் பாக்கி. அதுவும் இருந்துட்டா... முழுசா ஒரு வளையல்.. அடடா.... எவ்வளவு தெளிவா எவ்வளவு அழகா இப்படி எப்பவுமே நான் பார்த்ததிலேடா....."

எனக்கும் பார்க்கணும் போல தவிப்பு, பரபரப்பு. எப்படி? ம்கூம். அவன் சொல்லச் சொல்லத் தான் என்னால் பார்க்க முடிகிறதே! போதாதா எனக்கு!

மழைவிட்டது. ஆனாலும் நீண்ட நேரம் வானவில் அவன் முகத்தில் தெரிந்து கொண்டிருந்தது.

குழந்தை பால் குடித்துக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்தேன்; பால் அதிகமாய்ச் சுரந்தது.

குடித்து முடித்ததும் குழந்தை மடியில் விளையாட ஆரம்பித்தான். அவனைப் பார்த்துச் சிரித்தான்.

அவன் கைநீட்டினான். குழந்தை தாவியது. அள்ளித் தந்தேன். மெதுவாய் வாங்கிக் கொண்டான்; மடியில் கிடத்தி விளையாடினான்; கொஞ்சினான்; நெற்றியில் கிடந்த முடிகளை ஒதுக்கிவிட்டான். காது தொட்டான். மிருது விரல்களில் விரல் நுழைத்து இறுகும் சுகத்தில் விடுவித்தான். கன்னத்தைப் பூ தொடுவது போல் தொட்டான். நகம் கடித்துக் கொண்டான். உள்ளங்கால் வருடி 'கண்களில் ஒற்றிக் கொண்டான். உள்ளங்காலில் அழுத்தி ஒரு முத்தமிட்டான்.

குழந்தை ஒன்றுக்கிருந்தது. புரிந்ததும் வாங்கிக் கொள்ள கை நீட்டினேன். அவன் அது வடிகிறவரை சிரித்தபடியே தொந்தரவு செய்யாமல் பொறுத்துக் கொண்டான். துண்டு வாங்கி லுங்கியைத் துடைத்துக் கொண்டான். மறுபடியும் விளையாட்டு..... குழந்தையோடு குழந்தையாய்....

இறங்கும் இடம் வந்தது. குழந்தையை அள்ளி உள்ளங்காலில் மறுபடியும் முத்தமிட்டு என்னிடம் தந்துவிட்டு..... பெட்டி படுக்கையுடன் இறங்கினான்.

ரயில் நகர்ந்தது. பெட்டி படுக்கையுடன் நின்று கொண்டிருந்தவனைக் கடைசியாகப் பார்த்தேன். குழந்தைக்கு டாடா காட்டினான். குழந்தையின் கையெடுத்து நானும் காட்டினேன்.

மறுபடியும் பல்லி... உள்ளுக்கு வந்துவிட்டது. வண்ணத்துப் பூச்சியைக் குறிவைத்து நெருங்கிக் கொண்டிருந்தது. பயம் எனக்குள்; எழுந்தேன். பல்லியை விரட்டிப் பயனில்லை. வண்ணத்துப்பூச்சியை, ஸ்டூல் போட்டு ஏறி மெல்ல பிடித்தேன். சன்னலுக்கு வெளியே விட்டேன். மறுபடியும் உள்ளேயே வந்தது. மறுபடியும் பிடித்தேன்; வெளியே விட்டேன். படபடத்துப் பறந்து போனது நிலா சிரித்தது.



---

## இலக்கிய நயம்

கலைஞர் கருணாநிதியின் சங்கத் தமிழிலிருந்து ஒரு துளி.

## அடுத்தவாரம் அசத்த இருப்பவை

காலத்தை வென்ற விளையாட்டரங்கம் மற்றும் பல ஆச்சரியமான செய்திகளோடு தகவல் பெட்டி.
பேனா நண்பர் அரங்கம், வண்ணப்படத்தோடு சுவையான சமையல் குறிப்பு.

## அறிவித்தல்

தினமுரசு வாரமலரில் இடம்பெறும் போட்டிகளில் நீங்கள் பங்குகொள்ளும் போது- அஞ்சல் அட்டை முகப்பில் போட்டியின் பெயரைக் குறிப்பிடத் தவற வேண்டாம்.

முகவரி: தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

## பேனா நண்பர்கள் அரங்கம்

உங்களின் கோரிக்கை ஒன்று நிறைவேறுகிறது.
புகைப்படம் அனுப்பும் விருப்பம் இருந்தால் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் அனுப்பலாம். புகைப்படம் அனுப்ப முடியாதவர்கள் விபரங்களோடு எழுதுங்கள்.

நிமிடக்கதை

# பரிதாப முடிவு

-வீ-புவனேஷ்வர்-



வெள்ளை நிற வேட்டி. அதே நிற நீள்கை சட்டை அணிந்து, கையில் ஒரு 'சிப்'வைத்த கறுப்பு நிற பையுடன் தெஹிவளை செல்லும் பஸ்ஸுக்காக வெள்ளவத்தை பஸ் ஹோல்டை நோக்கி நடந்து கொண்டிருந்த நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க செல்லத்துரை "மாக்கற்"றுக்கு அருகில், ஒரு கடையில்...தொங்க விட்டிருந்த 'தினமுரசை' கண்டு விட்டார்.

"அடடே... ஞாயிறு மலர், இண்டைக்கே வந்திற்றுதா?"

என்ற எண்ணத்தோடு மேல் பொக்கெற்றினுள் கையைவிட்டு பத்துரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து, ஒரு 'தினமுரசு'டன் மிகுதி பணத்தையும் பெற்றுக் கொண்டு,

சட்டென்று பிரேக் அடித்து 'சர்...ர்..ர்' ரென்று நிறுத்திய பஸ்ஸில் ஏறி, சன நெரிசலுக்கு மத்தியில், தெஹிவளைக்கான ரிக்கற்றையும் வாங்கிக் கொண்டு ஒரு சீற்றுக்கு அருகில் செல்லவும், 'இச்' இட்டு மகிழத்தூண்டும் ஒரு இளம் சிட்டு அச்சீற்றை விட்டு எழும்பவும் சரியாக இருந்தது!

"அப்பாடா"

என்ற பெருமூச்சுடன் அமர்ந்த செல்லத்துரை, பத்திரிகையில் மூழ்க ஆரம்பித்தார். அருகில் அமர்ந்திருந்தவரும் தினமுரசை முதன்முதலில் பார்ப்பவரைப் போன்று 'முரசில்' முகம் பதித்தார்!

'பஸ்' தெஹிவளை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

இப்போது, பஸ்ஸில் சன நெரிசல் குறைந்து சீற்றுகள் இரண்டும் கூட காலியாக இருந்தன. செல்லத்துரை ஏதோ ஞாபகம் வந்தவராய், தன்னிடம் இருந்த பையின் வெளி'சிப்' பைத் திறந்து, அதிர்ந்தார். செக்கண்டுகள் சில உருண்டோட..... பதறியவாறு, பையை முழுவதுமாகக் தேடினார்.

ம்...ம்...இல்லை! கதறி அழ வேண்டும் போல இருந்தது. சில சிறு கண்ணீர் துளிகள் மட்டுமே வந்தது. அருகில் அமர்ந்திருந்தவர்;

"பெரியவரே.... எதத் தேர்டுறீங்க? ... ஏனிப்ப அலர்றீங்க?" என்று வினாத் தொடுத்து விடைக்காகக் காத்திருக்க "விடிஞ்சா என்ர மகள்ர கல்யாணம். சீதனமாத் தாறண்டு சொன்ன லெச்ச ரூபாயில இருபதாயிரங் குறஞ்சுது. மாப்பிள்ளைர தகப்பன் காசு கைக்கு வந்தாத்தான் கல்யாணமெண்டு சொல்லிற்றார். அதுக்காக நான் எனக்கு தெரிஞ்ச ஒரு முதலாளின்ர கால புடிச்சி கெஞ்சி வாங்கீற்று வந்த இருபதாயிரத்த இப்ப காணேல்ல"

"நல்லா பையிலே தேடி பாத்தீங்களா...?

"இதோ"

என்று பையைக் கவிழ்த்துக் காட்டினார்.

"இப்போ எல்லாம், பஸ்ஸுகள்ல பிக்பொக்கற்காரங்க அதிகம் தான்"

என்றாள் பஸ்ஸினுள் இருந்த ஒரு மனுஷி. அதற்கு ஈடாக இன்னு மொருவர்,

"ஓம் ஓம் கொஞ்சம் புத்தி குறைவா இருந்தா, அப்படித்தான் செய்வாங்க. அதுக்கு நாமதான் எச்சரிக்கையா இருக்க வேணும்"

"பாவம். பெரியவர் என்ன செய்யப் போறாரோ?" அவர்களால்-வாயால் மட்டுமே ஆறுதல் கூற முடிந்தது. 'பஸ்' தெஹிவளையை வந்தடைந்தது!

"இப்படியே வீட்டுக்குப் போனா மகளோட கதி..."

நினைக்கவே பயங்கரமாக இருந்தது. எல்லோரும் இறங்கிச் செல்ல இறுதியாய் தானும் இறங்கி தனிமரமாய், கற்சிலையாய் நின்றிருந்த செல்லத்துரையின் காதுகளில் கூ...கூ...கூ வென ரயிலின் சத்தம் முகாரி ராகம் இசைத்தது!

"இதுதான்.... இதுதான் சரியான முடிவு" என்றெண்ணியவாறு தன் உயிரைப் போக்கிக் கொள்ள தொலைவில் வந்து கொண்டிருந்த ரயிலுக்கு எதிர் நீச்சல் போட்டவராய் தண்டவாளத்தில் நடந்து கொண்டிருந்தார் செல்லத்துரை.

அதே சமயம்....செல்லத்துரையின், நம்பிக்கைக்குப் பாத்திரமான முதலாளி செல்லத்துரை மறந்து வைத்து விட்டு வந்த இருபது ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு செல்லத்துரையின் வீடு செல்ல 'பஸ்' ஹோல்ட்டை நோக்கி நடக்கலானார்.

குசிப் பேர்வழி குஸ்வந் சிங்



குஷ்வந்த் சிங்

இந்தியப் பத்திரிகை உலகின் இமயம் போன்றவர் குஸ்வந் சிங். குறும்பு கலந்த அரசியல் ஜோக்ஸ் மூலம் அதிரடி ராஜ்ஜியம் நடத்தி வருபவர்.

அவரது வயது இப்போது 78. அவர் எழுதியுள்ள நூல்களும் 78. இன்றும் இளமையோடு எழுதுகிறார். இளமையோடு வாழ்கிறார்.

மது- மாது இரண்டிலும் விருப்பம் கொண்டவர். அதை வெளிப்படையாகவும் ஒப்புக் கொள்பவர். "ஹெல்த்" என்னும் சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியில் இருந்து சில சுவாரசியமான பகுதிகள்:

கே:உணவில் கொழுப்புச் சத்தை எவ்வாறு குறைக்கிறீர்கள்?

ப: அது என் மனைவியின் வேலை. உலகம் முழுவதும் இருந்து சமையல் குறிப்புப் புத்தகங்களை வாங்கி குவித்து வைத்திருக்கிறாள். ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைவிட என் வீட்டில் நல்ல உணவைச் சாப்பிடுகிறேன்.

கே: உங்கள் உடல் நலம் இப்போது எப்படி உள்ளது?

ப: என் வாழ்க்கையில் எப்போதுமே மருத்துவமனையில் நான் அட்மிற் ஆனது கிடையாது. அது ஒரு பெரிய சாதனை. ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்து கொள்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் ஒரு முறை "சைனஸ்" கோளாறு ஏற்பட்டது. அப்போது நான் அயல் நாட்டில் இருந்தேன். இந்திய டாக்டர் உட்பட ஒரு மருத்துவர் குழாமே என்னை பரிசோதனை செய்தது. என் உடலில் அந்தக் கோளாறு இந்தக் கோளாறு என்று பல குறைகளைச் சொன்னார்கள். அவர்கள் தமது சோதனையை எல்லாம் முடித்துக் கொண்ட பிறகு "எனக்கு இந்த வயதிலும் ஆண்மையில் குறை ஏதும் இல்லையே அது எப்படி" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டேன்.

கே:நீங்கள் ஏதாவது சில பழக்கங்களுக்கு ஆளாகி இருக்கிறீர்களா?

ப: இரவு உணவுக்கு முன்னர் மூன்று கிளாஸ் "ஸ்காட்ச்" சாப்பிடுவது கட்டாயமான ஒன்று. இது 50 வருடப் பழக்கம். குறைந்தது வாரத்தில் 4 விருந்துகளில் என்றாலும் கலந்துகொள்வேன். அழகான பெண்களையும், அவர்களைத் தொடுவதும் எனக்குப் பிடிக்கும். என்னை 'மாபெரும் முத்தமிடுபவன்' என்று பெண்கள் சொல்வதுண்டு.

கே:உங்களது குடும்பத்தினர் நீண்ட நாள் வாழ்ந்தவர்களா?

ப: என் தந்தை சர்சோப சிங் 90 வயதில் இறந்தார். இறக்கும் போது கையில் ஒரு கிளாஸ் விஸ்கி வைத்திருந்தார். என் தாயார் 94 வயதில் இறந்தார்.

இனி குஸ்வந்சிங்கின் ஜோக்ஸ் ஒன்று+ஒன்று.

அயர்லாந்து புரட்சிக்காரர்கள் இரண்டுபேர் ஒரு இடத்தில் குண்டு வைப்பதற்காக காரில் சென்று கொண்டிருந்தார்கள்.

அது ரைம் பொம். குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடியது.

மடியில் அந்தக் குண்டை வைத்திருந்தவன் "மெதுவாகப் போ குண்டு எந்த நேரமும் வெடித்துவிடக்கூடும்" என்றான்.

வண்டியை ஓட்டியவன் சொன்னான் "அதைப்பற்றிக் கவலைப்படாதே டிக்கியில் இன்னொரு குண்டு இருக்கிறது"

முதல் உலகப் போரில் பங்கு கொண்ட வீரனை இளம் பெண்ணொருத்தி 'நீ ஜெர்மானியனைக் கொன்றாயா?' என்று கேட்டார். அவன் ஆம் என்பதற்கிணங்க தலையை அசைத்தான்.

'எந்தக் கையினால் கொன்றாய்'?

'இந்த வலது கையினால்.' அவள் அந்தக் கையை எடுத்து முத்தமிட்டாள்.

இதைக் கவனித்த ஒரு அதிகாரி சொன்னார்- "கடித்தே கொன்றேன்"

என்று சொல்லியிருக்கக் கூடாது'!

தூரத்து நாகரிகம்

# பசியோடு சிறைவாழும் சிங்கம் இரும்புக்கூண்டு தேடிச் செல்லும் இரைகள்



ஒரு சிங்கத்தைப் பிடித்து சிறையில் பூட்டினார்கள்.

அந்தச் சிங்கமோ பசியோடிருக்கிறது. பசியாறத் தேவையானவற்றைப் புசித்தும் கொண்டிருக்கிறது.

அதன் பெயர் மைக் டைசன். அதிபாரக் குத்துச் சண்டை சாம்பியனாக, பல லட்சம் ரசிகர்களால் விரும்பப்படுபவராக வெளுத்து வாங்கியவரை இழுத்து உள்ளே போட்டு விட்டார்கள்.

மைக் டைசனின் மாபெரும் பலவீனம் பெண். கண்ணை மறைக்கும் பெண்ணாசை பேராசையாகி டைசனை சிறைவாசியாக்கி விட்டது.

சிறைக்குள் இருந்தால் தான் என்ன?

குத்துச் சண்டைப் பந்தயங்களில் வென்று வாரித்திரட்டிய பணம் இருக்கிறது.

பணம் பத்தும் செய்யும். உண்மைதான்! டைசனின் காமப்பித்துக்கும் பணம் உதவுகிறது.

சிறை அதிகாரிகளையும், காவலர்களையும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து டைசன் வளைத்துப் போட்டிருக்கிறார்.

தனது தேவைகளுக்கு எடுக்க வேண்டியவற்றை உள்ளேயே எடுத்துக் கொள்ளுகிறார்.

கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் என்பி.சி. தொலைக்காட்சி மைக் டைசன் என்னும் அந்த மாமிசமலையின் வீழ்ச்சிபற்றிய கதையை ஒளிபரப்பியது. 'இது வரை வெளிவராத கதை' என்று அதற்குப் பெயர் கொடுத்திருந்தது.

டைசனின் அந்தரங்கமான பக்கங்கள் தொலைக்காட்சியில் அம்பலமாயின.

டைசன் இப்போது இண்டியானா இளைஞர் மையத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளார். கறுப்பழகி டிசிறி வொஷிங்டன் மீது பலாத்காரம் புரிந்ததே அவர் செய்த குற்றம்.

ஏனைய கைதிகளுக்கு கிடைக்காத வசதிகள் மைக் டைசனுக்கு வழங்கப்படுகின்றன.

சிறைக்காவலர்கள் வெகு மரியாதையோடு 'மிஸ்டர் டைசன்' என்றே அழைக்கின்றனர்.

சிறைவிதிகள் யாவும் டைசன் விடயத்தில் கண்களை மூடிக்கொள்ளுகின்றன.

ஒரு சிறைக்காவலர் வெளியிட்டுள்ள தகவல்கள் அதிரவைக்கின்றன.

ஏனைய கைதிகளைப் பார்வையிட வரும் பார்வையாளர்கள் கைதிகளுக்கு நெருக்கமாகச் செல்லமுடியாது. மூன்று அடிக்கு அப்பால்தான் இருக்க வேண்டும். அதுதான் சிறை விதி.

ஆனால் மைக் டைசன் விசயத்தில் சிறைவிதி தன் கடமையைச் செய்வதில்லை.

மைக் டைசனை சந்திப்பதற்காக வருகின்ற பெண் பார்வையாளர்கள் ஏனைய பார்வையாளர்களிடமிருந்து தனியே அழைத்துச் செல்லப்படுகின்றனர். சிறைக்குள் இருக்கும் பெரிய பிரத்தியோக மாநாட்டு மண்டபத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டு பெரிய இருக்கைகளில் அமர வைக்கப்படுவர்.

பின்னர் மைக் டைசனை அந்த இடத்திற்கு சிறைக் காவலர்கள் அழைத்து வருவார்கள்.

டைசன் வந்ததும் மண்டபத்தின் கதவுகள் சாத்தப்படும். காவலர்கள் வெளியே நிற்பார்கள்.

இதுவரை பத்துப் பெண்கள் டைசனை பார்வையிடச் சென்றுள்ளனர். அவர்களை டைசன் தனியே பார்வையிட காவலர்கள் வசதி செய்து கொடுத்தனர். டைசனின் பசிக்கு அவரிடம் பணம் வாங்கும் காவலர்கள் தீனிதேடிக் கொடுக்கிறார்கள். அவர் பசியாறும் வரை காவலும் இருக்கிறார்கள். இவ்வாறு அந்தச் சிறைக்காவலர் உள் ரகசியங்களை உடைத்துப் போட்டிருக்கிறார்.

டைசனின் உடமைகள் சோதனையிடப்படுவதில்லை. ஏனைய கைதிகளின் அறைகளின் உள்ளே அடிக்கடி சோதனைகள் நடப்பதுண்டு.

சிறையின் உள்ளே இருக்கும் உடற்பயிற்சிக் கூடத்தில் டைசன் தன் பொழுதைக் கழிக்கிறார். இங்கு வைத்து போதை வஸ்துக்களையும் பாவிக்கிறார்.

ஒரு நாள் இரவு முழுவதும் மித மிஞ்சிய போதையில் இருந்த டைசன் மறுநாள் காலைதான் தன் சிறைக் கூடத்திற்கு சென்றுள்ளார்.

சிறையில் உள்ளவர்களுக்கு உள்ளிருந்து வெளியே பேச நாளொன்றுக்கு 30 நிமிடம் கொடுக்கப்படுகிறது. ஆனால் டைசன் வாரத்திற்கு நாற்பது மணிநேரம் தொலைபேசியில் பேசுகிறார்.

சிறையில் உள்ளவர்கள் தங்க நகைகள் அணிய முடியாது. அனுமதி இல்லை. ஆனால் டைசனுக்கு அனுமதி உண்டு. தன்னிடம் பணப் பற்றாக்குறை ஏற்படும் போது அதனை சிறை அதிகாரிகளிடம் அடமானம் வைத்து போதை வஸ்துக்களை வாங்கப் பயன்படுத்துகிறார்.

கைதிகள் அனைவரும் அதிகாலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும்

டைசன் காலை 9 மணிக்கு முன்னர் எழுந்திருப்பதே கிடையாது.

டைசன் தன்னை கற்பழித்தார். கறுப்பழகி வழக்குத் தொடர்ந்தாள். ஆனால் சிறையில் இருக்கும் டைசனுக்கு தினமும் தபால்கள் வந்து குவிகின்றன.

அத்தனையும் பெண்களின் காதல் கடிதங்கள். சில கடிதங்களுக்குள் நிர்வாணப் படங்களும் வைக்கப்பட்டிருக்கும். அந்தப் படங்களை டைசன் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்.

தன்னைச் சிறைக்கு அனுப்பிய கறுப்பழகி மீது டைசனுக்கு கெட்ட கோபம்.

"அவள் என்னை தொலைத்துக் கட்டி விடலாம் என்று நினைத்தாள். இதற்காக அவள் விரைவில் அனுபவிக்கப் போகிறாள்" என்று டைசன் கூண்டுக்குள் இருந்து உறுமிக் கொண்டிருக்கிறார்.

என்றாலும் கூண்டுக்குள் இருந்தும் தன் விருப்பங்களை நிறைவேற்றும் டைசன் பாதியளவான சுதந்திரப் பறவை.

விளையாட்டு வீரனுக்கு தேவை ஒழுக்கம். டைசனிடம் அது துளியளவும் இல்லை. அதனால் தன் வாழ்வின் ஒளிமிகுந்த பக்கங்களை சிறைக்குள் இருளாக்கிக் கொண்டார்.





# ஆவி பேசுமா? பேசுகிறதாம்! இளவரசி டயானா ஆவியோடு ஆலோசனை!!

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் சுடன் மனமுறிவு ஏற்படுவதற்கு முன்னரும்– பின்னரும் இளவரசி டயானா பெற்றிபால்கோ என்னும் ஆவியுலகத் தொடர்பாளரின் உதவியை நாடினார். அவரை இரகசியமாகச் சந்தித்து தனது தந்தையின் ஆவியோடு பேசி வருகிறாராம்.

டயானாவின் தந்தை ஏள்ஸ் பென்சர் கடந்த வருடம் இறந்து போனார். இறக்கும் போது வயது 68.

தந்தையார் இருக்கும் போது டயானாவின் இக்கட்டான நேரங்களில் ஆலோசனை கூறிவந்தார்.

தந்தையார் தன் கூட இல்லையே என்று கவலை கொண்ட டயானாவுக்கு தந்தையின் ஆவி ஆலோசனை சொல்லி வழிநடத்துகிறதாம்.

"உனது மகன் வில்லியம்மை நீ மிகவும் கவனமாகப் பார்க்க வேண்டும். அவனது உயிருக்கு ஆபத்து நேரலாம்" என்று தந்தையின் ஆவி எச்சரித்துள்ளது.

இளவரசி டயானாவுக்கு பத்து வயதான மகன் வில்லியம் மீது பாசம் அதிகம். அவனுக்கு ஆபத்து நேரும் என்று ஆவி கூறியதும் டயானா கண்ணீர்விட்டு அழுதாராம்.

தனது தந்தையின் ஆவியோடு பேச வேண்டும் போல் எண்ணம் ஏற்பட்டதும் டயானா நகரில் உள்ள தன் தோழியின் வீட்டுக்குச் சென்று விடுவார். எவரும் தன்னை அடையாளம் காணாமல் தடுப்பதற்காக அலங்காரத்தை மாற்றிக் கொள்கிறார். பின்னர் ஆவியுலகத் தொடர்பாளரின் இல்லத்திற்குச் செல்கிறார்.

ஆவி வில்லியம் பற்றி மட்டுமல்ல வேறு விசயங்களையும் கூறியிருக்கிறதாம்.

டயானா ஒரு போதும் ராணி என்ற அந்தஸ்த்தை அடையப் போவதில்லை.

டயானா தன்னைப் பரிபூரணமாக காதலிக்கும் ஒருவரை மறுமணம் செய்து கொள்வார். அதன் மூலமாக 1996இல் டயானாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும்.

என்று கணிப்புச் சொல்லியுள்ள ஆவி "மகளே உன் இளமைக் காலத்தில் என்னோடு கை கோர்த்துக் கொண்டு வருவாயே அது போல என் கைகளைப் பிடித்துக் கொள்" என்று கூற–

விம்மியபடி டயானாவும் தனது கைகளை மேலே உயர்த்திப் பிடித்தார்.

டயானாவின் ஆவியுலகத் தொடர்பாளர் பெற்றி– தன்னால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் ஆவியுலகத் தொடர்புகள் பற்றி விபரித்துள்ளார்.

"சினிமாப் படங்களில் காட்டப் படுவது போல நான் எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்வதில்லை. அன்புக்கு பாத்திரமான இருவர் மத்தியில் நாஹன் ஒரு இடைத்தரகுக் கருவியாக மட்டுமே செயல்படுகிறேன்" என்கிறார்.

டயானாவின் தந்தையின் ஆவி டயானா தீயினால் அபாயத்தைச் சந்திப்பார் என்று எச்சரித்ததாம். அந்த எச்சரிக்கைக்குப் பின்னர் வின்சர் மாளிகையில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. மீண்டும் எப்போது அடுத்த தீ விபத்து நடக்குமோ என்று டயானா ஏங்கிக்கொண்டிருக்கிறார். ●

**தூரத்து நாகரிகம்**

---

## வேகப் பந்து வீச்சாளர்களை உற்பத்தி செய்யும் விளையாட்டு வீரர்



மெக்கன்ஸி

எம்.ஆர்.பேஸ் பவுண்டேசன் என்னும் அமைப்பு இந்தியாவில் இருக்கிறது.

அதிவேகப் பந்து வீச்சாளர்கள் இந்திய அணியில் இல்லை என்ற குறையைப் போக்கவே அந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்த அமைப்பிற்கு சிறப்பு பயிற்சியாளர் முன்னாள் அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் டென்னிஸ் லில்லி.

அவர் சென்னைக்கு வரும் போது சிறந்த துடுப்பாட்டக்காரர் ஒருவரை கையோடு அழைத்து வருவார்.

தற்போது வேகப்பந்து வீச்சாளர் ஒருவரை இந்தியாவுக்கு அழைத்து வந்துள்ளார்.

டெஸ்ட் உலகில் தனக்கு வழிகாட்டியாக இருந்த கிரஹாம் மெக்கன்ஸியைத்தான் இம்முறை லில்லி அழைத்து வந்துள்ளார்.

கிரஹாம் மெக்கன்ஸி அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிவேகப் பந்து வீச்சாளர். (வேகம் 140 கி.மீ) உலக கிரிக்கெட் அரங்கில் ஒரு கலக்குக் கலக்கியவர்.

அவர் இந்தியாவிலும் தனது கைவரிசையைக் காட்டியவர். 35 டெஸ்ட் விக்கெட்டுக்களை இந்திய மண்ணில் வீழ்த்தியவர்.

இப்போது அதே இந்தியாவில் வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்க தனது அனுபவங்களை கற்றுக் கொடுக்க ஆர்வம் காட்டுகிறார்.

இந்திய கிரிக்கெட் அணி பற்றி மெக்கன்ஸி குறிப்பிடும் போது "உலகக் கோப்பைப் போட்டிக்கு பின்னர் இந்திய அணி பந்துவீச்சு, துடுப் பாட்டம் என்று சகல துறைகளிலும் முன்னேறியுள்ளது" என்கிறார்.

"இந்தியா தனது பாரம்பரியம் மிக்க சுழல்பந்து வீச்சில் நீண்ட காலம் கவனம் செலுத்தி வருகிறது" என்றும் மெக்கன்ஸி கூறியிருக்கிறார்.

நியூசிலாந்துவீரர் ரிச்சட் ஹேட்லி, இந்திய வீரர் கபில் தேவ் இருவரையும் அவர் ஒப்பிட்டுக் கூறும் போது–

ஹேட்லி எந்த சூழ்நிலையிலும் சிறந்த முறையில் பந்து வீசுவதில் வல்லவர். கபில்தேவ் கஷ்டமான பல சூழ்நிலைகளில் தோள் கொடுத்து இந்திய அணியைக் காத்தவர். இந்திய கிரிக்கெட்டிற்கு அவரது பங்கு மிக முக்கியமானது. இன்றைய கிரிக்கெட் உலகில் சகல துறை வல்லவர் அவர்தான் என்று மெக்கன்ஸி புகழ்ந்துள்ளார்.

சென்னையில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருக்கும் மெக்கன்ஸி விரும்பி அழைத்து சுவைக்கும் சாப்பாடு இட்லி, தோசை. ■

---

## பெண்களைக் கவரும் டென்னிஸ்

டென்னிஸ் விளையாட்டுக்கு ரசிகர்கள் அதிகமாகி வருகிறார்கள். அதிலும் பெண்கள் கூடுதலாகவே டென்னிஸ் மீது நாட்டம் கொண்டுள்ளனர்.

டென்னிஸ் போட்டிகளில் பார்வையாளர் வரிசை பாவையர்களால் நிரம்புகிறது.

பெரும்பாலான பெண்கள், ஆண்கள் ஒற்றையர் பந்தயங்களைக் காணவே விரும்புகிறார்கள்.

அலங்காரமாக ஆடும் அகாசி, ஆடும் போது அடிக்கடி கோபப்பட்டுக் கொள்ளும் மெக்கன்ரோ, அதிகம் வாய் திறக்காத எட்பேர்க், உணர்ச்சி வசப்பட்டுக் கொள்ளும் பெக்கர் ஆகியோரின் ஆட்டங்களை பெண் ரசிகைகள் பிரியத்தோடு ரசிக்கிறார்கள்.


பெண்களின் ஆட்டத்தை ஆண்களே விரும்பிப் பார்க்கிறார்கள். டென்னிஸ் உலகின் கவர்ச்சி கலந்த நாயகி ஸ்டெபி கிராப் களத்தில் இறங்க முன்னரே கதிரைகள் நிரம்பி விடுகின்றன. பொறுமையாக காத்திருக்கிறார்கள். ஸ்டெபிகிராப் டென்னிஸை நோக்கி ரசிகர்களை கவர்ந்திழுக்கிறார். இளமையோடு கூடிய நளினம் அவர்பால் எம்மை ஈர்க்கிறது என்கிறார்கள் டென்னிஸ் ரசிகர்கள்.


பணம்புரளும் விளையாட்டுக்களில் டென்னிசும் ஒன்றுதான்.

**ஸ்போர்ட்ஸ்**







## சாதிக்காய் கேக்

நல்ல வாசனையும் இனிமையும் உள்ள இந்த கேக் கொஞ்சம் பொற பொறப்புடன் மெல்லிய பல் நலம் எழ சுவைப்பதற்கு ஏற்றது.

தேவையானவை

2 கோப்பை வெல்லம் அல்லது சர்க்கரை
2 கோப்பை மா
125 கிராம் வெண்ணெய் அல்லது மார்ஜரின்
1 தேக்கரண்டி பைகாபனேற் சோடா
1 கோப்பை பால்
1 முட்டை
(தேக்கரண்டி சாதிக்காய்த்தூளாகத் தூளாக [illegible])
1½ கோப்பை வாதுமைப்பருப்பு (வாதாம் பருப்பு) சிறுசிறு துண்டுகளாக.

செய்முறை

வெல்லம் அல்லது சர்க்கரையை பாணிப்பாகாக்கி அதில் மாவைச் சேர்த்துக் கலந்து கொள்ளவும். அதில் வெண்ணெய் அல்லது மார்ஜரினைக் கலந்து நல்ல கூழ் பதமாகும் வரை வேகமாக கலவுங்கள். 20 சென்டிமீட்டர் அளவு கொண்ட சதுரமான வெண்ணெய் தடவிய பாத்திரத்துள் கரைசலின் அரைவாசியை ஊற்றுங்கள். பாலில் சோடாவைக் கலந்து நன்றாக அடித்துக் கலக்கிய முட்டையும் சாதிக்காய்த்தூளையும் பாலுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். எஞ்சியுள்ள சர்க்கரை மா கரைசலுடன் இதனைச் சேருங்கள். நன்றாக இவற்றை ஒன்று சேரக் கலக்குங்கள். ஏற்கனவே பாத்திரத்தில் ஊற்றிய மாக்கரைசலுக்கு மேல் மிகுதியான கலவையை ஊற்றுங்கள்.

வாதாம் பருப்புத் துண்டுகளை மேலே தூவுங்கள். 180 செல்சியஸ் சூடான போரணையில் ஒரு மணி நேரம் வைத்து எடுத்து பின்னர் 15 நிமிடம் பொறுத்து வேறோர் தட்டில் ஆறவிடவும். வேண்டிய நேரம் பரிமாறலாம்.




கிளின்டனின் பொம்மைக்கு ஒப்பனை நடக்கிறது!

## செல்வாக்கும் போனது பொம்மையும் போனது

ஆமைக்கு தண்ணீரில் இருக்கும் வரைதான் மரியாதை. பதவிகளில் இருப்பவர்களுக்கும் அதுதான் கதை.

உலகப்பிரசித்தி பெற்றவர்களின் மெழுகு பொம்மைகள் அமெரிக்காவில் உள்ள மாடம் துஸாட்ஸ் என்னும் காட்சிச் சாலையில் வைக்கப்படுவதுண்டு.

அங்கும் பழையன கழிதலும் புதிய புகுதலும் நடைபெறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக கிளின்டன் தெரிவு செய்யப்பட்டவுடன் பில் கிளின்டன் போன்ற தத்ரூபமான மெழுகுப் பொம்மை தயாரிக்கப்பட்டது. அந்த இடத்தில் இருந்த முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் மெழுகுப் பொம்மை உருவம் கொல்லைப் புறத்திற்கு தூக்கிச் செல்லப்பட்டது. செல்வாக்குப் போய் விட்டால் அரசியல் வாதிகள் செல்லாக்காசுகள்தானோ?!

[illegible] வண்ணமாகப் பூத்துக் குலுங்கும் ரோஜாச் செடிகள் உங்கள் வீட்டுத் தோட்டத்திலிருக்கின்றனவா? அவற்றைச் சீராக வளர்க்க சுலபமான வழிகள்:

ரோஜாச் செடி சீராக செழிப்பாக வளர வேண்டும் என்பதற்காக மரம் முழுவதற்குமே நீர் சொரியலாகாது. அவற்றின் இலைகளின் அதிகம் தண்ணீர் படலாகாது. பனி, மழை அதிகமாகவிழும் இடங்களில் இலைகளில் தண்ணீர் ஊற்றாமல் மரத்தின் அடிமண்ணை மட்டும் நனைத்தால் போதும். மழை மற்றும் பனி இல்லாத காலங்களில் இலைகளில் படிந்துள்ள புழுதி மற்றும் வேண்டப்படாதவற்றை அகற்ற ஒரு சிறு குழாய் மூலம் தண்ணீரைப் பீய்ச்சலாம். அதுவும் காலையிலேயே இதனைச் செய்துவிட வேண்டும். இரவு நேரங்களில் ரோஜா இலைகளில் நீர்ப்பிடிப்பு இருக்குமானால் பூஞ்சணம் பிடித்து இலைகள் உதிர்ந்து போய்விடும். நீரை குழாய் மூலம் பாய்ச்சுவதனால் சாறு உறிஞ்சிகள் அழிந்து விடும். இரவானதும் சாறு உறிஞ்சிப்பேன்களை ஒருவகை சிறு வண்டுகள் உண்டு ரோஜாச் செடிக்கு இயற்கை பாதுகாப்பு வழங்குகின்றன.

ரோஜாச் செடிகளை புனர்நடுகை செய்ய குளிர்காலமே நல்லது.




நமது நாட்டின் மலையகத்தில் வாழும் மக்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் பியேர்ஸ் மரக்கன்றுகளை நட்டிருப்பார்கள். [illegible] "பியேர்ஸ் [illegible]" என்று பெயரெடுத்தது பியேர்ஸ்.

பியேர்ஸ் எப்போதும் பச்சை வர்ணமாகவே இருப்பதால் அது பிஞ்சா காயா அல்லது உண்ணுவதற்கேற்ற பழமா என்பதைக் [illegible] மரத்திலிருந்து பிடுங்கப்பட்ட பின்னரே அது பழுக்கிறது. எனினும் அவற்றைப் பிடுங்குவது எப்போது என்பதில் சிக்கலுண்டு.

அவ்வப்போது மரத்திலிருந்து ஒவ்வொரு காயைப் பிடுங்கி வெட்டிப்பார்க்கலாம். இதன் விதைகள் சாதாரணமாக [illegible] வேண்டும். இவை [illegible]

[illegible]

இவற்றைப் பாதுகாப்பதும் சுலபம். முற்றிய காய்களை ஒவ்வொன்றாக கடதாசியால் சுற்றி குளிரான இருட்டுப் பகுதியில் [illegible] ஒவ்வொன்றாக ஒரு கதிரையில் அடுக்கி வைக்கலாம். [illegible] புதிய பழங்களாகவே இருக்கும்.

[illegible]







இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூலை மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.